பாலகுமாரன்



# பூசமஞ்சள்



# நீஞ்சல்

"கடவுளே கடவுளே என்ன அழகு என்ன அழகு"

கற்பகவல்லி வாய் நிறைய கூவினாள்.

அவள் நின்ற இடத்தை நோக்கி சிவசாமி வேகமாக போனான். அவள் காட்டிய இடத்தைப் பார்த்தான்.

இரண்டு முழம் உயரத்தில் பஞ்ச லோகத்தில் ஒரு நடராஜர் சிலை கம்பிகளுக்கு அப்பால் குத்துவிளக்கு ஒளியின் ஊடே மின்னி கொண்

## பாலகுமாரன்

டிருந்தது. நடராஜனுக்கு அருகில் சிவகாமியின் சிலை அமைதியாய் நின்று கொண்டிருந்தது. இரண்டு பஞ்சலோக சிலைகளும் குறைந்த உடுப்புகளோடும் நிறைந்த புன்னகையோடும் அமைதியாய் காட்சியளித்தன.

''ஏங்க எத்தனை வருஷம் ஆகியிருக்கும் இந்த பொம்மை பண்ணி'' கம்பிகளை இறுக்கி பிடித்துக் கொண்டு சிலைகளை பார்த்து கற்பகவல்லி கேட்டாள்.

''ஆயிரம் வருஷத்திற்கு மேல நிச்சயம் இருக்கும். அதுக்கு முன்னால் இருந்தாலும் ஆச்சர்யப்படறதுக்கு இல்லை. அந்த சுத்தியிருக்கிற திருவாசிலயப் பார். அபிஷேகம் பண்ணி பண்ணி மொழு மொழுன்னு ஆயிடுச்சு. கண்ணும் மூக்கும் கூட ஒரு வழுவழுப்புல இருக்குது பார் என்று சிவசாமி சுட்டி காட்டினான். அபிஷேகத்தால் ஏற்பட்ட வழுவழுப்பா, இல்லை சிற்பியே உளியால் அந்த வழவழப்பை ஏற்றினானா. இப்படி உதடும், மூக்கும், நீளப்புருவமும், காதும், காது ஓலையும், பெரிய சடையும், அகன்ற மார்பும், குறுகிய இடையும், வட்டமான திருமுகமும், வாழைத் தொடைகளும், உருளையான முழங்கால்களும், வளைவான ஆடுதசைகளும், சீரான பாதங்களும், பாதங்களின் நகங்களும், நகங்களின் இடுக்குகளும், பின்னால் விரிசடையும் ஒவ்வொரு சடையின் முனையில் உருண்டு சடை திரண்டு நிற்பதும்; இடுப்பிலும், நெஞ்சிலும் பாம்புகள் ஊருகின்ற விதமும் எல்லாவற்றையும் விட ஆடி ஜெயித்த ஒரு குறும்பு சிரிப்பும் சிலையில் தெளிவாகத் தெரிந்தன.

''கைகாலை விட எனக்கு முகம்தான் ரொம்ப அற்புதமா தெரியுது கற்பகவல்லி. அவர் சிரிக்கிறது பார்த்தியா? போட்டிக்கு வான்னு கூப்புட்டு, அந்த அம்மாவ ஆடவிட்டு அந்த அம்மா ஆடமுடியாம சட்டுன்னு நின்னபிறகு, தான் இன்னும் கூடுதலாக ஆடி, வேகமாக ஆடி, அந்த வேகமா ஆடுற சந்தோஷத்தத்தான் இப்பவும் மெல்லிசா மொகத்தில் காட்டிட்டுருக்கார்னு தோணுது. இந்த சிரிப்புதான் ரொம்ப அழகு. கடவுள்தான் இப்படி அமைதியாகவும், அமைதி கலந்த கர்வமாவும் சிரிக்க முடியும்.''

சிவசாமி கதவுக் கம்பிகளை பிடித்துக் கொண்டு சிலைகளை உற்றுப் பார்த்துக் கொண்டே சொன்னான். கற்பகவல்லி எதை உற்றுப் பாராட்டுகிறாளோ அதைக் கூர்ந்து கவனித்து அதை சரியான விதமாய் அவளுக்கு

எடுத்துச் சொல்வது அவனுக்குப் பிடித்தமான விஷயமாக இருந்தது.

''இது கடவுளுடைய சிரிப்பா? மனுஷாளுடைய சிரிப்பா? எனக்குப் புரியலையே கற்பகவல்லி.''

''கடவுள் சிரிப்புனு டப்புனு சொல்லிட்டீங்களே. ஒரு மனுஷன் இப்படி சிரிக்கிறதை மனசுக்குள்ள பார்த்து, அதை இன்னொரு மனுஷாள் படமா எழுதி, அதை இன்னொரு மனுஷாள் பொம்மையா பண்ணி, அதை இன்னொரு மனுஷாள் சிலையா வடிச்சு, ஒருத்தனா செஞ்சிருக்க முடியாது இந்த சிலையை. ஒரு குடும்பமே இதில் இறங்கியிருக்கும். இந்த சிலை செஞ்சி, மெருகேத்தி, கண்ணைத் திறந்து ராஜா பாக்கறதுக்காக ஒரு மேடையில் உக்கார வெச்சு, ஒரு சாமந்திப் பூ மாலை போட்டு, ஒரு கற்பூர ஆரத்தி காட்டி, ராஜா 'ஹா'ன்னு நிக்கறபோது அந்த குடும்பத்திலிருக்கிற அத்தனை பேரு மூஞ்சியிலும், நீங்க சொன்னீங்களே அலட்சியமான ஒரு அமைதி, கர்வமான ஒரு அமைதி நிச்சயமா எல்லார் முகத்துக்கும் வந்திருக்கும்.

''என்ன ராஜா அசந்துட்டியா. நாங்க நினைச்சா இதை விட டபுள் மடங்கு பெரிய சிலை சந்தோஷமா ரொம்ப சர்வசாதாரணமா செஞ்சிடுவோம்'' என்று குழந்தையிலிருந்து பெரிய கிழவன் வரை இவர்கள் மெல்ல சிரிக்க,

ராஜா ஓடி வந்து குடும்பத் தலைவரின் கைகளை ஒற்றிக்கொண்டு ''இந்த கையிலா... இந்த கையிலா சிலையைச் செய்தாய்'' என்று இறுகப்பற்றிக் கொண்டு விட்டிருப்பான். அவருடைய மனைவி, மற்ற உறவினர்கள், பெண்கள், பிள்ளைகள் எல்லோரும் அமைதியாக கர்வத்தோடு ராஜாவை பார்த்து சிரித்திருக்க வேண்டும். தன் குடும்பத் தலைவரைப் பார்த்து சந்தோஷப்பட்டிருக்க வேண்டும். இது கடவுள் சிரிப்பில்லை. இதுவொரு மனித சிரிப்பு. ஜெயித்தவன் சிரிப்பு. நியாயமாக ஜெயித்தவன் சிரிப்பு. கஷ்டப்பட்டு போராடி ஒவ்வொரு அங்குலமும் தேர்வு செய்து மிகுந்த கவனத்தோடு இருந்து அந்த விஷயத்தை நிறைவாக முடித்து, பிறகு பணிவாக சிரிக்கிறது. 'எல்லோருக்கும் வணக்கம்' என்ற சிரிப்பு. இது ஒரு சிற்பியின் சிரிப்பு என்றுதான் எனக்குத் தோன்றுகிறது. கலைஞனின் சிரிப்பு என்றுகூட வைத்துக்கொள்ளலாம். அவள் இன்னும் நகர்ந்து முகத்தை அழிக்கம்பிக்குள் அழுத்தி வைத்துக்கொண்டு நடராஜரை உற்றுப் பார்த்தாள்.

கதவைத் திறந்து அருகில் நிற்கச் சொல்லி கற்பூர ஆரத்தி காட்டி இன்னும் தெளிவாய் பார்க்க வேண்டுமென்று ஆசைப்பட்டாள்.

''வாங்கோ'' பின்னால் குரல் கேட்டது.

''அந்த திருவெண்காடு சிவன்கோவிலில் குருமூர்த்தி குருக்களாக இருக்கிறார். குருமூர்த்திக்கு நாற்பது வயதிருக்கும். சிவாவின் அப்பாவுக்கு நண்பர். அவனுடைய படிக்கும் வயதில் சிவாவின் அப்பா பலமுறை அவனுக்கு உதவி செய்திருக்கிறார். பக்கபலமாக திகழ்ந்திருக்கிறார். குருமூர்த்தியின் தகப்பனாரின் மேல் உள்ள மரியாதையால் சிவாவின் அப்பா குருமூர்த்தி நிறைய உதவிகள் செய்ய, குருமூர்த்தி சிவாவுக்கு நல்ல தோழனாய் விளங்கினான். அவனுக்கு பலவிதங்களில் உதவி செய்தான். சென்னைக்குப் போய் சிவா ஒரு நல்ல வேலையில் அமர்ந்திருக்க, குருமூர்த்திதான் காரணம். ஒரு கோவில் குருக்கள் மட்டும் பழகுற விதத்தில் பழகி பேசற விதத்தில் பேசினாய். அவனைவிட சமய சந்தர்ப்பம் நன்னா வாய்ச்ச மனுசா வேற யாரும் கிடையாது. அவனவிட ஜனங்களத் தெரிஞ்ச மனுசா வேற யாரும் கிடையாது.

''மெட்ராஸ்ல என்ன வேணும் என்கிட்ட சொல். பத்துநாள் பத்துபேரை சாதம் போடச் சொல்லட்டுமா? என்னால முடியும். நான் சொன்னேன்கிற ஒரே காரணத்துக்காக உனக்கு மூணுவேளை சோறு போடுவா. குருமூர்த்திக்கு அத்தனை செல்வாக்கு தமிழ்நாடு முழுவதும் இருந்தது. அந்த செல்வாக்குக்கு குருமூர்த்தியின் பேச்சு சாமார்த்தியமும், நேர்மையும் காரணம்.

''என்னுடைய நட்சத்திரம் மிருகசீரிஷம். மாசா மாசாம் அர்ச்சனை பண்ணலாமா'' என்று யாரும் சொன்னால் ஒரு தொகை சொல்லி வாங்கி வைத்துக்கொள்வான். எங்கிருந்தாலும் ஒரு தொலைபேசி மூலம் குருமூர்த்தி அவர்களை விடியற்காலையில் தொடர்பு கொள்வான்.

''திருவெண்காட்டிலிருந்து குருமூர்த்தி பேசறேன். இன்னைக்கு பத்துமணிக்கு உங்க பேர்ல ஒரு அர்ச்சனை பண்றேன். ஒரு நிமிஷம் கண்ணை மூடிக்கொண்டு உக்காந்துண்டிருங்கோ. சாமி தெரிவார்'' என்று ஞாபகப் படுத்துவார். சரியாக பத்துமணிக்கு சகல உபகரணங்களுடன் நின்று நிதானமாய் மிக ஸ்பஷ்டமாய் மந்திரங்கள் சொல்லி காசு கொடுத்தவர்களும், திருவெண்காட்டுக்கு

வந்து தரிசித்தவருமான, அவருடைய உடல் பிணிகளை நீக்கி உற்சாகம் கொடுத்து வாழ்க்கையில் உயர்வான இடத்திற்கு சுவேதாரண்யரே கொண்டு வருவாயாக.'' என்று மனமுருக பிரார்த்திருப்பார். அன்று மாலையே பிரசாதத்தில் பூச்சுற்றி அனுப்புவார்.

தொலைபேசியில் நினைவூட்டிய மறுநாளே விபூதி, குங்குமப் பிரசாதங்கள் தபாலில் வந்தது சம்பந்தபட்டவர்களை மிகவும் சந்தோஷப்படுத்திவிடும். அவர்களுடைய நல்ல விஷயங்கள் நிறைவேற சுவேதாரண்யர் காரணம் குருமூர்த்தி காரணம் என்று நினைப்பு கிளர்ந்தெழுந்துவிடும்.

எனக்கு மட்டுமே ஏன் பண்ணனும். என்னுடைய மனைவிக்கு, மகனுக்கு, மகளுக்கு மூணு பேருக்கும் காசு அனுப்பியிருக்கிறேன். இன்ன, இன்ன நட்சத்திரம்னு பெயர் போட்டிருக்கிறேன். தயவுசெய்து அவர்களுக்கும் அவர்கள் நட்சத்திரத்தில் அர்ச்சனை செய்து அனுப்புமாறு மிக மிகத் தாழ்மையுடன் கேட்டுக்கொள்கிறேன். அடுத்தமாதமே கடிதம் வரும். குருமூர்த்தியிடம் கிட்டதட்ட இப்படி அறுநூறு விலாசங்கள் இருந்தன. அதில் ஆயிரம் ரூபாய் உபயதாரர்கள், ஐநூறு ரூபாய் உபயதாரர்கள், இருநூறு ரூபாய் உபயதாரர்கள் இருந்தார்கள். ஆனால் எல்லோரையும் ஒரேவிதமாய் குருமூர்த்தி நடத்துவார். கோவிலுக்கு வந்துவிட்டால் கையைப் பிடித்துக்கொண்டு அழைத்துச் செல்வார். தாழ்ந்த பிரம்மாண்டமான ஐந்து ஏக்கர் கோவில். நடந்து நடந்து கால்கள் வலித்து கெஞ்சும். ஆனால் குருமூர்த்தி அசரமாட்டார்.

தன்னிடம் அர்ச்சனை செய்கிறவர்கள் கோவிலுக்கு வந்தால் மிக ராஜமரியாதையுடன் அவர்களைக் கவனிப்பது குருமூர்த்தியின் வழக்கம். திருவெண்காடு பையன்களெல்லாம் நல்ல பள்ளிகூடத்தில் சேர வேண்டும் என்று மயிலாடுதுறை போய் படிப்பார்கள். குருமூர்த்திக்கு மயிலாடுதுறை எல்லையில் ஒரு சிறிய சிவன் கோவிலில் கட்டளை இருந்தது. மோட்டார் சைக்கிளில் அந்தப் பக்கம் போவது வழக்கமாக இருந்தது. அப்படி போகிறபோதெல்லாம் நின்று அவர் சிவசாமியை ஏற்றிக் கொண்டுதான் போவார். சிவசாமி வரவில்லையென்றால்தான் வேறு ஆட்களை ஏற்றிக்கொண்டு போவார்.

ஏனெனில், அந்த மோட்டார் சைக்கிள் வாங்க சிவசாமியின் அப்பாதான் காரணம். இன்னும் நாலாயிரம்

ரூபாய் கொடுத்தால்தான் மோட்டார் சைக்கிளை எடுக்க முடியும் என்கிறபோது எந்தவித கையெழுத்தும் இல்லாமல் வீட்டிற்குள் வந்து நோட்டுக்கட்டு கொண்டு வந்து பிரித்து எண்ணி நாலாயிரம் ரூபாய் அவன் கையில் கொடுத்து 'முதலில் போய் வண்டியை எடுத்து வா. உனக்கு வண்டி மிக அவசியம்' என்று வாய்நிறைய சொன்னார். வண்டி வந்த முகூர்த்தம் குருமூர்த்தியின் பலவேலைகள் எளிதாயின. நிறைய சம்பாதிக்க முடிந்தது. சந்தோஷமாக, நம்பிக்கையாக, வாழ்க்கையை நடத்த முடிந்தது. அதனால்தான் சிவசாமியின் அப்பாவிற்கு நன்றியைத் தெரிவிப்பதுபோல் சிவசாமிக்கு குருமூர்த்தி நன்றி தெரிவித்தார்.

ஒரு கிராமத்தில் தலைமுறை தலைமுறையாக வாழ்ந்தவர்கள் பின்னிபிணைந்திருப்பார்கள். இப்படி பின்னிபிணைந்திருப்பதற்கு அவர்கள் ஒரே ஜாதியாய், ஒரே சமூகத்தைச் சேர்ந்தவராய், ஒரே தொழில் உள்ளவராய் இருக்க வேண்டிய அவசியம். குருமூர்த்தியின் தாத்தா தொண்ணூறு வயதில் காலமானபோது ஊரே திரண்டு நின்றது. ஒரு பெரிய அரசியல் பிரமுகருக்கு இறுதிச்சடங்கு நடப்பதுபோல் நடந்தது. 'உங்க வீட்ல சங்கு ஊதறது வழக்கமில்லாதிருக்கலாம். எங்களுதில வழக்கம். நாங்க சங்கும் பறையும் கொண்டாந்து ஊதுவோம். இவரு எங்க அய்யரு. எங்க தலைவரு. இவர் துக்கத்தை நாங்க பறை அடிச்சு சொல்லித்தான் ஆகணும்.' ஊரில் ஒரு பகுதி மக்கள் தீர்மானமாய் சொல்லி, குருக்களின் வீட்டு வாசலில் காலையிலிருந்து பறை முழக்கம் செய்து எக்காளம் ஊதினார்கள். அவரின் இறுதி மரியாதையை மிக கம்பீரமாக நடத்தினார்கள். அய்யர் வீடு துக்கத்தில் ஆழ்ந்திருக்க, சிவசாமியின் அப்பாவும், மற்ற உறவினர்களும் இடதும் வலதும் ஓடி இறுதியாத்திரைக்கு வேண்டிய விஷயங்களை செம்மையாக செய்தார்கள்.

''நான் வெறும் எம்.ஏ. படிச்சிருக்கேன் குருமூர்த்தி. இந்த எம்.ஏ. படிப்புக்கு எங்கேயுமே வேலை கிடைக்காது. அதனால இங்கேயே கும்பகோணம் பஸ்ஸைப் பிடிச்சு, மெட்ராஸுக்கு அனுப்பி ஏஜெண்டா வேலை செய்யலாம். மெல்ல மெல்ல லாரி புரோக்கரா மாறலாம்னு நினைச்சிட்டிருக்கேன்.''

''டேய் போடா. உனக்காவது லாரி புரோக்கர் வேலை யாவது. அது பண்றதுக்கு ஆயிரம் பேர் இருக்கான்டா.

உனக்கு கம்பெனி வேலை கிடைக்கும். நீ மெட்ராஸ்ல போய் வேலை செய்யத்தான் போற'' என்று குருமூர்த்தி அடித்துச் சொன்னார்.

''தடால்னு பேசறே ஜோசியமா?''

'''என்னத்த ஜோசியம். இப்பத்தான் புதனுக்கு அலங்காரம் பண்ணி, அர்ச்சனை பண்ணி நேரா வர்றேன். சாமி தொட்ட கை. சாமியோட இருந்த மனசு நீ வெளியே வந்தவுடனேயே உன் பிரச்சனையை சொல்ற. டக்குன்னு உள்ளுக்குள்ள தோன்றது. உனக்கு மெட்ராஸ்ல வேலை கிடைக்கும். இன்னும் நாற்பத்திரண்டு நாள்.''

''ஒருவேளை வேலை கிடைக்கலைன்னா?'' சிவசாமி கேலியாக கேட்டான்.

குருமூர்த்தி கோபமாகத் திரும்பினார்.

''உனக்கு வேலை கிடைக்கலனு வெச்சுக்கோ, இந்த வேலையை நான் விட்டுறன்டா. வாசல்ல கப்பரையோடு உக்காந்துண்டு போறவா வரவா கிட்ட பிச்சைக் கேட்டு வயித்தை அலம்பிக்கிறேன் போறுமா?''

சிவசாமியின் அப்பா அரற்றினார். ''குருமூர்த்தி என்ன இது. நிதானமாய் எதையும் பேச முடியாதா? உன்னுடைய இடத்திலிருந்துகிட்டு வேகமா எதையும் பேசாதே குருமூர்த்தி. நீ சாமிக்கு பூஜை பண்றவன். எந்த நேரத்திலேயும் அளவோடு பேச நீ கத்துக்கணும். யார் கேலி பண்ணினாலும் பதிலுக்கு நீ கேலி பண்ணாதிருக்க நீ கத்துக்கணும். யார் கோபப்பட்டாலும் எகிறி பதிலுக்கு கோபப்படாதிருக்கிறதுக்கு உனக்குத் தெரியணும்.

குருமூர்த்தி சட்டென்று நின்றான். அமைதியானான். ''தப்பய்யாஇனிமே அதிர பேசவே மாட்டேன். இது சத்தியம்'' என்று உரத்து சொல்லிவிட்டு நகர்ந்து போனான்.

இந்த சம்பவம் நடந்து வெகு நாள் பொறுத்து ஊராரிடம் குருமூர்த்தி சொல்வது வழக்கம். ''எனக்கு குருன்னா சிவசாமியோட அப்பாதான். நாலே வார்த்தையில நா எப்படி இருக்கணும்னு தைக்கிற மாதிரி சொன்னார். வேற யார் யாரோ எனக்கு இத சொல்லியிருக்கா. ஆனா அவா சொன்னபோது உள்ளுக்குள்ள கல்லுபுரண்டு போச்சு. மனசு மாறி போச்சு. எனக்கு வாய் வார்த்தையாய் சொல்லாத குருமூர்த்திக்கு இந்த விஷயங்கள் நல்லபடியா வரணும்னு ஒரு ஆசிர்வாதத்தோட சொன்னாப்போல இருந்துச்சு. எம் மனசு மாறிப் போச்சு.

ஒரு மனுஷா எப்படி இருக்கணும்னு யாருவேணா வாய்வார்த்தையா சொல்லலாம். வாய் வார்த்தையா சொல்றபோதே உள்ளுக்குள்ள இந்த மனுஷா மாறனும்னு வேண்டுதலோடு யாராவது சொல்ல முடியுமா? அப்படி சொன்னா அவர் பேர் மகான். அவர் பேரு குரு.'' குருமூர்த்தி பேசிய பிறகு சிவசாமியின் அப்பாவை ஊர் மிக மரியாதையாக பார்த்தது.

இப்படி சிவசாமியின் வாழ்க்கையில் பின்னிபிணைந்து வந்து குருமூர்த்திதான் பின்னால் நின்று ''தோ வந்துட்டேன்'' என்ற குரலோடு வந்தான்.

இடுப்பில் வெள்ளை வேட்டி. மேலே சிவப்பு காவி போட்ட துண்டு. கையில் கொத்து சாவி. படியேறி கதவைத் திறந்தான்.

''இவதான் கற்பகவல்லியா? வாம்மா... உள்ளே வா'' ஆர்வத்தோடு கற்பகவல்லியை குருமூர்த்தி கூப்பிட்டான்.

''நான் உனக்கு அண்ணா மாதிரி. வேண்ணா கிட்ட வந்து சாமி தரிசனம் பண்ணு. என்னடா ஜாதி வேறயாச்சே அப்படின்னு பார்க்கறியா? நான் உங்க ஜாதியா இருந்தாலோ, சிவசாமி எங்க ஜாதியா இருந்தாலோ எனக்கு உடன்பிறந்தா இருந்தா நிச்சயமா அவளை சிவசாமிக்கு சந்தோஷமாய் கல்யாணம் பண்ணிக் கொடுப்பேன். ஆக சிவசாமிய யார் கல்யாணம் பண்ணிக்கிறாளோ, அவளுக்கெல்லாம் இந்த குருமூர்த்தி உடன்பிறந்தான் போறுமா புரியுதா...?''

தஞ்சாவூருக்கே உண்டான விவேகமான பேச்சைக் கேட்டு கற்பகவல்லி திகைத்தாள். இன்னும் என்னென்ன பேசுவான் என்றொரு வியப்போடு குருமூர்த்தியையே பார்த்துக் கொண்டிருந்தாள்.

''சிவசாமி''

''சொல்லு குருமூர்த்தி''

''நம்ம பக்கத்துப் பொண்ணுக மாதரியில்ல. சாதுவா அடக்கமா நல்ல அமைதியா ஒரு பொண்ண பிடிச்சுட்டே நானும் பார்த்துட்டேன். பட்டணத்துக்காரவா எல்லாம் பார்க்க டாம்பீகமா இருக்காளே தவிர, நம்முடைய சூட்சுமம் எல்லாம் அவாளுக்கு அவ்வளவு வேகமா வரதில்லை. நான் என்ன பேசறேன்னு உன்னுடைய உட்பிக்கு தெரியலை. திகைச்சு போய் நின்னுட்டிருக்கா.''

''இல்ல குருமூர்த்தி. ஆரம்பத்துல அப்படி தெகச்ச மாதிரி ஒரு ட்ராமா போட்றாக அவக. அப்புறம் கிட்டப் போய் பார்த்தாதான் ரொம்ப பெரிய கையா இருக்கிறது தெரியுது.''

''இருக்கலாம். அப்படியும் இருக்கலாம். நான் ஏமாந்திட்டிருக்கலாம்.''

சிவசாமி தட்டை எடுத்து கற்பூரத்தை ஏற்றி நடராஜருடைய பஞ்சலோக சிலைக்கு ஆரத்தி காட்டினான்.

''இந்த சிலை ரொம்ப அழகு. மகா அழகு இப்படி ஒரு சிலை தமிழ்நாட்டில் ஏன் எந்த இடத்திலும் இல்லை. இதைவிட உயரமாக சிலை இருக்கலாம். அகலமாக இருக்கலாம். ஆனா, இதைப்போல சர்வலட்சணமும் உள்ள சிலை எதுவும் இல்லை அப்படிங்கிறதுக்கு ஒரே ஒரு வாக்கியம் சாட்சியம்.

காஞ்சி சங்கர மடத்துல முன்ன பீடாதிபதியா இருந்த மகா பெரியவாள் சந்தரசேகர சரஸ்வதி இந்த இடத்துக்கு வந்தபோது, நாறபத்தைந்து நிமிஷம் இந்தண்ட அந்தண்ட நகராம ஸ்வாமியையே கைகூப்பி பார்த்துண்டிருந்தா, கீழே இறங்கி ''இவர் நடராஜருக்கெல்லாம் சக்கரவர்த்தி' அப்படின்னு ஒரு வார்த்தை சொல்லிட்டுப் போனார்.

இந்த சாமியைப் பார்த்துட்டு திருஞான சம்பந்தர்.

''கண்காட்டும் முதலானனும்,
கடற்காட்டும் கையானும்,
பெண்காட்டும் உருவானும்
பிறை காட்டும் சடையானும்
பண்காட்டும் சடையானும்
பயிர்காட்டும் புயலானும்
வெண்காட்டில் உறைவானும்
விடைகாட்டும் கொடியானே'' அப்படின்னு பாடியிருக்கார்.

இது ஆழ்வார் பாடிய க்ஷேத்திரம். பலபேரும் பாடிய க்ஷேத்திரம். இதில் ஒரு தனிப்பாடல் ரொம்ப அழகான தனிப்பாடல் இந்த ஊரப்பத்தி சொல்றது ஒண்ணு இருக்கு.

''ஊரெல்லாம் சிவலோகம்
மண்ணெல்லாம் சிவலிங்கம்
உயர்மரமெல்லாம் தெய்வதம்
ஊர்வன, பறப்பன, நடப்பன, கிடப்பனவும்.

பரினமாங் குளம்பின் நீரெல்லாம் சிவதீர்த்தம்

நிதியெல்லாம் சங்கநிதி, நெல்லெல்லாம் அன்னமயம்

நினைவெல்லாம் சிவசிந்தை, கனவெல்லாம் சிவபோகம்.

நித்திரையெல்லாம் சமாதி'' - அப்படின்னு இந்த ஊர் பத்தியும் பாட்டிருக்கு. இது ரொம்ப அற்புதமான இடம். கடவுளுடைய காலடிபட்ட இடம். கடவுளுடைய இருப்பு இருக்கிற இடம் என்பதாக இந்த ஊரைப் பற்றி சொல்லியிருக்கிறார்கள். இங்க நீங்க வந்தது ரொம்ப சந்தோஷம். வாங்கோ மத்த இடமெல்லாம் காண்பிக்கிறேன்'' - என்று குருமூர்த்தி அவர்களை அழைத்துக் கொண்டு போனான்.

குருமூர்த்தியோடு சிவசாமி நடக்க, சிவசாமி நோக்கி பின்னே கற்பகவல்லி நடக்க, கற்பகவல்லியின் தாய், தகப்பன் பின்னாலேயே நடந்து வந்தார்கள்.

''குருமூர்த்தி எப்படிறா இருக்கா கற்பகவல்லி.''

''சிவசாமி கூட்டிட்டு வந்திருக்க பொண்ணு குழந்தை மாதிரி. அற்புதமான குழந்தை. இந்த காலத்துல இப்படியெல்லாம் பொம்னாட்டி கிடைக்கிறது கஷ்டம்டா. தாலி கட்டி பொண்டாட்டியும் ஆக்கிட்ட, வச்சுக்கோ. உன்னத் தவிர அவாளுக்கு வேற உலகமே தெரியாது. அப்பேர்பட்ட குழந்த. அந்த மாதிரி, புருஷனைத் தவிர வேற உலகமே தெரியாத பெண்கள் குறைச்சலா இருக்கிற காலம்டா இது. எப்ப கல்யாணம்?''

''வர தை மாசத்துல.''

''இன்னும் நாலு மாசம் இருக்கா?''

''ஆமா. அவா கொஞ்சம் டைம் கேட்டுருக்கா. அதனால்தான் லேட்டாகுது.''

''கொடுக்கத்தாண்டா வேணும். கல்யாணம் ஈசியா?''

''இல்ல, அதுல வேற ஒரு பிரச்சனை. நாங்களா போய் இந்த பொண்ணை எனக்கு கல்யாணம் பண்ணிக் கொடுங்கன்னு கேட்டோம். அவங்க கல்யாணத்துக்கு நாங்க தயாரா இல்லையேன்னு சொன்னாங்க. இல்ல கல்யாணத்துக்குதானம்மா தயாரா இல்ல. ஆனா இந்த பெண்ண எங்களோட சம்பந்தம் பேசி முடிச்சிடுங்கன்னு அப்பாவும் அம்மாவும் சம்பந்தம் பேசிட்டு வந்துட்டாங்க.

அதுக்கு நான்தான் காரணம். எனக்கு இந்த பொண்ண ரொம்ப பிடிச்சுப்போச்சு. உள்ளுக்குள்ள இந்த பொண்ணு தான்.... இந்த பொண்ணுதான்னு தோணுச்சு. நான்

அங்கேயே இந்த பொண்ண எனக்குப் பிடிச்சிருக்குப்பா. இத பேசி முடிச்சிடுன்னு சொன்னேன். அம்மா வீட்டுக்கு வந்து கத்து கத்துன்னு கத்தினாங்க. 'என்னடா நீ கட்டளை போட்டுட்டு வர, பேசி முடிச்சுடுன்னு. அவங்க ரேங்கிக்க மாட்டாங்களா?' அப்படின்னாங்க. 'அந்த மாதிரியான குடும்பமா எனக்குத் தெரியலை அப்படின்னேன்.' ஒரு ரெண்டு மூணு நாள் எந்தப் பக்கம் யார் திரும்புவாங்கன்னு தெரியாத ஒரு குழப்பமா இருந்தது.

நாலாம் நாள் முன் வந்து 'நீங்க இப்படி கேட்டது ரொம்ப சந்தோஷம். எங்க பொண்ணு ரொம்ப அதிர்ஷ்டக்காரி. உங்ககிட்ட நல்ல பதிலுக்காக தபஸ் பண்ணிட்டிருக்காங்க. நீங்க வீட்டு படியேறி பொண்ண பாத்துட்டு, எனக்கு ரொம்ப பிடிச்சிருக்கு அப்படி சொல்லிட்டு போனது இருக்கே அது ரொம்ப பெரிய வார்த்தையா நாங்க நினைக்கிறோம். எங்களால உடனடியா கல்யாணத்துக்கு தயாராக முடியலை. ஒரு ஆறு மாசம் தள்ளிப் போடுங்க' அப்படின்னு சொல்லி ஒரு நல்ல நாள் பார்த்து பாக்கு வெத்தல மாத்தி நிச்சயதார்த்த சாப்பாடு ஒரு பதினைஞ்சு பேருக்கு போட்டாங்க.

நான்தான் வாங்க எங்க ஊரெல்லாம் பாருங்கன்னு கூட்டிட்டு வந்தேன். அவங்க தஞ்சாவூர் பக்கம் ஜாஸ்தி பார்த்ததில்ல.''

''எது சொந்த ஊரு?''

''சொந்த ஊருன்னா மெட்ராஸ்தான். வண்ணார பேட்டைதான். பத்து பன்னிரண்டு தலைமுறையா திருவொற்றியூர்தான். அங்கதான் பரம்பரை பரம்பரையா வளர்ந்திருக்காங்க.. ஊர் காமிக்கிற மாதிரி மட்டுமில்லாத இந்த குடும்பத்த உனக்கும் காமிக்கணும்தான் நான் கூட்டிட்டு வந்தேன். உள்ள நுழைஞ்சு நீ இல்லேன்ன வுடனே பகீர்ன்னு ஆகிபோச்சு.''

''எப்பவுமே போன் பண்ணிட்டு வாடா. நான்தான் உனக்கு போன் நம்பர்லாம் கொடுத்திருக்கேன்ல. காத்தால ஆறு, ஏழு மணிக்கு போன் கிட்டதான் இருப்பேன். வரேன்னு சொன்னாக்க இங்க நான் உனக்கு மத்த ஏற்பாடெல்லாம் பண்ண மாட்டேனா? என் வீட்லேயே சாப்பிட்டிருக்கலாமே.''

''நான் இங்க தங்கறதா? இவங்களுக்கு சௌகரியமா இருக்கட்டும்னு மாயவரத்துல தங்கறேன். இன்னும் பல ஊர்

பார்க்கலாமேங்கறதுக்காக அந்த பக்கம் லாட்ஜ் எடுத்திருக்கேன். இப்ப சாயந்திரம் போயாகணும்.

''நீ மட்டுமா இருந்தா என் வீட்ல ஹால்ல படுத்துக் கடானு சொல்லுவேன். ரெண்டு பொம்னாட்டி, ஒரு வயசானவர். லாட்ஜ்தான் சரி.'' குருமூர்த்தி ஆமோதித்தார்.

''அந்த அம்மா உங்க மாமியார் ரொம்ப நல்லா இருக்காங்கடா. ரொம்ப கூர்மையாப் பாக்கிறாங்க. மனுஷாள் பேசறபோது அந்த பேச்சை உத்து கவனிக்கிற பொம்னாட்டிக ரொம்ப குறைவு. பாதி கேட்டு பாதி கேட்காதவாதான் நிறைய பேர் இருப்பாங்க. ஆம்பிளை களிலேயே அப்படிதான் அதிகம். கூர்மையா கேக்கிற பொம்னாட்டி ரொம்ப கெட்டிக்காரிங்கறது என் அபிப்ராயம்.''

''அப்படியா?''

''ஆமா. பெண்களுக்கு லேசுல மனசு ஒருமைப் படாது. ஒருமைப்பட்டுது ரொம்ப சீக்கிரமா நல்ல மனோநிலைக்கு அவங்க வந்திருவாங்க. உங்க மாமியார் ஒரு உயர்ந்த இடத்துக்கு போகப் போறாங்கன்னு எனக்குத் தோன்றது.''

''நீ சொன்னா சரியாத்தான் இருக்கும் குருமூர்த்தி.''

பிரியத்தோடு அவன் புறங்கையை சிவசாமி தொட் டான்.

''என்ன சந்தோஷமா இருக்குதா? நீயா ஒரு பொண்ணு தேடி, உனக்கு பிடிச்சுப்போயி, அவள் மரபுப் பிரகாரம் கல்யாணம் பண்ணிண்டு கல்யாணத்துக்கு முன்னாடியே அவளோடயும், அவ அப்பா, அம்மா கூடயும், ஹனிமூன் மாதிரி நம்ம ஊருக்கு வந்து...''

''அதெல்லாம் இல்லை குருமூர்த்தி?''

''சரி... ஹனிமூன்னா என்ன? ஆம்பளையோட கைகோர்த்து வந்தாதானா? இதப்பாரு அதப்பாருன்னு பக்கத்துல உட்கார வெச்சுண்டு நாலு ஊரக் காமிச்சுண்டு ருந்தாலே ஹனிமூன்தானே. ஒருத்தரைவிட்டு ஒருத்தர் மனசுவிட்டு பேசிக்கறதுக்கு சந்தர்ப்பம் கிடைச்சாலே அது ஹனிமூன்தானே. வா அகோர மூர்த்தி சன்னதிக்குப் போலாம்.'' அவன் தனியே நிறுவப்பட்டிருந்த அகோர மூர்த்தி சன்னதிக்கு கூட்டிக் கொண்டு போனான். படிகளில் அவர்களை நிற்க வைத்தான். கற்பூர ஆரத்தி எடுத்து வெகு நிதானமாய் காட்டி ஒவ்வொரு அங்கமாக விவரித்துச்

சொன்னான். அவர்கள் புதன் சன்னதிக்குப் போனார்கள். விளக்கேற்றினார்கள். அம்பாளின் சன்னதிக்குப் போய் அர்ச்சனை செய்தார்கள். மிகப் பெரிய ஆலமரத்தின் கீழ் ஒரு பிராமணர்க்கு நினைவாய் தானம் கொடுத்தார்கள். கோவிலைச் சுற்றிவெளியே வந்தார்கள். எல்லோரும் குருமூர்த்தியிடம் விடை பெற்றுக் கொண்டார்கள்.

''அம்மா மறுபடியும் இந்த கோவிலுக்கு வாங்கோ. பிள்ளைக்கு கல்யாணம் ஆன பிறகு நல்ல குழந்தை பிறக்கணும். பொறந்த குழந்தை மகா கெட்டிக்காரனாக இருக்கணும். உலகத்தை ஆட்சி பண்ணணும், அப்படின்னு வேண்டிக்கிற ஒரு எண்ணத்தோட இங்க வாங்கோ. புதனுடைய சன்னதியில் புத்ரபேறுக்காகவும் கல்வியினுடைய உயர்வுக்காகவும் வேண்டிக்கிறது வழக்கம். இங்க புத்திமானா, பலவானா, நல்லவனா ஒரு குழந்தை பொறக்கணும் வேண்டிண்டா அது நிச்சயமா பலிக்கும். அது மட்டுமில்ல, உங்கள மாதிர இருக்கிறவா ஆன்மீக விஷயத்துல முன்னேறினாலும் புதன்கிட்ட வேண்டிக் கணும். புதன் நினைச்சா ஆன்ம ஞான சக்தியை அள்ளி அள்ளி கொடுத்துடுவான். இதுவொரு நல்ல க்ஷேத்திரம்மா. சாதாரணமான இடமில்ல. கொஞ்சம் அமைதியா உள்ள வந்து உக்காந்துண்டேள்னா நிறைய விஷயங்கள் பிடிபடும். அதனால் மறுபடியும் இந்த க்ஷேத்திரத்துக்கு வந்து சாமியினுடைய அனுக்கிரகத்தை நீங்க வாங்கிக் கணும்னு பிரார்த்திக்கிறேன்.'' மிகப் பவ்யமாய் விடை கொடுத்தான்.

அவர்கள் திருவெண்காட்டிலிருந்து கிளம்பி மாயவரம் போனார்கள்.

''என்ன சொல்றாங்க, குருமூர்த்தி?'' கற்பகவல்லியின் அம்மா சண்முகவடிவு அடிக்குரலில் ரகசியமாய் கேட்பது போல் சிவசாமியிடம் கேட்டார்கள்.

''உங்க மாமியார்' பெரிய ஆள். மரியாதையா நடந்துக்கனும்னு சொன்னாங்க.''

''கடவுளே எதுக்கு இந்த கேலி.'' சண்முகவடிவு சுணங்கினாள்.

''கேலியில்லம்மா. நிஜமா அவங்க சொன்னது அதத்தான் உங்களண்ட சொல்றேன்.''

''யாருக்கு இப்படி கிடைக்கும்னு சொன்னாங்க? கல்யாணத்துக்குப் போய் பொண்ணுப் பார்த்துட்டு வந்து,

நீ சரி சொல்லி கல்யாணமும் நடக்கறதுக்கு நாள் குறிச்சு, கல்யாணம் நடக்கதுக்கு முன்னாடியே மாமனார்-மாமியாரோட, கட்டிக்க போற பொண்டாட்டியோட ஊர்வலமா தேனிலவு மாதிரி சுத்தி வர்றியே? இது யாருக்கு கிடைக்கும்னு சொன்னாங்க?''

''அப்படியா. கல்யாணமாயிட்டே நாம கிளம்பி வந்திருக்கலாம்.''

''ஏன்? இப்ப வந்ததுல என்ன தப்பு?'' சிவசாமி ஆர்வமாக கேட்டான்.

''தப்பு ஒண்ணுமில்ல.'' கற்பகவல்லியின் அம்மா மறுபடியும் ஆழ்ந்த குரலில் பேசினாள்.

''கண்ணுப்படப் போகுதுன்னு.... பயப்படறா.''

கற்பகவல்லியின் அப்பா காசிநாதன் கண்சிமிட்டியபடி சொன்னார்.

''அதுவும் ஒரு காரணம்தான்.'' சண்முகவடிவு புருஷனின் பேச்சை ஆமோதித்தாள்.

''குருமூர்த்தி நல்லவம்மா'' சண்முகவடிவை சமாதானப்படுத்துவது போல் சிவசாமி பேசினான்.

''அய்யோ நா யாரையும் குத்தம் சொல்லலை. எங்கேயும் நடக்காத விஷயம்தான் இது. யாராவது கேள்விப்பட்டா 'இப்படியும் உண்டா? அடடா' அப்படின்னு யோசிப்பாங்க. நம்மள பார்த்து இப்படியும் உண்டான்னு யோசிக்கிற அளவுக்கு நாம வெளியே எதையும் செய்துடக் கூடாது. சில சமயம் சில கண்ணுபட்டா நமக்கு லொட்டுன்னு தலையில அடி விழும்.''

''நாம இத யார்கிட்டயும் சொல்லலையே. குருமூர்த்திக் கிட்ட மட்டும்தானே சொன்னோம்.''

''குருமூர்த்திக்கிட்ட சொன்னத நான் தவறே சொல்ல லைங்க. நாம இத யார்கிட்டயும் போய் சொல்லிக்கிட்டு இருக்க வேண்டாம். நம்ம தெருவில இந்நேரம் பத்து பேருக்கு தெரிஞ்சிராதா? எங்க காணோம் அப்படின்னு கேட்க மாட்டாங்களா? எல்லாம் ஒண்ணா சேர்ந்து வெளியூருக்குப் போயிருக்காங்க அப்படின்னு பதில் சொல்ல மாட்டாங்களா? அப்படியா எங்க போயிருக்காங்க அப்படின்றபோது இங்க இன்னார்ரோட போயிருக்காங் கன்னு பேச்சு வருமே, கட்டிக்கப் போற மாப்பிள்ளை இட்டுகிட்டு போனானா? நல்லா இருக்குப் போ அப்படித் தானே ஆரம்பிப்பாங்க.''

''இதெல்லாம் பார்த்தா நடக்காதம்மா.''

''இல்ல, இது தப்புன்னு சொல்லலே. சில பேருக்கு இத்தனை சந்தோஷம் கிடைக்காது. இந்த சந்தோஷம் கிடைக்காதவங்க, 'அய்யோ எனக்கு கிடைக்கலயேங்கிறத இவங்களுக்கு கிடைச்சிடுச்சேன்னு யோசிப்பாங்க.''

''கொஞ்சம் இடிக்கத்தான் செய்யும்.''

''வீட்டுக்குப் போயி திருஷ்டி சுத்தி போட்டா போச்சு'' கற்பகவல்லி அம்மாவைக் கிழக்கு நிற்க வைத்து கையை சுத்தினாள். அம்மா வேண்டாம் என்று தடுத்தாள். அவர்கள் பஸ் ஏறி இறங்கி மாயவரம் போய் பிற்பகல் சாப்பாட்டை ஹோட்டலில் சாப்பிட்டார்கள். பழங்கள் வாங்கிக் கொண்டார்கள். மெல்ல ஹோட்டலுக்கு நடந்து போய் இளைப்பாறினார்கள்.

மூன்று கட்டில்கள் கொண்ட பெரிய ரூம் அது. சண்முகவடிவுக்கு அதற்கு மேல் அலைவதற்கு வலிவு இல்லைபோலும். கட்டிலில் படுத்து மின்விசிறியை முழு வதும் சுழல விட்டவுடன் கண்சொருகி தூங்கிப்போனாள், மெல்லிய குறட்டையுடன். இன்னொரு கட்டிலில் மல்லாக்கப் படுத்துக் கொண்டு சற்று நேரம் பேசியபடியே இருந்த காசிநாதன் ஒருக்களித்துப் படுத்து தூங்கிப் போனார். மெல்ல திரைச்சீலையைப் பிடித்து ஜன்னலை மூடி விடிவிளக்கையும் அணைத்து அறையை சிவசாமி இருட்டாக்கினான். கட்டிலில் படுத்துக் கொண்டான். கட்டிலுக்கு கீழே போர்வை விரித்து தலைகாணி போட்டு படுத்துக் கொண்டிருந்த கற்பகவல்லியை திரும்பிப் பார்த்தான். இருட்டில் கற்பகவல்லியின் கண்கள் பளபளத்து அவனைப் பார்ப்பதை உணர்ந்தான். மெல்ல கைநீட்டி அவள் தோளை தொட்டான். அவள் பேசாமல் இருந்தாள். முதுகைத் தடவினான். தலையை வருடினான். கன்னங்களையும், புருவத்தையும் நீவிவிட்டான். மூக்கைத் தடவி மெல்ல உதடை நெருடினான். காதுப்பக்கம் போய் கைகளால் குறுகுறுக்கச் செய்தான். அவள் நடுங்கித் தவித்தாள்.

அவள் தோள்களைப் பற்றி மேலே வா என்பது போல் இழுத்தான். அவள் மறுத்து அவன் முழங்கையை கீழே பற்றி இழுத்தாள். அவன் திரும்பி அறைக்குள் தூங்குகின்ற வயதானவர்களைப் பார்த்தான். அவர்கள் ஆழ்ந்த தூக்கத்துக்கு போனது தெரிந்தது. மெல்ல புரண்டு தரையில்

இறங்கி கற்பகவல்லிக்கு அருகே படுத்துக் கொண்டான். ஒருக்களித்து அவளைத் தழுவிக் கொண்டான். அவள் அவனை ஏற்றுக் கொண்டாள். அவன் உதடு விரித்து அவள் உதடு தேடியபோது அவன் கழுத்துக்கு பின்பக்கம் கை கொண்டு போய் தலையை தடவி மிக அழகாக உதடு தூக்கினாள். அவர்கள் கண்கிறங்கினார்கள்.

சண்முகவடிவு தலைதூக்கிப் பார்த்துவிட்டு மறுபடியும் கண்மூடிக் கொண்டாள்.

# 2

இது இப்படித்தான்னு எழுதியிருக்கிறபோது இத நம்மாள எப்படி தடுக்க முடியும். போன மாசமே மனசுக்குள்ள ஒரு பொறி தட்டிச்சு. நம்ம பொண்ணுக்கு இன்னும் நல்லபடியா சமையல் சொல்லித் தரணும். யாராவது பொண்ணு கேட்டு வரும்போது முத கேள்வி சமைக்குமான்னு கேட்பாங்க. சுமாரா செய்யும்ன்னு சொல்லக்கூடாது. நல்லா செய்யும்ன்னு வாய் நிறைய சொல்லணும் அப்படின்னு தோணிச்சு. அதுக்கேத்தாப்புல அவளே புஸ்தகம் வாங்கணும்மா காசு கொடுன்னா. நானும் அவளும்தான் மயிலாப்பூருக்கு போய் சமையல் புஸ்தகம் மூணு வாங்கி வந்தோம்.

மலாய் குஸ்தா ஒண்ணு பண்ணினா. ஒண்ணும் சரியா வரலை. அவங்க அப்பா தலையில அடிச்சுக்கிட்டார். நீ உப்புமா, கேசரின்னு செய்யப் பழகு. அதுக்கப்புறம் இந்த மாதிரி அயிட்டத்துக்குப் போகலாம் அப்படின்னு சொன்னார்.

''தோசை வார்க்கிறதுக்கு கத்துக் கொடும்மா. எடுத்தவுடனே வாய்ல நுழையாத பேரையெல்லாம் டிபனா வெச்சு செய்யச் சொல்லாத'' அப்படின்னார்.

ஆறேழுவிதமா தோசை. அன்னிலேர்ந்து தொடர்ச்சியா தெனம் வார்த்தோம். எங்க அப்பா தோசை போதும்டி நிறுத்திக்கடி, வேறெதாச்சும் பண்ணுடின்னு கத்தறவரைக் கும் தோசை வார்த்தோம். பச்சரிசி மாவு தோசை, மைதா மாவு தோசை, கோதுமை மாவு தோசை, ரவா தோசை, நெய் தோசை அது, இதுன்னு விதவிதமா நாங்களே யோசனை

பண்ணி செஞ்சோம். புதினா போட்டு தோசை பண்ணின அன்னைக்குத்தான் ஆள் வந்து கேட்டது, உங்க வீட்ல பொண்ணு இருக்காமே. நாங்க பொண்ணு பார்க்க வரலாமான்னு.

ஒரு நிமிஷம் திக்குன்னு ஆயிபோச்சு. நாம ஏதோ விளையாட்டா நினைச்சா நிஜமா நடக்குதே. நடந்து டக்குனு கூட்டிட்டு போயிட்டாக்க நாம என்ன செய்வோம். யாரோட பேசுவோம். அப்படின்னு ஒரு துக்கம் நெஞ்சை அடச்சது. இன்னைக்கு இல்லாட்டி நாளைக்கு போகத்தானே போறா. இதுல வயசு என்ன முக்கியம் அப்படின்னு சமாதானம் படுத்திட்டாக்கூட, பத்தொன்பது வயசுப் பொண்ணு கல்யாணம் பண்ணிக் கொடுக்கிறதுக்கு எனக்கு மனசு ஒப்பலை. இன்னும் ரெண்டு வருஷம் போகட்டுந் தான்னு தோணுச்சு. நாமதான் பதினாலு வயசுல வாக்கப் பட்டோம். நம்ம குழந்தை அத்தனை பாரத்தை ஏன் தூக்கணும். இன்னும் கொஞ்சம் சுதந்திரமா இருந்துட்டு எங்கனா வாக்கப்படட்டும்னு நினைச்சேன். ஆனா அவங்க விடலை. ஆள் மேல் ஆள் அனுப்பிச்சாங்க. அவங்க அப்பா கடைக்குப் போய் பார்த்தாங்க. நாங்க பொண்ணு பார்க்க வரோம், பொண்ணு பாக்க வரோம்ன்னு நாலஞ்சு பேர அனுப்பிச்சுட்டாங்க. இதுக்கு மேல தடுத்தா நல்லா இருக்காது அப்படின்னு சொல்லிட்டு, வாங்கன்னு சொல்லி அனுப்பிச்சோம்.

வந்த பத்தாவது நிமிஷம் பையன் எழுந்து நின்னுட் டான். என்னடா தடுக்குன்னு எழுந்து நிக்கறான்னு பார்த்தேன்.

''எனக்கு இந்த பொண்ண பிடிச்சிருக்கு. கல்யாணம் பண்ணனும்னா எனக்கு இந்த பொண்ண கல்யாணம் பண்ணி வைங்க. என்கு வேலை இருக்கு வரேன்'' அப்படின்னு எல்லாரையும் கும்பிட்டுவிட்டுப் போயிட்டான்.

அவங்க வீட்ல இருக்கிறவங்களுக்கே ஒரு மாதிரியா போச்சு. என்னடா நம்மள மீறி நம்ம புள்ள சொல்லிட்டு போயிட்டானேன்னு அவங்க அம்மாளுக்கு ரொம்ப வருத்தம். அவங்க அப்பாவை முறைச்சுப் பார்த்து ''இதெல்லாம் நல்லதுக்கு இல்ல'' அப்படின்னு கத்தினா.

''சரிடி. அவன் அபிப்ராயத்தைச் சொல்லிட்டு போயிட் டான். உனக்கு ஒரு அபிப்ராயம் இருக்குல்ல. அதப்பத்தி நீ கேளு, பேசு. அது சரியா வந்தா கல்யாணம் முடிப்போம்.''

அந்த அம்மாவுக்கு அதுக்கப்புறம் பேச முடியல. ''நீங்க என்ன செய்வீங்களோ அத செய்ங்க. எப்ப கல்யாணம் வெச்சுக்கலாம்?'' அப்படின்னு பேச ஆரம்பிச்சாங்க.

''எங்களுக்கும் தெரியல. என்ன செய்யறது, எவ்வளவு செய்யறது எப்ப செய்றது ஒண்ணும் புரியல. ஒரு பையன் பொண்ணு பார்க்க வந்தான், சபை நடுவுல எழுந்து நின்னு கல்யாணம் பண்ணி வைக்கிறதா இருந்தா இந்த பொண்ண கல்யாணம் பண்ணி வை அப்படின்னு சொல்லிட்டுப் போயிட்டான்னு அந்த தெரு முழுக்க அன்னைக்கு மறுநாளே பரவிச்சு. இப்படித்தான் பரவும். ரெண்டு பேருக்கு தெரிஞ்சா போதும், ரெண்டாயிரம் பேருக்கு தெரிஞ்ச மாதிரி.

ஓடுகிற புகை வண்டியில் யோசனை தாங்காமல் சண்முகவடிவு எழுந்து நின்றாள். எதிர்பக்கம் கீழே படுத்துக் கொண்டிருக்கிற புருஷனைப் பார்த்தாள். நடுபெர்த்தில் படுத்துக் கொண்டிருக்கிற சிவசாமியையும், தனக்கு நேர் மேலே படுத்துக் கொண்டிருக்கின்ற கற்பகவல்லியையும் எழுந்து நின்று முகம் பார்த்தாள். மறுபடியும் உட்கார்ந்து கொண்டாள். வாழ்க்கை விசித்திரமாத்தான் ஒரு காட்டாறு மாதிரி எங்கயோ இழுத்துட்டு போகுது. நாலு மாசம் முன்னாடி இந்த புள்ள யாருன்னு தெரியல. இன்னைக்கு மாடிப்படி வளையில பொண்ணை இறுக்கி கட்டி முத்தம் கொடுக்கிற போது வாணாம்டான்னு சொல்ல முடியல. பொண்ணுக்கும் வேண்டியிருக்கு. அவன் வந்தா ஒரே குதியல். வீட்டுக்கு கிளம்பி போனா மூஞ்சி பெரிசாயிடுது. சுருண்டு தலகாணியை மூஞ்சில போட்டு படுத்துகிடுது. பொம்பள ஜென்மம் அப்படித்தான் அவஸ்தைப்படும். இந்த சுரம் கீழே இறங்க ஒரு வருஷம் ஆகும். ஒரு பிள்ளை பெத்து இறக்கினாதான் தொட்டுட்டே இருக்கிறது கொஞ்சம் குறையும்.

என் சின்ன வயசில இதே போலநான் அவஸ்த படலையா? எங்கே புருஷன் எங்கே புருஷன்னு மனசு தேடலையா. அதுதான் அவளுக்கும். அவர்கள் தொடலை, மனம் சமாதானம் செய்து கொண்டாலும் நல்லபடியா எல்லாம் முடிய வேண்டுமே என்று ஆவல் க்வலை பின்னிப்பிணைந்து மனதில் எழும். சட்டென்று விழித்துக் கொண்டாள். சிவசாமி தலைதூக்கி சண்முகவடிவைப் பார்த்தான்.

''ஏம்மா தூங்கலையா?'' என்று கேட்டான்.

''தூக்கம் வரலப்பா'' அவள் புன்சிரிப்போடு சொன்னாள்.

''விழுப்புரம் வந்துடும். பால் வாங்கித் தரேன், சாப்பிடுறீங்களா? வயிறு காலியானா தூக்கம் வராது. நீங்க கிளம்பறபோதே ஒரேயொரு தோசை சாப்பிட்டீங்க. நான் அப்பவே நினைச்சேன், நடு ராத்திரியில எழுந்து உக்காந்துக்கப் போறீங்கன்னு. அதே மாதிரி ஆயிப் போச்சு. பிஸ்கட் இருக்கு சாப்பிடறீங்களா?''

அவன் சொன்ன பிறகுதான் வயிறு பசிப்பது புரிந்தது. வயிறு பசித்துத்தான் எழுந்து உட்கார்ந்தது என்பதும் தெரிந்தது.

''சரிப்பா குடு'' அவள் கை நீட்டினாள். அவன் நழுவி குதித்தான் பெட்டி திறந்தான். பிஸ்கட் பொட்டலத்தை எடுத்து பிரித்து அவள் கையில் அப்படியே வைத்தான்.

''இவ்வளவும் வேணாம்.''

''சாப்பிட்டு மிச்சத்த கொடுங்க'' - அவன் சொல்ல அவள் பிஸ்கட்டை எடுத்து சாப்பிடத் தொடங்கினாள். விழுப்புரத்தில் வண்டி விட்டு இறங்கி பால் வாங்கிக் கொடுக்க, வயிறு கனமாயிற்று. வயிறு கனத்தால் மறுபடியும் கண்கள் இழுத்தன. அவள் சுருண்டு படுத்துக் கொண்டாள். சிவசாமி போர்வையை உதறி போர்த்திவிட்டான். அவன் அனுசரணை பிடித்திருந்தது. யாருக்கு இப்படி ஒரு மாப்பிள்ளை கிடைப்பாங்க. இதுவும் அதிர்ஷ்டம்தான். கண்ணுபடாம இருக்கணும் என்று கவலைப்பட்டாள்.

சண்முகவடிவு இந்த வீட்டுக்கு மருமகளாக வந்தபோது, இந்த வீட்டின் சூழல் மிக சந்தோஷமாக இருந்தது.

''நாமெல்லாம் வணிகர்கள்; தெலுங்கு பேசும் வணிகர்கள்; முஸ்லிம்கள் படையெடுக்கும்போது ஆந்திரா விலிருந்து ஈரோடு பக்கம் வந்தவர்கள்; எண்ணெய் ஆட்டியதில்லை, ஆனால் எண்ணெய் வாங்கி விற்றவர்கள்; துணி நெய்வதில்லை, ஆனால் துணி வாங்கி விற்றவர்கள்; விவசாயம் செய்ததில்லை, ஆனால் தானியங்கள் வாங்கி விற்றவர்கள்; வாங்கி விற்பதுதான் நம்முடைய குலத் தொழில். விஜய நகர சாம்ராஜ்யத்தின் காலத்தில் மிக உச்ச நிலையில் இருந்தோம். அரசர்களுக்கு அடுத்தபடியாக வாழ்ந்தோம். அரசர்கள் நம்மிடம் வந்து கையேந்திய சரித்திரங்களெல்லாம் உண்டு. நம் வீட்டுப் பெண்ணை

அரசர்கள் மணந்ததுண்டு. அரசர் வீட்டுப் பெண்கள் நமக்கு உரிமையானதுண்டு.

வணிகர்கள் என்று பேரே ஒழிய, யுத்தப் பயிற்சி ஒவ்வொரு வணிகருக்கும் நிச்சயம் தெரிந்தாக வேண்டும். காட்டு வழியே போகும் போது கள்வர் பயமும், விலங்குகள் பயமும் இருக்கும். அவைகளை சமாளிக்க இளம் வயதிலேயே பயிற்சி கொடுத்துவிடுவார்கள். உறைவாளில்லாமல், தலைப்பாகையில்லாமல், கழுத்தில் ஒரு தங்கச் சங்கிலியில்லாமல், ஒரு மோதிரமில்லாமல் ஒரு வணிகன் வெளியே வரக்கூடாது. எல்லாவற்றையும் விட மிக முக்கியமாக வணிகன் பாதரட்சை அணிந்தே ஆக வேண்டும். அப்போதெல்லாம் யார் பாதரட்சை அணிய லாம்; யார் அணியக் கூடாது என்றெல்லாம் பிரிவு இருந்தது.

ஒருமுறை ஒரு மலை நாட்டு மன்னன், நாம் பாதரட்சை போட்டு அவன் மலையில் ஏறியதை ஆட்சேபித்த போது, அது இல்லாமல் நாங்கள் ஊருக்குள் நடமாட முடியாது என்று வணிகர்கள் திரும்பிவிட்டனர். அந்த வணிகர்களைக் கைது செய்து, வெறுங்காலோடு நடத்தி வைத்து, மலைக்கு அழைத்துப் போகப்பட்டார்கள். அப்படி நடத்திப் போகப் பட்ட வணிகத் தலைவர், அந்த அரசனிடம் நீ செய்வது சரியாக இருந்தால், நான் இந்த மலையிலேயே மாரடைத்து உயிர் துறப்பேன். நீ செய்வது அநியாயமாக இருந்தால், இந்த மலையில் நீ நட்ட அத்தனை வாழை மரமும் பட்டுக் கருகிப் போகும் என்று சபதம் செய்தார். அரசன் வாய் விட்டு சிரித்தான். ஆனால் அடுத்த மூன்று நாளிலேயே, அவன் மலைப் ப்க்கத்து வாழைகள் அத்தனையும் கருகிப் போயின.

சலசலவென்று கொப்பும், கிளையுமாய் குலை தள்ளிய வாழைகளெல்லாம் இலை சுருங்கி, தண்டு கறுத்து வாடிப் போயின. அரசன் பயந்து போய், அந்த வணிகனிடம் மன்னிப்பு கேட்டு பாதரட்சைகள் வரவழைத்து அவருக்குப் பரிசாகக் கொடுத்தான். பாதரட்சைகள் போட்டு வரலாம் என்று தாமிரப் பட்டயத்தில் எழுதிக் கொடுத்தான். இது ஒரு செவி வழிச் செய்தி. வாழை மரம் மறுபடியும் அந்த மலை நாட்டில் தழைக்க, பத்து வருடங்களாயிற்று.''

''அவ்வளவு ஆன்மிக சக்தி உடையவர்களா, நம்மு டைய பெரியோர்கள்'' மாமனார் சொன்ன கதைக்கு வாய் பிளந்து சண்முகவடிவு கேட்டாள்.

''அதெல்லாம் ஒன்றுமில்லை. வணிகர்கள் தந்திரசாலிகள். அவர் தன்னுடைய குழுவோடு கைது செய்யப்பட, அதை ஒரு பையனிடம் சொல்ல, அந்தப் பையன் கீழே உள்ள குழுவிடம் தான் செய்த சபதத்தைச் சொல்ல, அவர்கள் கடுமையான விஷம் வாங்கி வந்து, ஒவ்வொரு துளி கத்தியில் தோய்த்து, வாழையில் இறக்கி விட்டார்கள். கத்திக் குத்து பட்ட வாழைகள் எல்லாம் கருகிச் செத்துப் போயின. ஒரு வாழையில் இரண்டங்குல கத்திக் குத்து எப்படி தெரியும்? யாரால் கண்டுபிடிக்க முடியும்? எனவே இது ஆன்மிக பலமல்ல. வெறும் வியாபாரத் தந்திரம்.''

இப்போது கடையிருக்கிற இடத்தில்தான் மாமனாருடைய வீடு இருக்கிறது. வீடு முழுவதும் மஞ்சள் மூட்டைகள் அடுக்கி வைக்கப்பட்டிருக்கும். வீட்டினுடைய ஹால் மஞ்சள் பொடி படர்ந்திருக்கும். ஒரு தனித்த படுக்கையறையில் கூட மஞ்சள் நெடி வீசிக் கொண்டிருக்கும். கொல்லைப்புறம் வரை மஞ்சளுடைய ஆட்சி நடந்து கொண்டிருக்கும்.

''நம்ம வீட்டுல எல்லா வசதியும் உண்டு. ஆனால் வெள்ளை சட்டை போட முடியாது. நம்ம வீட்டு இட்லி கூட கொஞ்சம் மஞ்சக் கலராத்தான் இருக்கும். என்ன செய்யறது? சௌகரியம் பார்த்தா பொழைப்பு போயிடுமே... ஒரு ரெண்டு, மூணு நாள் மஞ்ச நெடி தொந்தரவா இருக்கும். அப்புறம் மஞ்ச வாசனை இல்லைன்னா, தூங்க முடியாது. நான் வெளியூருக்குப் போகும்போது, ஒரு டப்பா எடுத்துன்னு போயிடுவேன், தனியா. திறந்து ஃபேன் கீழே வச்சிட்டு அப்புறம்தான் தூங்குவேன். அப்பதான் தூக்கம் வரும்'' என்று மாமனார் வாய்விட்டு சிரித்தபடி சொல்வார்.

மாமனாரைவிட மாமியார் கேலியும், கிண்டலும் செய்வதில் அதிகம் வல்லவர். ''எதுனாலயோ தெரியலை... இங்க வந்த பிறகு, எனக்குப் பல்லெல்லாம் மஞ்சளாப் போச்சு. ஏண்டி, பல்பொடி கூட மஞ்சதானன்னு எங்க வீட்டுல திட்டுவாங்க. அப்புறம்தான் தெரியுது, நான் ஒரு பத்து நாள், பல்பொடின்னு நினைச்சிகிட்டு மஞ்சளில் பல் தேச்சுருக்கேன். அப்பல்லாம், கரண்ட்டு கிடையாது. அரிக்கேன் விளக்குதான். நாலு மணிக்கு எழுந்து பல் தேய்ப்பேனா... பல் பொடியா, மஞ்சளான்னு தெரியாத போச்சு.''

''ஏம்மா, வாசனை வச்சாவது கண்டுபிடிக்க முடியாது?''

''மஞ்ச வாசனையே எனக்குத் தெரியாத போச்சுடி. மோந்து, மோந்து எந்த வாசனையுமே எனக்குத் தெரியற தில்லை. ரசம் ஊசிப் போச்சுன்னு, மத்தவங்க சொன்னா தான் தெரியும். வாரப் பத்திரிகைல செண்ட் தடவி விப்பான் ஆஹா, ஆஹான்னு எல்லோரும் கொண்டாடுவாங்க. நானும் இழுத்து, இழுத்து மோந்து பார்ப்பேன். பேப்பர்தான் மூக்குல போய் ஒட்டிக்குமே தவிர, வாசனை தெரியவே தெரியாது. மஞ்சப் பொடி மூக்கை அறுத்துடுச்சு.''

மாமியார் இப்படி சகஜமாகப் பழக இன்னொரு காரணம் இருக்கிறது. இந்த மாமியார் இரண்டாந்தாரம். மாமனாரை விட இளமை மிக்கவர். பதினைந்து வயதில் திருமணமாகி, பதினாறு வயதில் குழந்தை பெற்று, முப்பத்தைந்து வயதில் பிடுங்கப் பட்ட கருணை கிழங்கு போல் வடிவழகோடு விளங்கியவள். மாமியாரும், அவ ளும் கோயிலுக்குப் போகும்போது அக்கா, தங்கச்சிப் போல்தான் தோற்றமளிப்பார்கள். அவருடைய மூத்த தாரம் நோய்ப்பட்டு இறந்து போனாள். அவருடைய ஒரே பையனை ஆந்திராவுக்குக் கூட்டிக் கொண்டு போய் விட்டார்கள். படித்து முடித்த பிறகு, அந்தப் பையன் சென்னைக்கு வந்துதான் வேலை செய்தான். ஆயினும், அதிகம் வீட்டுக்கு வருவதில்லை. ஏதேனும் கையெழுத்து வாங்க, உதவி கேட்க மட்டுமே வீட்டுக்கு வருவான். ராமநவமி அன்று வந்து நமஸ்கரித்துவிட்டுப் போவான்.

ராமநவமியும், சிவராத்திரியும் அவர்களுக்கு முக்கிய மான பண்டிகைகள். செட்டியார்களில், அதுவும் தெலுங்கு பேசுகிற செட்டியார்களில் சைவ சமயத்தோர் மிக மிகக் குறைவு. கன்னடத்தில் இருந்து குடிபெயர்ந்து தெலுங்கு தேசம் வந்து, மொழியைத் தெலுங்காகக் கொண்டு, பிறகு தமிழ்நாட்டுக்குக் குடிபெயர்ந்தவர்கள் என்பதால் அவர்களிடம் பல்வேறு கலாச்சார வாசனைகள் இருந்தன.

அந்தப் பையன் ஆந்திராவுக்குப் போய், எந்த தகவலும் சொல்லாமல் திடுமென்று கல்யாணம் செய்துகொண்டு வந்தான். தகவல் தெரிவிக்க முடியவில்லை என்று சொன் னான். மனைவியோடு வீட்டுக்கு வந்தான். நமஸ்கரித்தான். ''எனக்கு நிறைய செலவாயிடுச்சு. உங்ககிட்ட இருந்து

ஏதாவது காசு கிடைச்சாதான் நல்லா இருக்கும்'' என்று கைகூப்பி கேட்டான்.

அப்பா அவன் கேட்டதையும் உத்தேசித்து, தான் கொடுக்க வேண்டியதையும் உத்தேசித்து பெரிய தொகை கொடுத்தார். ''ஜாக்கிரதை, செலவு பண்ணாத... ஒரு வியாபாரி ஊதாரியா இருந்தா, ரொம்ப சீக்கிரம் அழிஞ்சு போவான். ஒரு அய்யர் ஊதாரியா இருந்தா, மொள்ளத் தான் ஊதாரித்தனம் பண்ணுவான். வியாபாரியால ரொம்ப வேகமா ஊதாரித்தனம் பண்ண முடியும். அதுனால, காசு பத்தி கவனமா இரு. இன்னி தேதிக்கு ஒரு லட்ச ரூபா ரொம்பப் பெரிய காசு. ஜாக்கிரதையா வச்சுக்கோ.'' எச்சரித்துக் கொடுத்து அனுப்பினார். பெண்ணுக்கு நாலு பவுனில் ஒரு நகை போட்டார்.

ஆனால் மாமியாருக்கு இந்த செய்கை மிக அவமரியாதையாக இருந்ததாம். அப்பாவை மட்டும் நமஸ்கரித்துவிட்டு, அவளை நமஸ்கரிக்காமல் போனானாம். அவளை நமஸ்கரிக்க வேண்டுமென்று அந்தப் பெண்ணும் சொல்லவில்லையாம். இப்படி போகிறானே, இது நல்லதல்லவே என்று அந்தப் பெண்ணிடம் காதோரம் சொன்னபோது, ''எனக்குத் தெரியாது... அவர் நமஸ்காரம் செய்தா, நானும் பண்றேன். அவர் பண்ணலைன்னா, நானும் பண்ணலை'' என்று சொல்லிவிட்டுப் போய் விட்டாளாம். மாமியார் இடிந்து போய்விட்டாளாம். அதனாலேயே தன் குழந்தைகளை, தன்னுடைய மகனை இன்னும் நேர்மையாக, நிறைவுள்ளவனாகவும், கெட்டிக் காரனாகவும் அவள் வளர்த்தாள்.

''அப்பாங்கிறது தெய்வம். அம்மாங்கிறது தெய்வம். இதுங்களை விட்டுட்டு நீ வேற எந்த, எவ கால்ல விழுந்தாலும் அது மரியாதையில்லை. அது நிறைவில்லை. ஞாபகம் வச்சுக்கோ'' என்று எடுத்துச் சொல்வாளாம்.

''இப்ப வீட்டுல சோஃபா, டேப் ரெக்கார்டர், டி.வின்னு ஆயிரம் இருக்கு. அப்போ ஒண்ணும் கிடையாது, சண்முகவடிவு. பாய்தான் போட்டு உக்கார வைப்போம். ஒரேயொரு மர நாற்காலிதான் இருக்கும். வீட்டினுடைய நாலு சுவத்து சந்துலயும் மஞ்சப் பொடி இருக்கும். உட்காருவதற்கு அஞ்சுவாங்க. வெள்ளை வேட்டியா இருக்கே, நான் நின்னே பேசறேன்னு பல பேரு நின்னே பேசிட்டுப் போயிடுவாங்க. ஆனா இந்த மஞ்சதான், நம்மள ஓஹோன்னு வளர்த்தது. வா, சண்முகவடிவு... வந்து

வேலை செய்...'' - சண்முகவடிவை உட்கார வைத்து, மஞ்சள் பொடியை எப்படி டப்பாவில் அடைப்பது என்று கற்றுக்கொடுத்தாள். எப்படி சலஃபன் சுற்றுவது என்று செய்து காட்டினாள். கிழங்கு மஞ்சள் மூட்டை, மூட்டையாய் வாங்கி, கடும் வெய்யிலில் உலர வைத்து, அவை தரையில் வீசிப்போட்டால் எகிறுகிற பக்குவத்தில் மிஷினில் கொடுத்து அரைத்து, மறுபடியும் அதில் இருக்கின்ற சிறிய ஈரப்பதமும் உலர்த்தி அள்ளி, அள்ளி பெரிய டப்பாக்களில் கொட்டி, அந்த டப்பாக்களில் இருந்து, கரண்டியில் எடுத்து சிறிய டப்பாக்களில் போட்டு, அதில் சலஃபன் சுற்றி, அட்டைப் பெட்டிகளில் அடுக்கி, தமிழ்நாடு, ஆந்திரம், கர்நாடகம், கேரளம் என்று நாலாபக்கமும் அனுப்பி, தென்னிந்தியா முழுவதும் இவர்கள் பூசுமஞ்சள்தான் மிக பிராபல்யமாக இருந்தது.

''இப்ப மாதிரி பவுடர், ஸ்நோ, லோஷன்ல்லாம் அந்த நாள்ல கிடையாது. ஏழையா இருந்தாலும் சரி, பணக்காரர் களாக இருந்தாலும் சரி, கோடீஸ்வரர்களாக இருந்தாலும் சரி, பொம்பளைங்க ஒரு நாளும் உடம்புல மஞ்சள் தடவாத வரவே மாட்டாங்க. ஒரு நாள் தப்பாது அடைச்சி அனுப்பு வோம். அப்பவும் நல்ல டிமாண்ட். இந்த வண்ணாரப் பேட்டை வீடு வாங்குனதே மஞ்சள்னாலதான். ரோட்டோரமா இருக்குற வீடு வாங்கினா, டப்புன்னு லாரி நிக்க வைச்சி, லோடு அனுப்பிச்சிடலாம்னுதான் நாங்க சந்து வீடா பார்க்காத திருவொற்றியூர் மெயின் ரோட்டுல வீடு பார்த்தோம். அப்புறம் பவுடரும், லோஷனும் வந்தவுடனே மஞ்சளுக்குக் கொஞ்சம் மரியாதை கம்மியாச்சு. அக்கம்பக்கத்திலிருக்கிறவங்க நெடி தாங்கலே, நெடி தாங்கலே, கண்ணுல ஜலம் வருது, காதுல சீழ் வருது, மூக்குல சளி வருதுன்னு என்னன்னமோ சொன்னாங்க. சரி, இவங்களுக்கு இதனோட ஆரோக்கியம் புரியலேன்னு சொல்லிட்டுதான், திருவொற்றியூர் தாண்டி அரவை மிஷினை எடுத்துட்டுப் போயிட்டோம். நம்ம வீடும் ஒரு மாதிரி சுத்தமாச்சின்னு வச்சுக்கயேன்.''

சண்முகவடிவின் மாமியார் சந்தோஷமாக விவரங்கள் சொன்னார். ஆனாலும் வீட்டில் ஒரு மஞ்சள் நெடி நிரந்தரமாக இருக்கத்தான் செய்தது. பெட்டி, பெட்டியாய் மஞ்சள் அடுக்கி வைக்கின்ற வராண்டாக்கள் மிக காபந்தாய் இருக்கும். மஞ்சள் பொடி தண்ணீர் பட்டால் கெட்டுப் போகும். காற்றினுடைய ஈரம் பட்டாலும் கெட்டுப்

போகும். எனவே, தார்ப்பாய் போட்டு மூடி மிகக் கவனமாய் மஞ்சள் டப்பாக்களை வைத்திருப்பார்கள்.

''அந்த வீட்டுக்குப் போய் எப்படி குடித்தனம் பண்றே... ஆச்சரியமாயிருக்கே...'' - சண்முகவடிவின் தோழிகள் கேள்வி கேட்டபோது, சண்முகவடிவுக்கும் ஆச்சரியமாகத் தான் இருந்தது. ஆனால் வெகு சீக்கிரத்தில் மஞ்சள் பழகிப் போயிற்று. வெளியூருக்குப் போய் தங்குகிற போது, மஞ்சள் இல்லாமல் இருந்தால், மஞ்சள் வாசனை இல்லாமல் இருந்தால் தூக்கம் வராமல் போயிற்று. ஏதோ குறைகிறதே என்ற எண்ணம் வந்தது. ஒரு கோடை மழைக்குப் பின் வெய்யில் அனல் பறக்க அடித்துக் கொண்டிருந்தது. நூற்றிப்பத்து டிகிரி, நூற்றிப்பனிரெண்டு டிகிரி நாள் தவறாமல் உஷ்ணம் தலையில் இறங்கிக் கொண்டிருக்க, அங்கங்கே தொற்று நோய்கள் பரவ ஆரம்பித்தன. உஷ்ணத்தால் வரும் வியாதிகள் ஊர், ஊருக்குப் பரவின. குறிப்பாய் குழந்தைகளைத் தாக்கின.

''நம்ம வீட்டுப் படியைத் தாண்டி உள்ளுக்குள்ள ஆத்தா வரமாட்டா. மஞ்சள் இருக்கிற இடத்துல நோய் வராது.'' என்று சண்முகவடிவின் புருஷன் திடமாகச் சொல்ல, இந்த மஞ்சள் பொடிக்கு நடுவேதான் கற்பகவல்லி ஆரோக்கிய மாக வளர்ந்தாள். பள்ளிக்கூடம் போனாள். படித்தாள். பருவம் வந்தாள். அவள் பூப்படைந்த அன்றைக்கு பெரிதாய் ஊர் கூட்டி அழைத்து அவளைப் பார்க்கச் சொன்னாள். நல்ல நாள் பார்த்து பெரிதாய் சடங்கு செய்தாள். மறுபடியும் பள்ளிக்கூடம் அனுப்பிய போது, சண்முகவடிவு அந்த மூன்றாம் படிவத்தில் மூன்று செக்ஷனிலுள்ள எல்லா பெண்களுக்கும் ஆளுக்கொரு பூசுமஞ்சள் டப்பா பரிசாகக் கொடுத்தாள்.

பூசுமஞ்சள் வெறும் வியாபாரமாக இல்லை. சண்முக வடிவு அவ்வப்போது எச்சரித்ததினால் மஞ்சள் விலை ஏறுமுகமாயிருந்தபோதெல்லாம், வீட்டில் நிறைய மஞ்சள் மூட்டைகள் இருந்தன. தடக்கென்று சண்முகவடிவு நடு இரவில் எழுந்து உட்கார்ந்து கொள்வாள்.

''எத்தனை மூட்டை மஞ்சள் இருக்கு?''

''ஆறு மூட்டை''

''ஏன் அவ்வளவு குறைச்சலா வச்சிருக்கீங்க? வாங்க வேண்டியதுதானே.''

''நாளைக்குத்தான் போகணும்னு நினைச்சிகிட்டிருக்கேன்.''

''நாளைக்குப் போகப் போறீங்களா... எப்போ?''

''சாயந்திரம் ட்ரெய்னில்...''

''இல்லைங்க... காலையில போயிடுங்க. கார் வைச்சுட்டுப் போயிடுங்க. ஈரோடு போய் இறங்குங்க. இறங்கி, யார் முதல்ல வந்து கேட்கறானோ, அவன்கிட்ட டக்குன்னு காச கொடுத்து, அட்வான்ஸ கொடுத்து மஞ்சளை வாங்கி, பெரிய லோடு ஏத்தி எடுத்தாந்திடுங்க...''

''ஏன் சண்முகவடிவு..? டபுக்குன்னு மூட்டைக்கு நாற்பது ரூவா, அம்பது ரூவா ஜாஸ்தியாவுமே... மேலயும் போலாம்.''

முதல்முறை சண்முகவடிவின் புருஷனுக்கு இது புரியவில்லை. 'ஏதோ பொம்பளை கனவு கண்டு உளறுது' என்று காலையில் கிளம்புவதற்குத் தாமதம் செய்தபோது, அவள் விரட்டி, விரட்டி காரேத்தி அனுப்பி வைத்தாள். கிளம்பி பத்தடி நகர்ந்ததும், கார் பஞ்சராகி உட்கார்ந்தது. சண்முகவடிவின் புருஷன் உள்ளே நுழைந்து கத்தினான்.

''உனக்குத் தெரியாத வேலையில், தேவையில்லாத நுழையாதே...''

சண்முகவடிவு ஒரு கை மஞ்சளை அள்ளி, ஈரத்தில் தோய்த்து, பானட்டின் மீது வட்டமாகத் தடவினாள். 'ஆத்தா, என் மரியாதையைக் காப்பாத்து' என்று கைகூப்பினாள். கார் ஐந்து நிமிடத்தில் தயாராகியது. அடுத்த ஏழு மணி நேரத்தில் ஈரோடில் இருந்தது. பிற்பகல் இரண்டு மணிக்கு உணவு வேளைக்காக கடை மூடப்படுகிற போது, மூன்று கடைகளில் முப்பது, முப்பது மூட்டையாக தொண்ணூறு மூட்டைக்கு அட்வான்ஸ் கொடுத்து, டெலிவரி நோட் வாங்கி, ஒரு வாரத்தில் காசு அனுப்புகிறேன் என்று உறுதி சொல்லி, மாலை மூட்டைகளை லாரியில் ஏத்த, இரவு பத்து மணிக்கு வட இந்தியாவில் மஞ்சள் மார்க்கெட் ஏறுமுகமாகியது.

ஆந்திராவின் மஞ்சள்கள் வட இந்தியாவிற்குத் திருப்பப்பட்டன. எனவே, இந்தப் பக்கம் வரவேண்டிய சரக்குகள் தாமதமாயின. சட்டென்று சென்னையில் மஞ்சள் விலை உயரத் துவங்கியது. ஆனால், பழைய விலையில் நல்ல மஞ்சள்கள் தொண்ணூறு மூட்டை வீடு கொள்ளாமல் வந்து நின்றன.

அரைப்பதற்காக முப்பது மூட்டை வைத்துக்கொண்டு, அறுபது மூட்டையை உடனடியாக விற்றார்கள். கிலோவுக்கு பன்னிரெண்டு ரூபாய் அதிகமாக விற்றார்கள். சொடுக்கு போடுகிற நேரத்தில் மிக நல்ல லாபம் கிடைத்தது. திருவொற்றியூர் வீட்டுக்கு அருகே இருக்கிற ஒரு நிலப் பரப்பை வாங்குவதற்கு அட்வான்ஸ் கொடுத்தார்கள்.

''அகலக்கால் வைக்கிறோமோ, சண்முகவடிவு'' - புருஷன் கவலைப்பட்டான்.

''இல்லவே இல்லை. எல்லாம் சரியாக நடக்கும். நான் உள்ளுக்குள்ள கேட்காத உங்ககிட்ட பேசறதேயில்லை.''

''உள்ள என்ன இருக்கு, சண்முகவடிவு?''

''நான்தான், நான்தான். தடுக்குன்னு உடம்பு சிலிர்த்தாப் போல, ஏதோ தெரிஞ்சாப் போல இருக்கும். என்னா அப்படின்னு கேட்பேன். சிரிக்கும். சிரிச்ச பிறகு, நமக்கு என்ன வேணுமோ, அந்தக் கேள்வி கேட்பேன்.''

''இது எதாவது பேய், யட்சிணியா?''

''இல்லை. அந்த மாதிரியெல்லாம் இருந்தா நீங்க என் கூட குடித்தனம் பண்ண முடியாது. இது போன ஜன்மத்துல நான் என்னமோ பூஜை பண்ணிட்டு வந்துருக்கேன். இந்த ஜன்மத்துல பொறந்த போது, அந்த தெய்வத்தையும் நெஞ்சுக்குள்ள எடுத்துட்டு வந்திருக்கேன். சில சமயம், முழிச்சிக்கிட்டு அந்த தெய்வம் சொல்லுது.''

''மஞ்சள் விலை ஏறப் போவுது... தொண்ணூறு மூட்டை வாங்குன்னு சொல்லுமா..?''

''அப்படி சொல்லலை. வீடு முழுக்க மஞ்சள் மூட்டை அடுக்கி வைக்கிற மாதிரி ஒரு காட்சி வந்தது. என்னான்னு கேட்டேன். அடுக்கி வையேன்னுச்சு. அவ்வளவுதான். சூசகமாக இருந்திச்சு. நீங்க கொண்டாந்து மூட்டை அடுக்கினீங்களே... நான் எப்படி பார்த்தேனோ, அதே மாதிரி அடுக்குனீங்க. ஒரே ஒரு ஆள் நடந்து போறதுக்கு இடைவெளிவிட்டு, உச்சித் தளம் வரைக்கும் இருபது, இருபது மூட்டையா அடுக்கி, முதல் மூட்டையை எடுத்தாத்தான் கடைசி வரைக்குப் போகலாம்ங்கிற மாதிரி, நெருக்கமா, அடைசலா கனவுல எப்படி வந்துச்சோ, அதே மாதிரி நீங்களும் அடுக்குனீங்க. இது தெய்வம் காட்னதுன்னு எனக்கே இப்பதான் புரியுது. ஏங்க... டப்பாவை மாத்துங்க...''

''புரியலியே...''

''குங்குமத்துக்கு சிவப்பு. மஞ்சளுக்கு மஞ்சள் டப்பா அப்படின்னுதானே வைச்சிருக்கீங்க?''

''ஆமாம்''

''வேணாம்... மஞ்சளுக்குப் பச்சை போடுங்க.''

''ஏன், சண்முகவடிவு?''

''பச்சைதான் மஞ்சளுடைய நிறம். பசுமைதான் மஞ்சளுடைய செய்தி.''

''இப்பப் போய் மாத்துனா, அந்த தகர டப்பாக்காரன் கத்துவான். உனக்காக டை பண்ணி வைச்சிருக்கேன். உனக்காக இது புண்ணி வைச்சிருக்கேன்னு சொல்லுவான்.''

''வேணாம். அவன்கிட்ட போக வேணாம். வேற யார்கிட்டயாவது போங்க.''

''வேற யார்ன்னு தெரியலையே...''

''யாரோ ஒரு அய்யரு வருவாரு. அவர் வந்து கேட்பாரு. சரி, சாம்பிள் கொடுங்கன்னு கேளுங்க. பத்து டப்பா வந்துரும்.''

அதே மாதிரி, இரண்டு நாளுக்குள் வீட்டு வாசலில் ஒரு நாற்பது வயது ஆள் ப்ரீஃப்கேஸோடு வந்து உட்கார்ந்திருக்க, என்ன என்று சண்முகவடிவு கணவர் விசாரிக்க, அவன் தாகத்துக்குத் தண்ணீர் கொடுங்கள் என்று கேட்க, சந்தேகத்துடன் வந்து தண்ணீர் கொடுக்க, ''எனக்கு ஜலதோஷம் வருவது போல் இருந்ததால், மஞ்சள் நெடி அதிகமாக இருக்கிற இந்த இடத்தில் வந்து உட்கார்ந்தேன். சிறிது நேரம் சுவாசித்தால் ஜலதோஷம் வராது. நின்றுவிடும் என்ற நம்பிக்கை எனக்கிருக்கிறது. உங்கள் வீட்டு ஜலத்திலும் மஞ்சள் கலந்திருக்கலாம். ஆகவே, குடிக்க ஜலம் கொடுங்கள்'' என்று கேட்க, இன்னொரு சொம்பு ஜலமும் அவருக்குத் தரப்பட்டது.

பேச்சுவார்த்தையில் அவர் டப்பா செய்வதைச் சொல்ல, விலைகள் பேச, சாம்பிள் டப்பா தருவதாய் உறுதியாயிற்று. ஆச்சரியத்துடன் சண்முகவடிவை அவள் புருஷன் பார்த்தான்.

''நான் சாதாரண ஆள்தாங்க. ஏதோ உள்ளுக்குள்ளே தெரியும்ன்னு சிலது கேட்கும். எப்பவும் கேட்காது'' என்று சொன்னாள்.

மஞ்சள் கலர் டப்பா செய்கிறவனுடைய இரும்பு டை உடைந்து போயிற்று. அதைச் சொல்லாமல் தகரம் வரவில்லை, ரேட் கட்டுபடியாகவில்லை. நான் இனிமேல்

தருவேனா என்பது தெரியாது என்றெல்லாம் பேச ஆரம்பித்தான். அவனிடம் விசாரித்ததில், அவனுடைய தொழிலாளி டையைக் கீழே போட்டு உடைத்துவிட்டது தெரிந்தது. சரி, நான் வேறு இடத்தில் பார்த்துக் கொள்கிறேன் என்று சண்முகவடிவின் புருஷன் வர, புது டப்பா மிகப் பொலிவுடன், அழகாக, வட்டமாக, அதிக உயரமின்றி கைக்கு அடக்கமாக வந்தது. பளபளப்பு கூடியிருந்தது. முனைகள் கீறாமல், கனமாய் உள்பக்கம் மடிக்கப்பட்டிருந்தன. நூற்றுக்குத் தொண்ணூத்தொம்பது டப்பாக்கள் அழுத்தமாய், இறுக்கமாய் மூடின. கற்பகவல்லி பூசுமஞ்சள் என்று பெயர் மாற்றமும் செய்யப்பட்டது. மேல் மூடியில் சிரித்தபடி, மார்பு வரை இருக்கும் அழகிய கிரீடம் பெரிய தோடுகளில், ஸ்ரீசக்கரம் எழுதப்பட்ட முகம் ஒன்று இருந்தது. அந்த சிரித்த முகத்தையே வெகு நேரம் பார்த்துக் கொண்டிருக்கலாம் போல் இருந்தது.

பெயர் மாறிய பிறகு, முன்பைவிட அதிகம் ஆர்டர்கள் குவிந்தது. ஈரோடில் உள்ளவர்களே இந்த வியாபாரம் செய்ய முயற்சித்து, இந்த மஞ்சளை விட எட்டணா குறை வாக சென்னை மார்க்கெட்டில் வந்து இறக்கினார்கள். குறிப் பாய் வண்ணாரப்பேட்டையில் அதிகம் பரப்பினார்கள்.

''என்ன பண்றது, சண்முகவடிவு?'' - புருஷன் பதறினான்.

''எனக்கும் கவலையாதான் இருக்கு. என்ன பண்றதுன்னு புரியலை. இரண்டு, மூணு முறை கேட்டுப் பார்த்தேன். சாமி ஒண்ணும் பதிலே சொல்லலை. நமக்கு நடக்கிற வியாபாரம் நடந்துகிட்டுத்தானே இருக்கு. யாரும் வாங்க மாட்டேன்னு சொல்லலையே?''

''இதுவரைக்கும் சொல்லலை. இனிமே சொல்லிடுவாங் களோன்னு பயமா இருக்கு. எதை நம்பி மஞ்சள் வாங்கி இறக்கறதுன்னு தெரியலை.''

''இனிமே ஈரோடு போக வேண்டாம். ஆந்திராவுக்குப் போய் லாரி நிறைய மஞ்சள் மூட்டை வாங்கிக் கொண் டாந்துடுங்க. பத்து மூட்டை லோடு, பாதி லாரி லோடுல்லாம் வேண்டாம். முழுக்க, முழுக்க பத்து டன், அஞ்சு டன்னு வாங்கிக் கொண்டாந்துடுங்க.''

இந்த முறை வியாபாரத்திற்குக் கற்பகவல்லியும் கலந்து கொண்டாள். ''அப்பா, நான் சொல்ற மேகசின்லயெல்லாம் அரைப் பக்கம், அரைப் பக்கம் விளம்பரம் கொடுங்

கப்பா...'' - அவள் நான்கு பெண்கள் பத்திரிகையின் பெயர் சொன்னாள். இந்த விளம்பரத்தை நல்லபடியாக கொண்டு வருவதற்கு ஆட்கள் இருக்கிறார்கள் என்று அவளுக்குப் புரிந்தபோது வியந்தார்கள். வரச்சொல்லி போன் செய்தார்கள்.

வந்த ஆள் இவர்களைப் பார்த்துவிட்டு வியந்தான். ''இதுதான் கடையா? இதுதான் வியாபாரம் பண்ணுகிற இடமா? இங்கதான் அரைக்கறீங்களா? இங்கதான் பேக்கிங்கா? குடிசைத் தொழில் மாதிரியிருக்கே... இதுக்கு விளம்பரம் தேவையா?'' என்றெல்லாம் கேட்டான்.

'மஞ்சள் என்பது சுத்தம். மஞ்சள் என்பது ஆரோக்கியம். மஞ்சள் என்பது மங்களம். உங்க வீட்டில் எப்போதும் இருக்க வேண்டியது கற்பகவல்லி பூசுமஞ்சள்.' - நாலே வரியில் அழகாகப் படம் போட்டு விளம்பரம் எழுதினான். வேறு பத்திரிகையில் வேறுமாதிரி விளம்பரம் எழுதினான். 'கடவுளுக்குப் பிடித்தது கற்பகவல்லி பூசுமஞ்சள். கற்பகவல்லி பூசுமஞ்சளில் கடவுள் வாசனை' என்று விதவிதமாய் விளம்பரம் எழுதினான்.

வீட்டிலுள்ள மூவருமே இதுமாதிரி வாசகங்கள் எழுதி அவனிடம் காட்ட, அவனுக்கு அந்த குடும்பத்தின் ஈடுபாடு புரிந்துவிட்டது. 'மஞ்சள் பூசுவது நன்மை. ஏனெனில் மஞ்சள் என்பது பெண்மை' - கற்பகவல்லி எழுதிக் கொடுத்தாள். அவன் தலையில் கைவைத்து ஆசீர்வதித்தான். உடனே தன் மனைவிக்குப் போன் செய்து, ''இங்க துடியா ஒரு பெண் இருக்கு. என்னா எழுதுது, தெரியுமா?'' என்று வாசகங்கள் படித்தான். எதிர் முனையில் பாராட்டுவது கேட்டது.

'மஞ்சளில் இருப்பது தூய்மை. மஞ்சள் என்பது தாய்மை' என்று சண்முகவடிவு எழுதிக்கொடுததாள். அவன் சாஷ்டாங்கமாக காலில் விழுந்தான். இதையும் மனைவியிடம் சொன்னான். பத்திரிகைக்குக் கொடுத்தார்கள். காலண்டர்கள் அச்சடித்தார்கள். தகர போர்டுகள் பெயிண்ட் செய்தார்கள். ஒரு பெண்கள் பத்திரிகையிலிருந்து பேட்டிக்குக் கூட வந்தார்கள். சண்முகவடிவுதான் மானேஜிங் டைரக்டர் என்று கைகாட்டப்பட்டாள். வந்தப் பெண் சண்முகவடிவிடம் டேப் ரிக்கார்டர் நீட்டி, கேள்விகள் கேட்கத் தொடங்கினாள். ஆரம்பத்தில் சற்று தடுமாறிய சண்முகவடிவு, பிறகு மடமட-வென்று பதில்

சொன்னாள். உற்சாகமாகப் பேசினாள்.

''ஒருவேளை உங்கள் புருஷன் உங்களைவிட்டு தனியா பிரிஞ்சு போய், தனியா பிசினஸ் ஆரம்பிக்கிறார்ன்னு வைச்சுக்குங்க... அப்ப என்ன பண்ணுவீங்க..?''

''ஒரு பொம்பளை அப்படியெல்லாம் நினைக்கக் கூடாது. அது தப்பு.''

''புருஷன் பிரிஞ்சி போய்ட்டா, அப்புறம் என்ன பிசினஸ்?''

''புருஷன்தான் பிசினஸ்... அவர் பிரியும்படியா, நாம ஏன் நடந்துக்கணும்? நாம சரியா இருந்தா, அவர் ஏன் பிரியறாரு? பிரியறதுக்கா கல்யாணம் பண்றோம்? ஏங்க, இந்தக் கேள்வியை உங்ககிட்ட கேட்கறேன்... நீங்கள் என்ன பதில் சொல்வீங்க..?''

மனைவியின் பதில் தெரியாமல் உள்ளே நுழைந்த சண்முகவடிவின் புருஷனுக்கும் டேப் ரிக்கார்டர் காட்டப் பட்டது. ''மன்னவி அப்படிங்கிற ஒரு பெண்மணியை பேசி, சமாளித்து, அவளுக்குப் புரிய வைச்சு, அவ யாருன்னு புரிஞ்சிகிட்டு... இந்த சாதாரண ஒரு விஷயம் கூட நம்மால செய்ய முடியலேன்னா வியாபாரம் எப்படி நடத்த முடியும்? வாழ்க்கை எப்படி நடத்த முடியும்? பிரியறதுங்கிற பேச்சே கிடையாது. பிரியற பொம்பளையா இருந்தா, ஓடற ரயில்ல பார்த்துப் பேசிட்டுப் பிரிஞ்சி போயிருப்பா. பஸ் ஸ்டாண்டுல யார் அது அப்படின்னு பார்க்க வைச்சிருப்பா. மறந்து போக வைச்சிருப்பா. பிரியற பொம்பளை எதிர வந்து, தோள்ல சாஞ்சு எதுக்கு கொஞ்சி பேசணும்? காலையில எழுந்து எனக்கு சோறு போட்டு, தானும் ஏன் சாப்பிடணும்? ஒண்ணா இருக்கணும்தானே இந்த முடிச்சு போட்டிருக்கு. பிரியறதைப் பத்தி நான் நினைக்கவே யில்லை.''

இரண்டு தலைப்புகளிலும், இரண்டு விஷயங்களில் கட்டம் போட்டு எழுதி, அட்டைப் படத்தில் சண்முக வடிவின் படம் போட்டு அற்புதமாய் அந்த லேடீஸ் மாகசினில் வர, அந்த இண்டர்வ்யூவைப் பாராட்டி, இரண்டு, மூன்று கடிதங்கள் கூட வீட்டுக்கு வந்தன. கற்பகவல்லி ப்ளஸ் ஒன் படித்துக் கொண்டிருந்த நேரமிது. கோயிலுக்கென்றும், விசேஷத்திற்குமென்றும் ஒரு படி டப்பா தனியாக பேக் செய்துவிட்டார்கள். இருப்பினும், அவ்வப்போது அதையும் கேட்டுக்கொண்டுதான்

இருந்தார்கள். ப்ளஸ் டூ படிக்கும் போது கற்பகவல்லியின் பள்ளிக் கூடத்தில் பெண் குழந்தைகள் எல்லோரையும் நன்றாகப் படிக்க வேண்டுமென்று மாங்காடு கோயிலுக்குக் கூட்டிக் கொண்டு போக, இரண்டு ஒரு படி டப்பா சண்முகவடிவு கொடுத்தனுப்பினாள்.

குழந்தைகள் எல்லோரையும் உட்காரச்சொல்லி, மஞ்சளை அழகாக நீருற்றிப் பிசைந்து உருண்டையாக்கி, திருமேனி முழுவதும் அழகாக அப்பி, கண்கள் எழுதி, பொட்டு வைத்து, பூமாலை ஒன்று போட்டு தீப தூபம் காட்டிய போது எல்லோருக்கும் ஒரு பரவசம் கிளம்பியது. அந்த மஞ்சள் சாற்றலின் மீது, மஞ்சள் நீர் கரைத்துவிட, இந்த மஞ்சள் கரைந்து தேவியின் முகம் அழகாக, செழிப்போடு தெரிய இரண்டு, மூன்று பேருக்குப் பரவசமும் ஏற்பட்டது. ''நான் எழுதித் தரேன், இந்த தடவை அத்தனை பேரும் பாஸ்ன்னு. எந்த வருஷமும் இல்லாத இந்த வருஷம் நம்ம பள்ளிக்கூடம் நூத்துக்கு நூறு பர்சன்ட் நம்ம பள்ளிக்கூடம் வாங்கப் போவுது.'' - ஒரு மாணவி டீச்சரைப் பார்த்து உரக்கக் கத்தினாள். டீச்சர் அந்த மாணவியைப் பார்த்துக் கைகூப்பினாள்.

இன்னொரு பள்ளிக்கூடம் இதே போல, மஞ்சள் வாங்கிக்கொண்டு மாங்காட்டுக்குப் போய் அபிஷேகம் செய்துவிட்டு வந்தது. பரீட்சை எழுதிய நூற்றுப் பனிரெண்டு பேரும் பாஸ் என்று செய்தி வந்த போது, பள்ளிக்கூடம் ஆரவாரத்தில் கிடுகிடுத்தது. இருபது டீச்சர்கள் வீட்டுக்கு ஓடி வந்தார்கள். கற்பகவல்லியைக் கட்டிக்கொண்டார்கள். போட்டோ எடுத்துக் கொண்டார் கள். மஞ்சள் கேட்டு, ஆளுக்கு இரண்டு டப்பா, மூன்று டப்பா என்று கொண்டு போனார்கள். ''கற்பகவல்லியை மேல படிக்க வைங்க. பி. காம் படிச்சிட்டு, சி.ஏ. செய்யட்டும்'' என்று ஒரு டீச்சர் உரக்கச் சொல்லிவிட்டுப் போனாள்.

''என்னடி... உன் டீச்சர் சொல்றாங்களே... காலேஜுக்குப் போறியா?''

''வேணாம்மா' ''வீட்டுல இத்தனை வேலைகள் இருக்க சொல்ல, சும்மா பஸ்ஸைப் பிடிச்சி காலேஜுக்குப் போய், திரும்ப காலேஜிலிருந்து பஸ் பிடிச்சி வீட்டுக்கு வந்து நிறைய டைம் வேஸ்ட்டாவும்''

''மொபெட் வாங்கித் தரச் சொல்றேன்டி... சர்ன்னு போய்ட்டு சர்ன்னு வந்துடு''

''வேணாம். சி.ஏ. படிக்காமயே நாம கணக்கு வழக்கு செய்யலியா? நம்மால இந்த பேக்டரியை நல்லா நடத்த முடியும். இன்னும் கூடுதலாவே விக்க முடியும். நான் காலேஜுக்குப் போகலைம்மா'' - கற்பகவல்லி திடமாய் மறுத்துவிட்டாள். ஆனால் ஹிந்தி கற்றுக்கொண்டாள்.

போட்டியாளர்கள் விதம் விதமான சலுகைகள் கொடுத்தார்கள். சரக்கு வாங்கிக்கிட்டுப் போங்க. அப்புறம் காசு கொடுங்க என்று பெரிய அஸ்திரத்தை அனுப்பினார்கள்.

''வந்து டப்பா, டப்பாவா இறக்கிட்டுப் போறான். எங்களுக்கு கற்பகவல்லி வேண்டாம்'' - ஒரு நாடார் சொல்ல, சண்முகவடிவின் புருஷன் உற்றுப் பார்த்தான்.

''நீ எங்கிட்ட வந்து கெஞ்சுவ. அப்ப சொல்றேன்'' என்று எழுந்து போனான். ஊழியர்களை வைத்து மஞ்சள் தயாரிப்பதால், மற்றவர்களால் நேர்மையாக செயல்பட முடியவில்லை. ஊழியர்கள் அளவு குறைவாகவும், கலப்படமும் செய்யத் துவங்கினார்கள். மஞ்சள் அரைபடுவது எளிதல்ல. அரைப்பட்ட மஞ்சளை சலித்து எடுக்க வேண்டும். சலித்து எடுத்து, துணியில் மறுபடியும் போட்டு உலுக்கி, மிக நுண்ணியதாய் அரைபட்டதையே டப்பாவில் அடைக்க வேண்டும். கடைசியில் என்ன செய்தாலும், அரைபடாமல் திப்பி, திப்பியாய் சில விஷயங்கள் கிடைக்கும். அந்த விஷயத்தை எந்தக் காரணம் கொண்டும் மஞ்சளில் கலந்துவிடக் கூடாது. மிகக் கவனமாக அதை அப்புறப்படுத்த வேண்டும். போட்டியாளர்கள் மஞ்சளில் பல திப்பிகள் இருந்தன. நறநறப்பு இருந்தது. மஞ்சள் சரியாக அரைபடாததால் உடனே நீரில் ஊறி, கரைய மறுத்து சேறு போல் நுரைத்துக் கொண்டது.

''மஞ்சள்ல போய் ஏமாத்துறானுங்கப்பா... மானங் கெட்டவங்க. தூத்தெறிக்க... கற்பகவல்லி கொடுப்பா'' என்று கேட்டு வாங்கினார்கள். அந்த சில்லறை வியாபாரியான தூத்துக்குடி நாடார் ஒரு நாள் காலை வண்ணாரப் பேட்டை வீட்டுக்கு வந்தார். கதவு திறந்ததும், தடலேன்று அப்பாவின் காலில் விழுந்தார். ''பேசினது தப்பு. எனக்கு நூறு டப்பா வேணும்'' என்று காசு நீட்டினார்.

அப்பா சிரித்தார். ''என்னடி பண்ணலாம்?'' - மெல்ல வந்து சமையலறையில் கூப்பிட்டார் அம்மா கண்மூடி யோசித்தாள்.

''மஞ்சளை அவர் எதிர்க்க வைச்சு, இனிமே வேற ஒருத்தன் மஞ்சளை வாங்க மாட்டேன். இந்த வருஷம் பூரா உங்க மஞ்சள்தான் விப்பேன்னு சத்தியம் பண்ணச் சொல்லுங்க''

அப்பா சொல்ல, தூத்துக்குடி நாடார் தயங்க, ''அப்ப உன்னோட வியாபாரமில்லை'' என்று அப்பா மஞ்சளை எடுத்துக்கொண்டு போக, அவர் மறுபடியும் முன்னேறி, மஞ்சள் மீது தொட்டு ''இனிமே உங்க மஞ்சள் மட்டுமே விப்பேன். இது இந்த வருடம் முழுதும் நான் கொடுக்கும் உத்தரவாதம்'' என்று சத்தியம் செய்தார்.

''இருநூறு டப்பாவா கொடுத்திடுங்கோ'' என்று உடனே எண்ணிக்கையை ஏற்றினார். வீடு சாப்பிடுகிற போது, சிரித்து சிரித்து இந்த விஷயத்தைப் பேசியது.

''அரவை மிஷினில் பல் மாத்திடுங்க. சலிக்கிற இடத்தில் சின்னப் பொண்ணுங்களா போட வேண்டாம். முத்துன பொண்ணுங்களா போடுங்க. சின்னப் பொண்ணுங்க பொறுப்பில்லாம நடந்துக்கும். வயசான பொண்ணுங்க மஞ்சளை தப்பா அனுப்ப மாட்டாங்க.'' - சண்முகவடிவு கட்டளையிட்டாள். கற்பகவல்லி வேலை செய்கிற இடத்தில் அரவை முடிந்து, சலித்தலை செய்கிற போது, பாட்டு கேட்பதற்கு ஏற்பாடு செய்தாள். இரண்டு ஸ்பீக்கரும், டேப் ரிக்கார்டரும் வைத்து சாமி பாட்டும், சினிமா பாட்டுகளும் ஒலிக்க வைத்தாள். இடது வலதாக, பாட்டு கேட்டபடி வேலை செய்தார்கள். கை நிறைய கூலி வாங்கிக்கொண்டு சந்தோஷமாய் வீடு போனார்கள்.

ஒரு வட இந்திய வியாபாரம் வந்து திணறடித்தது. ''இரண்டு லட்சம் டப்பா வேணும்'' என்று பம்பாய் வியாபாரி வீட்டுக்கு வந்து இறங்க, வீடு திகைத்தது.

''எப்பங்க வேணும்?''

''உடனே''

''அப்படியெல்லாம் மஞ்சள் விக்க முடியாதுங்க.'' - அப்பா சற்று அலுப்போடு சொன்னார்.

''ஏன்?''

''என்கிட்ட இருக்கறது ரெண்டு மிஷினு. பத்து ஆளு. ரெண்டு லட்சம் வேணும்ன்னா ஒரு மாசம் டயம் ஆகும். மத்த இடத்துக்கு சரக்கு போறது இதனால கெட்டுப் போகும். அதனால இரண்டு லட்சமெல்லாம் வந்து, ஒரேயடியா, ஒரே பன்ச்சா கேட்காதீங்க. அம்பதாயிரம்

தர்றதுக்கு ஏற்பாடு பண்றேன்.'' என்று சொல்லி, அம்பதாயிரத்துக்கு காசு வாங்கினார்.

''ராத்திரி அரைக்க முடியாது. பக்கத்துல இருக்கறவங் கல்லாம் வந்து மிஷின் சத்தம் வருது, அப்படின்னு தொந்தரவு பண்ணுவாங்க. அதனால பகல் முழுதும் அரைச்சி வைச்சிட்டு, ஒவ்வொரு ராத்திரியும் பேக்கிங் நடக்கணும். பேக்கிங்குக்கு கையில எடுத்துப் போடாத, மிஷினே டப்பா அள்ளிப் போடறா மாதிரி, டப்பாவை எடுத்து மூடி, சலஃபன் டேப்பை சுத்தணும். டப்பாவை அடுக்கி மிஷினுக்குள்ள அனுப்பனும்'' என்று அவர் ஆட்களிடம் விவரிக்க, ஆறு பெண்களும் இரவு வந்து வேலை செய்வதாய் தெரிவித்தார்கள். பகல் நேரம் வீட்டு வேலைகள் செய்ய அவர்களுக்கு இது தோதாக இருந்தது. இரவு நேரம் கூடவே கூலி கிடைக்கும்.

''கூலி அதிகமாகுமேப்பா... நமக்கு நஷ்டம் வருமா?''

''இல்லைம்மா... அம்பதாயிரம் டப்பாங்கிறபோது இது பெரிசில்லே. டர்ன் ஓவர் அதிகமாக இருக்குறதால, இந்த செலவு அடிபட்டுப் போச்சு. ராத்திரி பதினொன்றரை மணிக்கு இட்லியும், காபியும் கொடுக்கணும். அதே மாதிரி விடிகாலை மூணு மணிக்கு ஒரு டீ கொடுக்கணும். வாட்ச்மேன் உட்பட, பதினைந்து பேருக்கு இது தவறாத நடக்கணும். ஓட்டல்ல வாங்கிக் கொடுக்கறதுக்கு இஷ்டமில்லை. நான் ஒரு ஆட்டோக்கார பையனை ஏற்பாடு பண்றேன். கரெக்டா பத்தரை மணிக்கு டிபன் காரியர்ல பதினைஞ்சு பேருக்கு இட்லியும், பெரிய பிளாஸ்க்குல காபியும் போட்டு அனுப்பிச்சிடு. அந்த பையன் கொண்டாந்து கொடுத்துட்டு ஐம்பது ரூபா வாங்கிட்டுப் போறான்''

முதல் நாள் கேசரியும், இட்லியும் கொடுத்தனுப்ப, மிக சந்தோஷமாய் அவர்கள் சாப்பிட்டு வேலை செய்யத் துவங்கினார்கள். நினைத்ததைவிட சற்று வேகமாய் வேலை செய்தார்கள். மறுநாள் சற்று சோர்வானார்கள். என்ன வென்று கற்பகவல்லியின் அப்பா விசாரிக்க, ''பகல் முழுக்க வேலையா..? சரியா தூக்கமில்லை'' என்றார்கள். சண்முகவடிவு கண்ணை மூடிக்கொண்டாள்.

''ஒண்ணு பண்ணலாமா?''

''சொல்லு''

''இவங்களை வந்தவுடனே தனியா ஒரு ரூமுல ஃபேனைப் போட்டு, தலைக்கு மனைப் பலகை கொடுத்து படுக்க வைச்சிடுங்க. ஒரு மணி நேரம், ஒன்றரை மணி நேரம் தூங்கட்டும். அதுக்குப் பிறகு, தபதபன்னு வேலை யாயிடும். எட்டு மணிக்கு வேலை ஆரம்பிக்கிறதுக்குப் பதிலா, ஆறு மணின்னு சொல்லிடுங்க. ஆறு மணியி லிருந்து ஏழு, ஏழரை வரைக்கும் தூங்கட்டும். ஏழரைக் கப்புறம் உள்ள வரட்டும். உழைக்கிற பொம்பளைக்கு ஒன்றரை மணி நேர தூக்கம் போதும். பிசாசாய் எழுந்துடுவாங்க.''

சண்முகவடிவு சொன்னது போலவே ஆ பிற்று. அப்படி ஒரு ஆழ்ந்த தூக்கம் அவர்கள் தூங்கியதே இல்லை. இரண்டு பக்கமும் ஃபெடஸ்டல் ஃபேன்கள் காற்றை உமிழ, தலைக்கு மனைப் பலகையும், கீழே மெத்தென்ற பாயும் போட்டு அவர்கள் புடவையைப் போர்த்திக்கொண்டு, சுகமாகத் தூங்கினார்கள். வீட்டின் தொந்தரவில்லாமல், வீட்டைச் சுத்தியிருக்கும் கொசுக் கடி தொந்தரவில்லாமல், மஞ்சள் நெடியில் காற்று உற்சாகமாக வீச, ஆழ்ந்து நிம்மதியாகத் தூங்கினார்கள். எழுந்து முகம் கழுவிக் கொண்டு, பவுடர் போட்டுக் கொண்டு, நெற்றிக்கு இட்டுக் கொண்டு, சிறிது பூ வைத்துக் கொண்டு சிங்காரமாய் வேலைக் கூடத்துக்குள் நுழைந்தார்கள். உற்சாகமாய் வேலை செய்தார்கள்.

''நாலு மணிக்குள்ள வேலை முடிச்சிட்டீங்கன்னு வைச்சுக்குங்க... மறுபடியும் ரூமுக்குள்ள போய், ஃபேனைப் போட்டுக்கிட்டு தூங்கலாம். எனக்கு ஆட்சேபணையில்லை.'' - கற்பகவல்லியின் அப்பா சொல்ல, வேலை இன்னும் வேகமாக நடந்தது. சொன்ன நேரத்தைவிட முன்பாகவே ஐம்பதாயிரம் பூசுமஞ்சளை பம்பாய்க்கு அனுப்ப முடிந்தது.

''கொஞ்சம் தாமதிச்சே அனுப்புங்களேன். இல்லேன்னா இந்த சேட்டுப் பசங்களுக்குப் புரியாது. ரொம்ப லேசான வேலை அப்படின்னு தப்பா நினைச்சுக்குவாங்க.''

''இல்லைங்க.... எனக்கு அது பத்தி கவலையில்லை. இடத்தை அடைச்சிக்கிட்டிருக்கு. விற்பனைக்குப் போனா நல்லதுதானே. அது தவிர, தேவையில்லாத நம்மகிட்ட ஏன் ஒரு வாரம் தங்கணும்? யார் உபயோகப்படுத்தறாங்களோ, அவங்க இடத்துக்குப் போயிரட்டும். அதுதானே நல்லது.''

சரக்கை நிறுத்தி, அட்டைப் பெட்டியை உடைத்து, டப்பாவை எடுத்து, சலஃபன் டேப்பை அறுத்து, மூடியைத் திறந்து முகர்ந்து பார்த்தபோது நெடி முகத்தில் அடித்தது. மூன்றே நிமிடத்தில் அந்த ஏ.சி. அறை முழுவதும் மஞ்சள் நெடி பரவி, என்ன என்று புருவம் உயர்த்தினார்கள். ஓடி வந்து ஆவலாகப் பார்த்தார்கள். அந்த மணத்துக்கு இருந்த வரவேற்பை அந்த வியாபாரி உற்றுக் கவனித்துக் கொண்டான். பிற்பகல் ஒரு மணிக்கு சென்னைக்குப் போன் போட்டு, அடுத்த ஒரு இலட்சம் எப்போது என்று கேட்டான். டிமாண்ட் ட்ராப்ட் நம்பர் சொல்லி, நாளை காலை உங்களை வந்து சேரும் என்று தெரிவித்தான். வாழ்க்கையில் மிகப் பெரிய ஒரு தொகை ஒற்றைக் காகிதத்தில் எழுதப்பட்டு கற்பகவல்லியின் அப்பாவிற்கு வந்தது. அதை சாமிப் படத்தின் முன் வைத்து, எல்லோரும் 'உன் அருள், உன் அருள்' என்று கடவுளை நோக்கிக் கைகூப்பினார்கள்.

''வேலை செய்யற பொம்பளைங்களுக்கு எதுனா வாங்கித் தரணும், கற்பகவல்லி''

''அப்பா, சும்மா புடவை, புடவைன்னாக்க அதுங்க எப்படி, எங்க கட்டிகிட்டு வர்றது? மஞ்சளாகும். நான் சொல்றதைக் கேளேன். காதுக்குப் போட்டுக்கிற விஷயம் இருபத்தைஞ்சு ரூவா. மூணு விஷயம் வாங்குவோம். ஒரு நெய்ல் பாலீஷ் வாங்குவோம். ஒட்ற பொட்டு வாங்கு வோம். சும்மா ஒரு டப்பால போட்டுக் கொடுப்போம், அப்பா. ரொம்ப சந்தோஷமாயிடும், அதுங்களுக்கு.''

''ஆம்பளைங்க இருக்காங்களே...''

''இதையே கொடுப்பா. அவங்க வீட்டுக்கு எடுத்துட்டுப் போய், பொண்டாட்டிக்குக் கொடுப்பான். பொண்டாட்டி வேலைக்குப் போடா, வேலைக்குப் போடான்னு துரத்துவா. நான் சொல்ற விஷயம் நல்லா வொர்க் அவுட் ஆகும் பாரேன்.''

அப்படியே ஆயிற்று. எல்லோருக்கும் பரிசு பிடித்திருந்தது.

''கற்பகவல்லி, இது உன் வேலையா..?'' - ஒரு பெண்மணி கண்டுபிடித்துக் கேட்டாள்.

சண்முகவடிவின் குடும்பம் சந்தோஷமாக முன்னேறி யது. அதே சமயம் அதைப் பின்னுக்கு இழுக்க சில பேர் திட்டமிட்டார்கள்.

சண்முகவடிவின் புருஷனின் மாற்றாந்தாய் மகன் தண்டையார்பேட்டையில் குடித்தனம் நடத்திக்கொண்டிருந்தான். இந்த வீட்டில் ஆணும் சரியில்லை; பெண்ணும் சரியில்லை. பெண்ணால்தான் தான் சரியில்லை என்று ஆண் சொல்ல, ஆனால்தான் தன் வாழ்க்கை பாழாயிற்று என்று பெண் சொல்ல அவர்கள் இரண்டு பேரால் குழந்தைகள் கண்ணெதிரே சிறிது, சிறிதாய்ப் பாழானார்கள். தன் குற்றம் என்ன என்று கண்டுபிடித்து விலக்கிக் கொள்ளுதல் எல்லோருக்கும் நிகழாது. அதைச் செய்யும் பொறுமை எல்லோருக்கும் வந்துவிடாது. இறையருள் இருப்பின்தான் பொறுமை ஏற்படும். பொறுமை இருப்பின்தான் இறை நம்பிக்கை ஏற்படும். இந்த வீடு இறைவன் மீது நம்பிக்கையில்லாதது. இறை வழிபாடைக் கேலியாக நினைக்கிற வீடு.

''தின்றதுக்குத்தான் பண்டிகை. தின்னுட்டுப் போவோம். இதுக்கு நடுவுல சாமி என்ன?'' - மகன் கேட்க, தாய் சிரிப்பாள். தந்தை தவறு என்று சொன்னால், தாய் ''என்ன தப்பு?'' என்று கேட்பாள்.

''என்னடா.. குடிச்சிட்டு வரே..? செருப்புப் பிஞ்சுடும்'' என்று மகனைக் கண்டிப்பாள்.

''என்ன... குடிச்சா என்ன..? ஆம்பளைங்கறவன் உழைக்கிறவன். அவன் குடிக்கலாம், தப்பில்லை'' - தந்தை மகனுக்கு ஆதரவாய்ப் பேசுவார். இங்கே மகனுக்கு ஆதரவாய்ப் பேசுவது என்பதைவிட, மனைவியை எதிர்த்துப் பேசுவது என்பது சந்தோஷகரமான விஷயமாயிற்று.

''நீயெல்லாம் ஒரு அப்பனா? தூத்தெறிக்க... என்ன சொல்லித் தரே, புள்ளைக்கு? உனக்கு இராத்திரி எட்டு மணியாச்சுன்னா தண்ணி வேணும். தண்ணி உள்ள போனா, பொம்பளை வேணும். தண்ணி போட்டுட்டு, பொம்பளை கிட்ட வர்றவன் மரியாதையுள்ள ஆம்பளைதானா? அவன் பொம்பளையை மதிச்சா வரான். தண்ணி தூண்டிவிட்ட வெறில வரான். ஒரு நாளைப் போல, தண்ணி போட்டுட்டு வந்து என் புடவையை இழுக்கறியே... நீ நல்லா இருப்பியா?''

பிள்ளை ஒட்டு கேட்டது. மனசுக்குள் கற்பனை விரிந்தன. எளிதில் கெட்டுப் போனது.

அந்தக் குடும்பம் ஹார்பரில் லோடு அடிக்கும் காண்ட்ராக்ட் எடுத்திருந்தது. ஹார்பர் பல பகுதிகளாகப் பிரிக்கப்பட்டிருந்தது. ஒரு பகுதியில் சுமைகளை இறக்குவதற்கும், ஏற்றுவதற்கும் அவர்கள் காண்ட்ராக்டர் களாக இருந்தார்கள். அவர்கள் சொல்லும் ஆட்கள்தான் உள்ளே வர முடியும். இது குத்தகையான விஷயம் என்றாலும், இதில் எழுதப்படாத சட்டங்கள் அதிகம் இருந்தன. வன்முறைதான் இதற்குப் பல சமயம் தீர்வாக இருந்தது. அந்தக் குறிப்பிட்ட பிளாக்கில் வேலை செய்யும் நூற்றிநாற்பது தொழிலாளர்களை சமாளிப்பது என்பது வெறும் பேச்சு சாமர்த்தியத்தால் மட்டும் முடியாது. இறங்கி பளீரென்று முகத்தில் அடித்தால்தான், சில விஷயங்கள் நடக்கும். அப்படி அடிப்பதில் அப்பனும், பிள்ளையும் மிகத் தேர்ச்சி பெற்றிருந்தார்கள்.

சில சமயம் அடிதடி ரகளை பெரிசாகி, காவல்துறை வரை போய், கோர்ட், கேஸ் என்று அவர்கள் அலைவ தெல்லாம் வாழ்க்கையில் ஒரு பகுதியாக அதை நினைத்துக் கொண்டார்கள். கற்பகவல்லியின் வீட்டின் அமைதியான சுபாவத்திற்கும், கற்பகவல்லியின் பெரியப்பாவான கபாலிக்கும் மிகப் பெரிய வித்தியாசமிருந்தது. கபாலியின் மூத்த மகன் கணேசன், அப்பாவைவிட இந்த அடிதடி, ரகளையில் அதிகம் பெயர் வாங்கியிருந்தான். தண்டை யார்பேட்டையில் ஒரு சிறிய தாதாவைப் போல் விளங்கினான்.

''ஏய்... யார்றா அந்தப் பொண்ணு? உன் முறைப் பொண்ணா..?'' - கற்பகவல்லி போனதும், அவன் நண்பர்கள் திடுக்கிட்டு எழுந்து கேட்டார்கள். அவள் நடந்து போவதையே வியந்து பார்த்தார்கள்.

''இல்லைடா... இது சித்தப்பா பொண்ணு. தங்கச்சி முறை''

''சே... போச்சுடா. இவ்வளவு அழகா ஒரு தங்கச்சி இருக்குன்னு எங்கிட்ட சொல்லவேயில்லையே...''

''கத்தி எடுத்தேன்... சருக்கு, சருக்குன்னு கோடு போட்டுடுவேன். இந்தப் பேச்சு இன்னியோட கடைசி தடவை. விட்டுடுங்க. அவளைப் பத்தி யாரும், எதுவும் பேசறது எங்களுக்குப் பிடிக்காது.'' - அவன் திட்டவட்ட மாக எச்சரித்தான். அவனுக்குப் பயந்து கற்பகவல்லியைப் பற்றி அவன் கூட்டத்திலும் சரி, வண்ணாரப்பேட்டையிலும் சரி, யாரும் பேசுவதும் இல்லை.

டிபன் பாக்சைத் தேய்க்கும் போது, அடுக்குகளை இணைக்கும் பட்டைக் கம்பி பட்டென்று உடைந்துவிட்டது. இன்னொன்று வாங்க நேரமில்லை. அடுக்கி எடுத்துக் கொண்டு, அதன் மீது கை வைத்தபடி, கற்பகவல்லி ஆட்டோவில் ஏறிக்கொண்டாள். மடியில் பிளாஸ்க்கை வைத்துக் கொண்டாள். தெரிந்த ஆட்டோதானே என்று பதினொரு மணிக்கு ஏறினாள். ''பத்து நிமிஷத்தில் தொழிற் சாலைக்குப் போய்விடுகிறேன், கவலை வேண்டாம்'' என்று சொன்னான். வண்டியை ஓட்டியவனுக்கு அன்று போதாத நேரம். தனியாய் பதினொரு மணிக்கு கற்பகவல்லியோடு பயணம் செய்வது அவனுக்கு ஒரு போதையைக் கொடுத்திருக்கக் கூடும்.

''இது என் சொந்த வண்டி, கற்பகவல்லி'' என்று பேச ஆரம்பித்து, ''உன்னை நான் விரும்புகிறேன்... என்னை நீ விரும்புகிறாயா..?'' என்று தெருவோரம் நிறுத்திவிட்டு, திரும்பியபடி கேட்டான்.

கற்பகவல்லி பதறினாள். ''இப்படியெல்லாம் பேசாதீங்க. நீங்க எவ்வளவு நல்லவங்க. எவ்வளவு மரியாதையா பகல்ல பேசுனீங்க. டக்குன்னு நடுராத்திரியில, தெருவோரத்தில நிறுத்தி இப்படி பேசுறீங்களே... கொண்டு போய் எங்க இடத்துல விட்டுடுங்க'' என்று கேட்க,

''உன்னைக் கெஞ்சிக் கேட்டுக்கறேன், கற்பகவள்ளி'' என்று அவன், அவளைத் தொட முற்பட, அவள் வாய் விட்டு கத்தினாள். தெருவில் சைக்கிளில் போனவர்கள் நின்று ''என்னப்பா..?'' என்று விசாரித்தார்கள். அதில் ஒருவர் கற்பகவல்லியின் தந்தைக்குத் தெரிந்தவர்களாக இருக்க, பளிச்சென்று அவன் பின்தலையில் அடித்து, துரத்தி அவளை வேறு ஆட்டோவில் ஏற்றி, அந்த ஆட்டோவில் அவரும் பயணப்பட்டு ஜாக்கிரதையாய் தொழிற் சாலையில் சேர்த்தார்.

மறுநாள் காலை கணேசனுக்கு இது தெரியவர, அவன் ஆட்டோ ரிக்ஷாக்காரனை சல்லடை போட்டு தேடினான். பிற்பகல் ஒரு மணிக்கு இழுத்து வந்து வீட்டு வாசலில் போட்டான். அந்த ஆட்டோக்காரன் முகம் கண்டு, கண்டாய் வீங்கியிருந்தது. அவனால் கைகூப்ப முடியவில்லை. நிற்க முடியவில்லை. காலில் விழுந்து வணங்கியதும், எழுந்து நிற்க முடியவில்லை. வாய்விட்டுக் கதறி அழுதான்.

''ஏதோ ஒரு போதையில தப்பா சொல்லிட்டேன், சார். இனிமே அப்படி சொல்ல மாட்டேங்க... யார் கூடயும் அப்படி பேச மாட்டேங்க... தயவு செய்து என்னை மன்னிச்சிருங்க...'' என்று அழுதான். கணேசன் தெருவில் இறங்கினான்.

''இந்தத் தெருப் பொண்ணுங்களை எவனாவது தப்பாப் பேசறான்னு தெரிஞ்சா, மாறு கால், மாறு கை வாங்கிடுவேன். ஞாபகம் இருக்கட்டும்'' என்று முன்னும், பின்னும் நடந்தபடி சொன்னான்.

கற்பகவல்லிக்கு அது பிடிக்கவில்லை. கற்பகவல்லி யின் அம்மாவுக்கும் அது பிடிக்கவில்லை. கற்பகவல்லி யின் தந்தை மட்டும் அவனை சமாதானப்படுத்தி, அவனை வீட்டுக்கு அனுப்பினார். கற்பகவல்லியின் வீட்டுக்கு சகஜமாய்ப் போய் வந்துகொண்டிருந்த நண்பர்கள் சற்றுக் குறைந்து போனார்கள். அந்த நேரம்தான் பெண் பார்ப்பதற்கு ஆள் மேல் ஆள் அனுப்பி சிவசாமி வீட்டில் நச்சரித்தார்கள். வந்து பார்த்துவிட்டுப் போனார்கள். பிடித்திருக்கிறது என்று அங்கேயே சொன்னார்கள். திருமணத்தை அப்புறம் வைத்துக்கொள்ளலாம், நிச்சய தார்த்தத்தை இப்போதே நடத்துவோம் என்றார்கள்.

நிச்சயதாம்பூலத்திற்கு பெரியப்பா கபாலியோ, அவருடைய மகன் கணேசனோ வரவில்லை. வேலை அதிகமிருக்கிறது என்று சொல்லிவிட்டார்கள். கற்பகவல்லி யின் வீட்டிலிருந்து டிபன் காரியர் மட்டும் அவர் வீட்டுக்குப் போயிற்று.

சிவசாமி வந்து போக ஆரம்பித்தான். கற்பகவல்லி யோடு பேச ஆரம்பித்தான். கைகள் கோர்த்து சிரிக்க ஆரம்பித்தான். மெல்ல தோளில் கைபோட்டு, கண்ணாடி முன்பு நின்று, ''நாம் நல்ல ஜோடிதானே..?'' என்று கேட்க ஆரம்பித்தான். கற்பகவல்லி அம்மாவிடம் ஓடிப்போய் இப்படி நடக்கிறது என்று சொன்னாள். அம்மா கண்மூடி யிருந்தாள். ''இருக்கட்டும்டி... அவனுக்கும் பிடிச்சிருக்கு... உனக்கும் பிடிச்சிருக்கு. நாங்கள்லாம் அனுபவிக்காத விஷயம். நீ அனுபவிச்சா தப்பா? ரொம்ப ஜாக்கிரதையா இருக்கணும். அத்துமீறாத நிதானமா நடந்துக்கோ. அந்தப் பழக்கமும் உனக்கு வரட்டும்.''

தான் அம்மாவிடம் இதைப் பற்றி கேட்டதையும், அவள் சரி என்று அனுமதி கொடுத்ததையும் சிவசாமியிடம்

கற்பகவல்லி சொல்ல, சிவசாமி திகைத்தான். ''இதெல்லாம் கூடவா போய் உங்க அம்மாகிட்ட சொல்வாங்க?''

''நான் எங்க அம்மாக்குத் தெரியாத எதுவுமே பண்ண மாட்டேன். பெத்தவங்க்கிட்ட எதுக்கு மறைக்கணும்? மறைக்கும்படியா ஒரு விஷயம் ஏன் செய்யணும்? அவங்க பாருங்க, எவ்வளவு நல்லவங்கன்னு? வேணாம்ன்னு சொல்லவேயில்லை. ஜாக்கிரதையா நடந்துக்கோன்னுதான் சொன்னாங்க. நாம ஜாக்கிரதையா நடந்துக்கிட்டா நல்லாதானே இருக்கும்.''

அவனுக்கு சண்முகவடிவின் மீது மரியாதை அதிகரித்து விட்டது. அவன் இதைத் தன் வீட்டில் போய்ச் சொல்ல, அவர்கள் வீடும் மிக சந்தோஷமாய் இதை வியந்து பாராட்டியது.

''ஜாக்கிரதையாய் நடத்துக்கடா... எவ்வளவு பெரிய மனசு பண்ணி அந்த பொம்பளை சரி, சந்தோஷமா இருங்க அப்படின்னு சொல்றா. அவ மனசு கோணாத நடந்துக்கங்க. அதான் முக்கியம். இவனுக்கு திருமணஞ்சேரியில ஒரு வேண்டுதல் நிக்குது. அப்படியே உங்க ஊர் திரு வெண்காட்டுக்குப் போய் சாமி கும்பிட்டுட்டு வந்துடுங்க...''

''போலாமே...''

அவர்கள் தேதி குறிக்க, ''ஏம்மா... கற்பகவல்லியின் அம்மாவையும், அப்பாவையும் கூட்டிட்டுப் போனா தப்பாகுமா..?''

''இல்லையே... அவங்க அந்தப் பக்கமெல்லாம் பார்த்ததேயில்லைன்றாங்க.''

''அட, கூட்டிட்டுப் போலாமே...''

''நான் கேட்டா நல்லாருக்காது. நீங்க கேளுங்க'' என்று சொல்ல, சிவசாமியின் தந்தை, கற்பகவல்லியின் தந்தை யிடம் வந்து கைகூப்பி, ''ஒரு நேர்த்திக்கடன் இருக்கு. எங்க ஊரும் பார்த்தாப் போல இருக்கும். வரீங்களா... போய்ட்டு வருவோம்'' என்று கேட்டார்.

''எல்லாத்தையும் விட்டு தடக்குன்னு போக முடியாதுங்களே... யார்ன்னா ஒருத்தர் இங்க இருந்துதானே ஆகணும்...''

''அட... நான் கவனிச்சுக்கறேன். என் பொண்டாட்டிய அனுப்பறேன். புள்ளைய அனுப்பறேன். போய்ட்டு வாங்க.''

''இதப் பாருங்க... நீங்க இல்லாத நான் போறது நல்லா இருக்காது. புள்ளை மட்டும் போகட்டும், அவங்களைக் கூட்டிகிட்டு.''

''டேய்... போய் மாயவரம் லாட்ஜ்ல தங்கிக்க. நம்ம வீடுலதங்க வேணான்டா. ஒரே அடைப்பாசமா இருக்கும். அங்க இருக்கிற நாலு பேருக்கு அறிமுகம் பண்ணி வைச்சு, சாமி தரிசனம் பண்ணி வைச்சு, கூட்டிகிட்டு வந்துடு. குருமூர்த்திகிட்ட வரேன்னு சொல்லி ஒரு போன் பண்ணிடு'' என்று ஏற்பாடுகள் வேகமாக செய்யத் துவங்கினார்கள். திருவெண்காடு பயணம் இனிதே முடிந்தது.

திடீரென்று ஒருநாள் கற்பகவள்ளியின் பெரியப்பா, இரவு பத்து மணிக்கு வீட்டுக் கதவைத் தட்டி உள்ளே ஓடிவந்தார்.

''ஒரு லட்ச ரூவா கொடு. தயவு செய்து கொடு. ஏன், எதுக்குன்னு கேட்காத. நான் ஒரு லட்ச ரூவா விடிகாலை யில நாலு மணிக்குள்ள காட்டியாகணும். காட்டலைன்னா, மொத்த வியாபாரமும் படுத்துடும். என் வாழ்க்கையே முடிஞ்சிடும். தயவு செய்து சொல்றேன். கடவுள் பேரால கேட்கறேன். ஒரு ஒரு லட்ச ரூவா கொடு. நாளைக்கு சாயந்திரமே தரேன்'' என்று உரக்கக் கத்தி அலம்பல் செய்தார்.

கற்பகவல்லியின் அப்பா காசிநாதனுக்கு என்ன செய்வதென்றே தெரியவில்லை.

''என்ன, ஏதுன்னு சொன்னாதர்னே கொடுக்கறதைப் பத்தி யோசிக்கலாம்.''

''நீ கொடுக்கறதைப் பத்தி யோசி. என்ன, ஏதுன்னு கேட்கவே கேட்காதே. கேட்டா எனக்கு சொல்ல முடியாது. சொன்னாலும் புரியாது. ஹார்பர்ல சரக்கு ஏத்த மாட்டேன்னு அத்தினி பேரும் பின்கை கட்டி நிக்கிறான். அவணன்டை போய் இதோ காசு இருக்கு. சரக்கு ஏத்து. காலையில உனக்கு சம்பளம் தரேன்னு சொல்லணும்.''

''ஆளுங்களுக்கு சம்பளம் கொடுக்கறதுக்கு காசு இல்லையா?'' - கற்பகவல்லியின் அம்மா ஆச்சரியமாய்க் கேட்டாள்.

''அதெல்லாம் இல்லை. இவங்களுக்கு சம்பள மெல்லாம் நான் காட்ட வேண்டிய அவசியமே இல்லை. வீட்டுக்குள்ளே லட்ச ரூவா வச்சிருக்கேன். கொண்டாந்து

மூஞ்சில அடிப்பேன்னேன். என் வீட்டுல ஒத்தைக் பைசா கிடையாது. தயவு செய்து காசைக் கொடு''

''இல்லாதபோது ஏன் இருக்கறதா சொல்றீங்க..?'' - அம்மா மறுபடியும் கேட்டாள்.

''அதுதான் வியாபாரம்.''

''இதப் பாருப்பா... சாயந்திரம் வரைக்குமெல்லாம் தாங்காது. நான் காசு தரேன். அது குழந்தை கல்யாணத்துக்கு வைச்சிருக்கிறது. நகை வாங்கணும். வெள்ளிப் பாத்திரம் வாங்கணும். கொண்டு போய் காட்டு. திருப்பி அப்படியே கொண்டு வந்துடு''

''சரி... கொண்டாந்துடுறேன். காலையில ஆறு மணிக்கு வரேன். திடீர்னு டக்குன்னு எடுத்துக்கிட்டுப் போனா, சந்தேகப்படுவாங்க. சேட்டுகிட்ட மூணு வட்டிக்கு கடன் வாங்கிட்டு வந்துட்டியான்னு கேட்பாங்க. அப்படியெல் லாம் இல்லை, இது என் காசுங்கிற மாதிரி நடந்துக்கணும். ஆறு இல்லை, ஏழு, எட்டு கூட ஆகும். எப்படியும் பத்து மணிக்குள்ள கொண்டாந்து தரேன்.'' - அவர் அவசரப் படுத்தினார்.

ஆனால் அவர் பேச்சு பயமாக இருந்தது. வயிற்றில் புளியைக் கரைத்தது. ஒரு லட்ச ரூபாய் கொடுத்தால் திரும்பி வந்துவிடுமா என்ற சந்தேகம் மிக பலமாக எழுந்தது. ஆனால் உதவாமல் போனால், இழிவாகப் பேசுவார்களோ என்ற வேதனையும் வந்தது.

''எனக்கு பிரச்சனை வந்தவுடனே, உன் ஞாபகம்தான் வந்தது. உன்னாண்ட எப்பவும் காசு இருக்கும்ன்னு எனக்குத் தெரியும். எப்படியாவது வாங்கிட்டுப் போயிட லாம்னுதான் நான் இங்கே ஓடியாந்தேன். உனக்கும் காசு தேவைதான். ஆனா, இந்த மாதிரியான நெருக்கடியான நிலைமை உனக்கு வர வாய்ப்பில்லை. அதனாலதான் தடுக்குன்னு இங்கே ஓடியாந்தேன். இல்லேன்னு மட்டும் தயவு செய்து சொல்லிடாத.''

ஒரு பலவீனமான நேரத்தில், அப்பா காசைக் கொடுத்து விட, அதை வாங்கி தோல் பையில் போட்டுக்கொண்டு நன்றி கூட சொல்லாமல் பெரியப்பா வெளியே போனார். அந்த ஒரு லட்ச ரூபாய் மறுநாள் திரும்பி வரவில்லை. ஒரு வாரமாகியும் திருப்பித் தரவில்லை. எப்போது திருப்பித் தருகிறீர்கள் என்று கேட்டுப்பார்க்க, அம்மாவும் அப்பாவும் வீட்டுக்குப் போனார்கள்.

வீட்டில் அந்தப் பெண் பிள்ளை மட்டுமே இருந்தாள். ஆத்திரத்தோடு ''காசு கொடுக்கப் போறீங்களா, இல்லையா?'' என்று கேட்ட போது, ''அப்படியெல்லாம் பெரியவங்க பேசறது நல்லாயில்லை. முடியாதுன்னு சொல்லிட்டம். என்ன பண்ணுவீங்க? சொல்றதுக்கு நேரமா ஆகும்? ஆத்திரம் அவசரத்துக்குத்தானே கொடுத்தீங்க? அது நல்லபடியாதான் செலவாயிருக்கும். லாபம் வந்தா கொடுத்துவிடப் போறோம். இத்தனை நாள் பொறுத்து ஒரு லட்ச ரூபா கொடுத்துட்டோம்னு வச்சுக்கங்க, இப்ப இறைச்ச வார்த்தையெல்லாம் என்ன பண்ணுவீங்க? திரும்பத் திரும்ப மன்னிப்பு கேட்பீங்க. அதிகமாக பேசாதீங்க. காசு கொடுத்திடுவோம். உங்க காசு எங்களுக்கு என்னத்துக்கு?''.அதட்டித் திருப்பி அனுப்பினாள்.

அப்பாவுக்கும், அம்மாவுக்கும் பேசத் தெரியவில்லை. அவர்களுக்குத் தெரிந்த அளவுக்கு வாய்ப் பேச்சு வக்கணைகள் இவர்களிடம் இல்லை. அந்த வீட்டில் உள்ள அத்தனை பேரிடமும் தடாலடியாய்ப் பேச்சு இருந்ததைத் தவிர, நெல்முனையளவும் நாணயம் இல்லை. ஒரு இலட்ச ரூபாய் கொடுத்து ஒரு மாதமாகியும் இதோ தருகிறேன், அதோ தருகிறேன் என்று நீட்டிக்கொண்டே போனார்களே தவிர, திருப்பிக் கொடுப்பதற்கான எந்த எத்தனிப்பும் இல்லை. அவர்களிடம் பணம் நன்கு புரள்வது தெளிவாகத் தெரிந்தது. விசாரித்த போது, அவர்களுக்கு ஒரு இலட்ச ரூபாய் காசே இல்லை என்பதாக சொல்லப்பட்டது. அப்பா வேகமாய்க் கேட்க பலமில்லாமல், ஹார்பர் வாசலில் போய் விக்கி, விக்கி அழுதார்.

''உன் பொண்ணு கல்யாணத்துக்கு ஒரு லட்ச ரூபாய் வேணும். அவ்வளவுதானே... நான் இருக்கறேன், போ. போய் கல்யாணத்தை ஆரம்பி. நான் நின்னு செய்து தரேன்'' என்று நாலு பேர் எதிர்க்க, அப்பா கெஞ்சுவது போலவும், அவர் காசு தருவதற்கு ஏற்பாடு செய்வது போலவும் மாற்றிவிட்டார். அதைக் கூட உடைக்க முடியவில்லை. ஒரே ஒரு வார்த்தை மட்டும் சொல்லிவிட்டு வந்தார்.

''இது சரியில்லை... இது சரியாக முடியப்போவதில்லை. நீ என்னையும் அழித்து, உன்னையும் அழித்துக் கொள்ளப் போகிறாய். அந்த ஆட்டத்தினுடைய வேகம் எனக்குப் புரிந்துவிட்டது. எங்கோ மிகப் பெரிய தவறு நீ செய்ய ஆரம்பித்துவிட்டாய். அதன் விளைவு நம் இரண்டு

பேரையும் அழிக்கப் போகிறது'' என்று ஆவேசமாய் சொல்லிவிட்டு வந்தார்.

அவர்கள் அந்த ஆவேசத்தைக் கண்டு நெல்முனையளவும் பயப்படவில்லை. சலனப்படவில்லை. ''அப்படித்தான்... கர்சுன்னு வந்தா அந்த மாதிரித்தான் பேச்சு வரும். நாமளும் பதிலுக்குப் பேச வேண்டி வரும்'' என்று கன கம்பீரமாய் அவர் பதிலளித்துவிட்டார்.

வீடு இடிந்து போயிற்று. புலம்பித் தள்ளிற்று.

''என்ன நடந்துதுன்னு இப்ப சொல்றேன், கேட்டுக்க. உனக்குன்னு வைச்சிருந்த காசை ரவுடிப் பசங்க நாலு பேரு உள்ள பூந்து அடிச்சி எடுத்துட்டுப் போயிட்டாங்க. என் தொழில் என்னன்னு உனக்குத் தெரியுமா? மேல்பார்வைக்குத்தான் லாரி காண்ட்ராக்ட்டு. உள்ளேயிருந்து பல்வேறு சாமான்களை வெளியே கஸ்டம்ஸ்க்கும் தெரிந்தும், தெரியாம எடுத்துன்னு போறதுதான். அதுல ரவுடிங்க சாம்ராஜ்யம்தான் நடத்த முடியும். யாரு அடிக்கிறானோ, அவன் பெரிய ஆள். இதுவரைக்கும் நான் அடிச்சதில்லை. அன்னிக்கு அவன் அடிச்சி எடுத்துட்டுப் போயிட்டான். இதை உங்கிட்ட எப்படி சொல்றது? இதையெல்லாம் போலீசுல போய் புகார் பண்ண முடியாது. போலீசுல போய் புகார் பண்ணாலும், அநியாயமா சம்பாதிச்ச காசுதானேடா... அநியாயமாத்தான் போகும். சாவுங்கடா அப்படின்னு சொல்லிட்டாங்க. இது உன் காசுன்னு எப்படி சொல்வேன்? சொன்னாலும், என்னாண்ட இருக்கறது என் காசுன்னுதான் அவன் நினைப்பான். உன்னுடைய ஒரு இலட்ச ரூபாயை ரொம்ப நிச்சயமா நான் திருப்பிக் கொடுத்துடறேன். குழந்தை கல்யாணத்துக்கு வைச்சிருந்த காசுன்னு எனக்குத் தெரியாதா? நான் அத்தனை கொடூரமானவனா? இன்னிக்கி இல்லாட்டியும், நாளைக்கு வந்திடும். குழந்தை கல்யாணதுக்கு முன்னாடி, அந்தக் காசு, கடவுள் சத்தியமா சொல்றேன், உனக்குத் திருப்பித் தந்திடுவேன். ஏமாத்துற எண்ணமில்லை. நேரத்துல உதவி பண்ணதை மறக்க மாட்டேன்''

நீட்டி, முழக்கி வசனம் பேசினார்கள். கண்ணீர் சிந்தினார்கள். இதை அவர்களுடைய உறவினர் யாருக்கும் சொல்ல முடியவில்லை. சிவசாமியின் வீட்டுக்கும் தெரிவிக்க முடியவில்லை. இப்படி ஒரு சங்கடத்தில் இந்தக் குடும்பம் சிக்கிக் கொண்டிருக்கிறது என்று யாருக்கும்

தெரியவில்லை. சந்தோஷமாக இருந்த அப்பா ஒரு மிகப் பெரிய மன உளைச்சலில் சிக்கிக் கொண்டார் என்பது தெள்ளத்தெளிவாகத் தெரிந்தது. அவர் முகம் எப்போதும் எதையோ யோசித்துக்கொண்டிருந்தது.

''நான் என்ன சொல்ல வரேன்னா, ஆறு லட்ச ரூபா கடன் வாங்கப் போறேன். ஒரு பழைய லாரி வாங்கணும். ஒரு கோடாவுன் திருத்திக் கட்டணும். உன் காசு திருப்பிக் கொடுக்கணும். இது எல்லாம் சேர்த்து ஒரு ஆறு லட்ச ரூபா நான் கடன் வாங்கணும். மூணு மாசத்துல அந்த ஆறு லட்ச ரூவா புரட்டிடுவேன். எனக்கு வெளியே வர வேண்டிய பாக்கியே பன்னெண்டு லட்ச ரூவா இருக்கு. இந்த ஆறு லட்ச ரூபாய்க்கு ஒரு கேரண்டி கையெழுத்து போட்டுக் கொடு. வேற ஒண்ணுல்ல... நான் வாங்கினதுக்கறதுக்கு ஒரு சாட்சி கையெழுத்துதான். கேரண்டி கூட இல்லை.''

அப்பா முடியாது என்று கோபமாக மறுத்தார்.

''அப்ப உன் காசு கொஞ்சம் லேட்டாத் தருவேன், அவ்வளவுதான்.''

''லேட்டானா எப்போ?''

''ஒரு வருஷம் ஆகலாம். இரண்டு வருஷம் ஆகலாம். நீ கையெழுத்து போட்டின்னா அவன் துட்டு கொடுத்த மறுநாளே உனக்கு நான் ஒரு லட்ச ரூவா கொடுத்துடறேன். நீ தர மாட்டேன்னு வச்சுக்கோ, இந்த காண்ட்ராக்ட் கையைவிட்டுப் போயிடும். இந்தக் காண்ட்ராக்ட் கையை விட்டுப் போச்சுன்னா மறுபடியும் நான் எதுனா வேர்க் கடலை மிட்டாயோ, வெல்ல மிட்டாயோ பண்ணிதான் பொழைக்கணும். அதுல ஒரு லட்ச ரூபாயை பார்க்கறதுக்கு ஒரு வருஷம் ஆகாதா? அதனாலதான் சொல்றேன், நீ ஒரு ஆறு லட்ச ரூபாய்க்குக் கையெழுத்துப் போட்டுக் கொடு, நான் எனக்கு துட்டு வந்த மறுநாள் உனக்கு ஒரு லட்ச ரூபாய் கொடுத்துடறேன். இல்லேன்னா, அந்த ஒரு லட்ச ரூபா மெல்லத்தான் வரும். நான் தரமாட்டேன்னு சொல்லலை. தந்துருவேன் ஒரு வருஷம் ஆகும். என்ன சொல்றே?''

மனிதர்களின் ஓநாய்ப் பார்வையையும், எச்சில் ஒழுக வேட்டையின் தீவிரத்தோடு அவர்கள் பேசுவதையும் முதன்முதலாக கற்பகவல்லி தன் பெரியப்பாவிடம்தான் பார்த்தாள்.

''நீ கையெழுத்து போட்டா ஆறு லட்ச ரூவா கொடுத்துடுவான்னு நினைச்சிட்டிருக்கிறியா? மொத்தம் ஆறு பேர் கையெழுத்து போடணும். மத்த அஞ்சு பேரும் இந்த வடசென்னைல பெரிய பணக்காரங்க. நீ ஒரு உறவுக்காரனை கூட்டிக்கிட்டு வான்னு சொன்னாங்க. அதனால உன் பேரைப் போட்டேனே தவிர, உன்னால காசு கிடைக்குதுன்னு தயவு செய்து நினைக்காதே. நீ மட்டும் தான் சாட்சி கையெழுத்து போடப் போறேன்னு நினைக்காதே. இது ஒரு சும்மா, ஒப்புக்கு சப்பாணியா ஒரு பேரு'' என்று பெரியப்பா எகத்தாளமாகக் குத்திப் பேசினார்.

இன்னும் யாரோ ஒரு மூன்று பேரை வீட்டு வாசலுக்கு வரவழைத்து, ''அப்புறம் என்ன கிளம்பலாமா? போலாமா?'' என்று அவசரப்படுத்தி, அப்பாவை அள்ளிக் கொண்டு போய் ஏதோ ஒரு இடத்தில் நிறுத்தி, வந்தவர்களைப் பேப்பரில் கையெழுத்து போடச் சொல்லி, அப்பாவிடம் இன்னொரு பேப்பரில் மடமடவென்று கையெழுத்து வாங்கி, மறுபடியும் வீட்டு வாசலுக்குக் கொண்டு வந்துவிட்டார்கள்.

ஆறு லட்ச ரூபாய் கடன் கிடைத்ததாய் அவர்கள் சொல்லவேயில்லை. கையெழுத்து போட்ட போது, அந்த வட இந்திய பணியாவின் பெயர் அப்பாவிற்கு ஞாபகம் இருந்தது. அந்தப் பெயரை வைத்துக்கொண்டு, டைரக்டரி யில் துளைத்துப் பார்த்து, விலாசம் கண்டுபிடித்து, அந்த இடத்திற்குப் போய் நிற்க, அது பெருந்தொகை புரட்டிக் கொடுக்கும் ஏஜெண்ட் என்று தெரிந்தது. அவர்களிடம் போய் தான் கையெழுத்து போட்ட விஷயத்தைச் சொல்லிக் கேட்ட போது, ''ஆமாம், ஆறு லட்ச ரூபாய்க்கு கேரண்டி கையெழுத்து போட்டிருக்கிறீர்கள். நீங்கள் கையெழுத்து போட்டுவிட்டுப் போன மறுக்ஷணமே, நாங்கள் ஆறு லட்ச ரூபாய் காசோலையாக அவர்களுக்குக் கொடுத்து விட்டோம். உங்களுக்குத் தெரியாதா?'' என்று கேட்டார்.

அப்பா ஆத்திரம் ஆனார். அம்மா பல் கடித்தாள். ''என்ன நினைச்சிக்கிட்டிருக்காங்க, அவங்க. நீங்க போய் போலீசுல சொல்லிடுங்க.''

அப்பா போய் போலீசில் புகார் கொடுத்தார். தன்னை ஏமாற்றி ஆறு லட்ச ரூபாய்க்கு சாட்சி கையெழுத்து போட வைத்ததாக அந்தப் புகாரில் சொல்லியிருந்தார்.

பெரியப்பாவின் பெயரைக் குறிப்பிட்டிருந்தார். ''நாங்க விசாரிக்கிறோம், போங்க'' என்று அனுப்பிவிட்டார்கள். ஆனால், இரண்டு நாள்களாக விசாரிக்கவில்லை, விசாரிக்கவில்லை என்றே சொல்லிக்கொண்டிருந்தார்கள். மூன்றாம் நாள் போனபோது, ''விசாரிச்சோங்க... தப்பு உங்க பேர்லதான் இருக்கு. நீங்க ஆறு லட்ச ரூபாய்க்கு கேரண்டி கையெழுத்து போட்டிருக்கீங்க. நீங்களும், அவரும் சேர்ந்து வியாபாரம் ஆரம்பிக்கிறதா தீர்மானம் பண்ணிருக்கீங்க. உங்க பங்குக்கு ஆறு லட்ச ரூபாய்க்கு மூணு லட்ச ரூபாய். அவர் பங்குக்கு மூணு லட்ச ரூபாய். இதுல சண்டைக்கு என்ன வந்தது? திடும்னு ஒரு வியாபாரத்தை நடுவுல நிறுத்தினோம்னாக்க அந்த ஆள் என்ன பண்ணுவார்? உங்க புகார் சரியில்லைங்க. இதை எடுத்துக்கமுடியாது'' என்று வாய் வார்த்தையாக மிரட்டினார்கள்.

''நான் கோர்ட்டுக்குப் போவேன். வக்கீலோடு வருவேன்'' என்று அப்பா சொல்லிய போது, ''உங்க இஷ்டம். செய்ய வேண்டியதை செஞ்சுக்கங்க.'' என்று கைவிரித்தார்கள். அப்பாவுக்கு என்ன செய்வதென்று தெரியவில்லை. பெரியப்பாவின் வீட்டு வாசலில் போய் நின்று உரக்கக் கத்தினார். அந்த வீடு கதவு திறக்கப் படவேயில்லை. அக்கம்பக்கம் போய் பேசினார்.

''உங்களுக்கு உங்க சொந்தக்காரங்களை யாருன்னு தெரியாதா? நீங்கதான் முதல்ல வந்து கத்துறீங்களா? தினம் ஒருத்தன் வந்து எதுனா கத்தினுதான் இருப்பான். அந்தப் புள்ள மேல எத்தினி கேஸ் இருக்கு தெரியுமா? சின்னப் பொண்ணு பதினாறு வயசுப் பொண்ணு, பள்ளிக்கூடம் போற பொண்ணை தூக்கிக்கிட்டுப் போய், பத்து நாள் வைச்சிருந்து மறுபடியும் பள்ளிக்கூடம் போடின்னு திருப்பி அனுப்பிச்சிட்டான். யாருமே கேட்க முடியலை. போலீசுக்குக் கூட போக முடியலை. அவங்க வீட்டு அம்மா இங்க வந்து, நெருப்பு வைச்சிக்கிட்டு செத்துப் போறேன்னு தலையில கெரசின் ஊத்திக்கிட்டு ஒன்னு அழுதாங்க. நாங்க பிடிச்சிகிட்டு தடுத்தோம். ஏன்னடா, இப்படி பண்றியேன்னு கேட்டோம். அந்தப் பொண்ணு ஆசைப்பட்டுச்சு. அதனால போனேன்னு பதில் சொன்னானே தவிர, தான் கூட்டிக்கிட்டுப் போனேன்னு சொல்லவேயில்லை. உங்க ஜாதிக்காரங்களே நாலு வீடு தள்ளி இருக்காங்க. ஏதோ ஊருல விசேஷம்ன்னு சொல்லி, நாங்க ஊருக்குப்

போறோம். வீட்டைப் பாத்துக்கங்க. நாங்க பூட்டிக்கிட்டுப் போறோம்ன்னு சொல்லிட்டுப் போனாங்க. ராவோட ராவா ஓடுப் பிரிச்சி, வீட்டு உள்ள இறங்கி, வீட்டுல இருக்கிற அத்தனை பாத்திர, பண்டங்களையும் எடுத்துக்கிட்டுப் போயிட்டாங்க. அது இவங்கதான்னு தெருவுக்கே தெரியும். யாரும் வாயைத் திறக்கலை. வந்து அந்த ஆள் லபோ திபோன்னு அடிச்சிக்கிட்டான். சொல்லாத போலீசு இல்லை. வராத அதிகாரி இல்லை. இவங்களை ஒண்ணும் செய்ய முடியலை. இவங்கதான் செஞ்சிருப்பாங்கன்னு அவனுக்கும் தெரியும். ஆனாலும் நீதான் திருடினியான்னு கேட்கக் கூட அவனால முடியலை. எப்படி இருக்குது கதை? அநியாயத்துக்கு ஒரு பேர் சொல்லணும்ன்னா அது உங்க அண்ணன் பேர்தான்'' என்று உரத்துச் சொன்னார்கள்.

எவ்வளவு பெரிய தவறு செய்திருக்கிறோம் என்பது காசிநாதனுக்கு அப்போதுதான் தெரிந்தது. பெண் கேட்டு வந்த வீட்டிற்கு காசிநாதன் ஓடினார். உடனடியாகத் திருமணம் முடித்துவிடலாம் என்று சொன்னார். தான் ஏமாற்றப்பட்டதை, அவர்களிடம் சொல்லி கண்ணீர் விட்டார். அந்த வீடு கவலையோடு கேட்டுக் கொண்டது. ''இப்படி இருப்பாங்களா... மனுஷாள்'' என்று ஆச்சரியப் பட்டது. ''சரி... நீங்க விமரிசையா பண்ணுவீங்கன்னு நினைச்சிக்கிட்டுத்தான் உங்ககிட்ட சம்பந்தம் பேசினது. ஆனால் இப்போ உங்க நிலைமை வேற மாதிரி இருக்கு. உங்களால இப்பவும் விமரிசையா பண்ணமுடியுமா? பண்ண வேணாம். அந்தக் காசை குழந்தைகிட்ட கொடுத்து டுங்க. ரொம்ப சாதாரணமாகவே கல்யாணம் நடத்துங்க. வெளியூருல போய் கல்யாணம் பண்ணிட்டு, குழந்தை களைக் கூட்டிக்கிட்டு வருவோம். இங்கு முந்திரிப் பருப்பு, கேக், காப்பி கொடுத்து முடிச்சுருவோம்'' என்று சொன்னார். அம்மா வேண்டாமே என்ற போது, அந்த செலவு எதற்கு அனாவசியம் என்று மறுத்துவிட்டார்கள். இதைப் பற்றியும் கற்பகவள்ளியின் பெற்றோர் கவலைப்பட்டுக் கொண்டிருந்த போது சிவசாமி வந்து ஆறுதல் சொன்னான்.

திருமணம் என்பது சடங்கில் இல்லை. உறவுகள் காட்டும் பிரியத்தில் இருக்கிறது. திருணம் செய்து வந்த இந்தப் பெண் மிக நன்றாக இருக்க வேண்டுமென்பதுதான் என் விருப்பம். என்னுடைய பல்வேறு பிரச்சனைகள் இந்தப் பெண்ணினுடைய வாழ்க்கையைப் பாதித்துவிடக்

கூடாது. காசு குறைவாக இருப்பதினால் கல்யாணம் சண்டையாகிவிடக் கூடாது. அப்படி என்றால் நாம் மனிதர்களே இல்லை. காசுதான் முக்கியமாக இருப்பின், நாம் காசைத் திருமணம் செய்துகொண்டிருக்கலாம். அல்லது காசுக்காகப் படுக்கிறவளைத் திருமணம் செய்து கொண்டிருக்கலாம். எதற்காக கற்பகவல்லியை நாடி வர வேண்டும்? அவள் நல்ல பெண் என்றும், அழகுள்ளவள் என்றும், அறிவுள்ளவள் என்றும், அன்புள்ளவள் என்றும், இவள் என்னைப் பாதுகாப்பாள் என்றும்தான் நான் இவள் மீது ஆசைப்பட்டுத் திருமணம் செய்துகொண்டேனே ஒழிய, உங்கள் வீட்டில் காசு இருக்கிறது என்று நான் செய்துகொள்ளவே இல்லை. எனவே எளிய முறையில் திருமணம் செய்ய ஒப்புக்கொள்ளுங்கள்.

உங்களை கடன் வாங்கச் சொல்லி, அவஸ்தைப்பட வைக்க எங்கள் வீடு விரும்ப வில்லை. அதுவும் தவிர, எளிய முறையில் நீங்கள் திருமணம் செய்தால்தான் உங்களுடைய மற்ற உறவுகள் என்ன காரணம் என்று கேட்கும். அப்போது அவர்களைச் சுட்டிக் காட்டலாம். தன்னால் இந்தக் கல்யாணம் மிக எளிமையாக நடந்தது என்ற குற்ற உணர்வாவது அவர்களுக்கு வரட்டும். அப்படியாவது அவர்கள் காசைத் திருப்பித் தருகிறார்களா என்று பார்ப்போம்.'' என்று பேசினார்.

திருமணம் நடக்கப்போகிறது. தயவு செய்து காசைக் கொடுங்கள் என்று கேட்ட போது, ''என்ன காசு? ஏது காசு? தடுக்குன்னு வந்து கேட்டா, எங்க இருந்து வரும் காசு'' என்று அந்த வீட்டில் எல்லோரும் எகிறினார்கள்.

''இல்லேன்னே சொல்லிட்டீங்களா..?'' அப்பா ஆத்திரத்தில் கத்தினார்.

''அப்படி சொல்ல நேர்ந்தாலும், நேர்ந்திடலாம். நீ வந்து மிரட்டறதைப் பார்த்தா நாங்க அப்படித்தான் சொல்ல வேண்டி வரும் போலிருக்கு.'' என்று எதிர்குரல் கேட்டது.

அப்பா மௌனமாக வீடு திரும்பினார். அம்மாவிடம் சொன்னார். அம்மா கிழக்கு பார்த்து கண்மூடி உட்கார்ந்து கொண்டாள். ''நாம செய்த தப்பு, போன ஜன்மத்துல நாம ஏமாத்துன விளைவு இப்ப வருத்துது. இத்தோட இந்த பீடையை விட்டுடுங்க. இந்த ஒரு லட்ச ரூபாய் நம்ம காசில்லேன்னு உதறிடுவோம். திருட்டுப் போயிடுச்சுன்னு நினைச்சுக்குவோம். அந்த ஆறு லட்ச ரூபாய் நம்மளக் கொத்தாத இருந்தா சரி. இதெல்லாம் தாண்டி நம்மளைப்

புரிஞ்சிகிட்டு நமக்குன்னு ஒரு நல்ல மாப்பிள்ளை வந்திருக்கான். நமக்குன்னு ஒரு நல்ல சம்பந்தி வீடு கிடைச்சிருக்கு. அதை பல பேரோட கொண்டாடிட்டு, இந்த விஷயத்தை விட்டுடுவோம். இனி என்ன காரணம் கொண்டும் அந்த வீட்டுக்குப் போக வேண்டாம். போய் பத்திரிகை கூட வைக்க வேண்டாம்.''

பத்திரிகை வைக்கவில்லை. ஆனால் அவர்கள் வந்தார்கள். வெள்ளிக் குடம் பரிசளித்தார்கள். அப்பா சீர் கொண்டு வந்து சபையில் அந்த வெள்ளிக் குடத்தை அவர்கள் நீட்டிய போது, தடுக்கென்று தடுத்து, அந்தச் சீரைத் திருப்பி அண்ணனிடம் கொடுத்தார்.

''இந்தச் சீர் எங்களுக்கு வேண்டாம். நீங்க உட்கார்ந்து சாப்பிட்டுப் போங்க. அது போதும்'' என்று வெள்ளிக் குடத்தை வேகமாக மறுத்துவிட்டார். சபை இதை விழிவிரித்துப் பார்த்தது. அவர்கள் எட்டிப் பார்த்தார்கள். புருஷனும், மனைவியும் ஒருவரையொருவர் பார்த்துக் கொண்டார்கள். ''சரி... அப்ப நாங்க வரோம். கற்பக வல்லி... நல்லாயிரும்மா...'' வெள்ளிக் குடத்தோடு சாப்பிடாமல் வெளியே போய் கார் ஏறினார்கள்.

சிவசாமி அப்பாவை லேசாகக் கடிந்துகொண்டான். ''ஏன் தப்பு பண்றீங்க..? ஒரு சபை நடுவுல அந்த வெள்ளிக்குடத்தை வாங்கி வைச்சிக்கிட்டு, நாலு நாள் பொறுத்து திருப்பி அனுப்பிச்சிட வேண்டியதுதானே...''

''அப்படி பண்ணாக்க அவங்களுக்குக் கடும் கோபம் உண்டாகும். அவங்க கோபத்துல எதுவேணாலும் பண்ணு வாங்க. அப்படி பண்ணாக்க தடுக்கற சக்தி எங்ககிட்ட இருக்கா? இல்லை, பதிலுக்குப் பண்ண முடியுமா? அவங்க யாருன்னு உங்களுக்கு இன்னும் ஏன் தெரியலை? உங்க அண்ணன் வியாபாரியில்லை, ரவுடி''

''நீங்க பண்றது தப்பு. அது என் வாழ்க்கையையும், உங்க பொண்ணு வாழ்க்கையையும் பாதிக்கும். தயவு செய்து இனிமே இந்த மாதிரி பெரிய சண்டைக்குப் போவாதீங்க. துஷ்டனைக் கண்டால் தூர விலகுன்னுதான் இருக்கே தவிர, துரத்தி, துரத்தி அடின்னு யாரும் சொல்லலை. நம்ம குணம் என்ன, நம்மால என்ன செய்ய முடியும்ன்னு புரிஞ்சிகிட்டுத்தான் பேசணுமே தவிர, எடுத்தேன், கவிழ்த்தேன்னு பேசக் கூடாது. நான் வெட்டிடுவேன்னு நாமளும் கையை உயர்த்தக் கூடாது.

எல்லாராலையும் வெட்ட முடியுமா? வெட்டறதுக்குன்னு சில பேர்தான் இருக்காங்க. அவங்க வெட்டுப்பட்டவங்க. வெட்டுப்படறதைப் பார்த்தவங்க. வெட்டறதுக்குன்னு பயிற்சி எடுத்துவங்க. நீங்க இது மூணுமே செஞ்சதில்லை. எப்படி வெட்ட முடியும்? நாளைக்கு எங்கோ ஒரு இடத்துல விருந்து நடக்கிறது. என்னுடைய உறவினர்கள் விருந்து கொடுக்கிறார்கள். அந்த இடத்தில் அவர்கள் வந்து கத்தினால், விருந்து கொடுக்கிற மனிதர்களுடைய நிலைமை என்னாவது? என் நிலைமை என்னாவது? உங்கள் வீடு எல்லாவிதத்திலும் சரி. உங்கள் மகள் எல்லா விதத்திலும் சரி. ஆனால், கறுப்புப் புள்ளியாய் உங்களுக்கு இப்படி ஒரு உறவு இருப்பது எனக்குக் கவலையாக இருக்கிறது.

இதுவரை நடந்த தவறுகள் போதும். இனி தொடர்ந்து தவறுகள் தயவு செய்து செய்யவேண்டாம்.

சிவசாமியின் வீடு கற்பகவல்லியின் வீட்டை இன்னும் கூடுதல் அன்போடு கவனித்துக்கொண்டது. வேறு யாரும் எளிமையான கல்யாணம் ஏன் என்று பேச்சு எடுத்தால், அவர்களே அதை மடக்கி அப்படி ஒரு வேண்டுதல் என்று சொல்லி நிறுத்தினார்கள். காசிநாதனை அழைத்துக் கொண்டு சென்னையிலுள்ள எல்லா கோயில்களுக்கும் வேன் ஏற்பாடு பண்ணி கூட்டமாய் போய் வந்தார்கள். தங்கள் பக்கத்து வீடுகளுக்கு அழைத்துப் போய் அறிமுகப்படுத்தினார்கள். எல்லா இடத்திலும் இவர் பூசுமஞ்சளுக்கு நல்ல மரியாதை இருந்தது.

''உங்களைப் பார்த்ததினாலே பேசலீங்க... எனக்குத் தெரிஞ்சு பன்னெண்டு வருஷமா தினம் மூணு விரல் மஞ்சளை ஒத்தி எடுத்து, கழுத்துப் பக்கமும், முதுகு பக்கமும், அக்குள் பக்கம், தோள் பக்கமும் தொடைச்சுக்குவேன். சொம்பு ஜலத்தை மொண்டு, மொண்டு ஊத்திக்குவேன். முகத்துல லேசா ஒரு வழிப்பு மஞ்சள் பூசுவேன். நல்லா கழுவுவேன். அதுக்குப் பிறகுதான் சோப் போடுவேன். கிட்ட வந்தா மெலிசா ஒரு வாசனை இருக்கும். எங்க வீட்டுக்காரருக்கு அந்த வாசனை ரொம்ப பிடிக்கும். மஞ்சள் பூசிக் குளிச்சாதான், குளிச்சா மாதிரியே இருக்கு'' - ஒரு வீட்டில் உரத்துச் சொன்னார்கள். மனம் விட்டுப் பாராட்டினார்கள்.

''நீங்கதான் அந்த பூசுமஞ்சளா..? எந்தக் கம்பெனி உங்களுக்கு விளம்பரம் பண்ணுது? நல்லா எழுதுறானுங்

களே... அந்த வாசனையெல்லாம் நல்லா இருக்கும்.'' - இது ஒருவர் ஞாபகம் வைத்துக்கொண்டு கேட்டார்.

நாங்களே செய்தோம் என்று சொன்னபோது, ஆச்சரியப்பட்டார். ''அப்படின்னா, தொழிலை நேசிக்கறீங்கன்னு அர்த்தம். இல்லேன்னா, அந்த மாதிரியான வார்த்தைகளெல்லாம் வராது'' என்று பாராட்டினார்.

எங்கும் காசிநாதனுக்கு முதன்மை செய்யப்பட்டது. மரியாதை செய்யப்பட்டது. அவர் தனியே கூப்பிடப்பட்டு, அறிமுகப்படுத்திவிட்டு வணக்கம் தெரிவிக்கப்பட்டது. ஊறவினர்களில் ஒரு இளைஞன் மிக உற்சாகமாக அவருடைய வியாபாரத்தைத் தெரிந்துகொண்டான். அவன் வீட்டுக்கு ஒரு ஐந்து டப்பா கொண்ட அட்டைப் பெட்டியைக் கொடுத்த போது, ''என்ன எது..? பழைய பெட்டி மாதிரியில்லே இருக்கு... இதுல வச்சுக் கொடுக்கறீங்க?'' என்று கேட்டான்.

''ஏன் தம்பி, வேறு எப்படிக் கொடுக்கணும்ன்னு நினைக்கறீங்க. ?''

''மஞ்சள்ங்கிறது ஒரு நல்ல விஷயங்க. ஒருத்தருக் கொருத்தர் பரிமாறிக்கிற விஷயம். நீங்க என்ன செய்யலாம், பத்துப் பாக்கெட்டோ, பனிரெண்டு பாக்கெட்டோ நீளவாட்டுல அடுக்கி மேல செலஃபோன் போட்டு, ஒரு காஸ்ட்லியான பாக்ஸ் போட்டு கொடுக்கலாம். அந்தப் பொட்டியினுடைய காசையும் விலையில வைச்சுடலாம். நிச்சயமா வாங்கிக்கிட்டுப் போவாங்க. பொட்டி அழகா இருக்கணுங்கிறதுதான் முக்கியம். நானா இருந்தா என்ன செய்வேன் தெரியுமா? பத்து டப்பா மஞ்சளும், ரெண்டு டப்பா குங்குமமும் வைச்சு அழகாக் கொடுத்துடுவேன். உள்ள இரண்டு சாமிப் படம் வைப்பேன். அட்டையில நாலு சாமிப்படம் போட்டு, என்னமோ பிரசாதத் தட்டு மாதிரி ஜம்முன்னு அலங்காரமா செய்துட்டோம்னாக்க, அதுக்கு ஒரு தனி மரியாதை கிடைக்கும். இதைவிட பெரிய விளம்பரம் ஒண்ணும் செய்துட முடியாது.'' என்று யோசனை தெரிவித்தான்.

அங்கே கூடியிருந்த எல்லோருமே பாராட்டிக் கைதட்டினார்கள். ''காசிநாதனுக்கு இன்னொரு பொண்ணு இருந்தா, டக்குன்னு உன்னைக் கல்யாணம் பண்ணி வளைச்சுப் போட்டுடுவாரு. உன் துரதிர்ஷ்டம் அவருக்கு இன்னொரு பொண்ணு இல்லாத போயிடுச்சு'' என்று சொல்ல, எல்லோரும் வாய்விட்டு சிரித்தார்கள்.

காசிநாதன் ''அப்படி ஒரு திட்டம் ரொம்ப நாள் முன்னாடி இருந்ததுங்க. ஆனால் தம்பி சொன்ன போது, அது நிச்சயம் செய்ய வேண்டிய விஷயம்ன்னு தெரிஞ்சுப் போச்சு. செய்து சக்ஸஸ் ஆனா, நான் தம்பிக்கு என்ன மரியாதை உண்டோ, அதை நிச்சயம் செய்வேன்'' என்று கைகூப்பினார்.

''அடடே... எழுந்து நின்று செய்றேன்னு கைகூப்புறீங் களே... இதுவே பெரிய மரியாதை.'' என்று அந்த தம்பி கால் தொட்டு கண்ணில் ஒற்றிக் கொண்டான்.

சிவசாமியின் வீடு முழுவதும், உறவுகள் முழுவதும், சுற்றத்தார் முழுவதும், நட்புகள் முழுவதும் மிகுந்த மரியாதையுடனும், பணிவுடனும், ரசனையுடனும், கம்பீரத் துடனும், அமைதியுடனும் இருந்தனர். அடையாறில் ஒரு வீட்டில் வேண்டுமென்றே வம்புக்கிழுத்தார்கள்.

''ஏன் சிவசாமி, அப்படி என்னத்தைக் காணாததை இந்தப் பொண்ணுகிட்ட கண்டுட்ட?'' என்று கண்சிமிட்டிக் கேட்டார்கள். சிவசாமியின் வீட்டு மனிதர்களெல்லாம் அந்த கேள்வியைக் கேட்டுத் துணுக்குற்றார்கள். என்ன இப்படி கேட்டுட்டீங்க என்பது போல் பார்த்தார்கள்.

சிவசாமி தொண்டையைச் செருமிக் கொண்டு, ''இவங்க பூசுமஞ்சளுக்கு விளம்பரம் பண்ணானே, அந்த அய்யர் பையன் எனக்கு ஃபிரண்டு. அவன்தான் இந்தக் குடும்பத்தைப் பத்தி எனக்குச் சொன்னான். நீயும் ஆந்திரா வில வந்த தெலுங்கு பேசற செட்டியார்தானே... உங்க ஜாதிப் பொண்ணு ஒருத்தியைப் பார்த்தேண்டா... அந்த வீடே அற்புதமா இருந்ததுன்னும், அவங்க வீட்டுல எப்படி எல்லோரும் ஒத்துமையா ஒண்ணா சேர்ந்து, தொழில்ல ஈடுபடுறாங்க, எப்படி தொழிலைப் பத்திப் பேசறாங்கன்னு எனக்கு சொன்னான். ராத்திரி முழுக்க அவங்க குடும்பமே எனக்கு ஞாபகமா இருந்தது. நம்ம ஆளுங்க யாரும் இப்ப வியாபாரத்துல வேகமா ஈடுபடறதில்லை. ஈடுபட்ட யாரும், ஒத்துமையா இருக்குறதில்லை. நம்ம ஜாதில நிறைய பேரு டாக்டரா, இன்ஜினியரா, கல்லூரிப் பேராசிரியரா, கம்பெனி வேலையா இருக்காங்க. இப்போ வியாபர்ரம் செய்யப் பயப்படறோம். ஆனா, உண்மையில நாம யாரு? தோள்ல கூடை தூக்கிட்டு அரிசியும், பருப்பும், மஞ்சளும், மத்த தானியங்களும் ஊர், ஊரா வித்தவங்க தானே? நம்ம உடம்புல வியாபாரந்தானே இருக்கு? அதை

விட்டுட்டு கம்பெனி வேலையில போய் கணக்கு எழுதறது நம்மால எப்படி செய்ய முடியும்? இந்தக் குடும்பமே செய்யுதுன்னா பாராட்டாத எப்படி இருக்கறது? அப்படி செய்யற குடும்பம்தான் நம்ம குடும்பத்துக்கும் சரியா வரும். பேராசிரியர் தன் பொண்ணை எங்க கட்டிக் கொடுத்தாரு?''

''டாக்டருக்குக் கட்டிக் கொடுத்தாரு.''

''டாக்டரு தன் பொண்ணை எங்க கட்டிக் கொடுத்தாரு?''

''இன்ஜினியருக்குக் கட்டிக் கொடுத்தாரு.''

''இன்ஜினியர் வீட்டுல தங்கச்சி சம்பந்தம் எங்க வைச்சிருக்கோம்?''

''ஸ்டேட் பாங்குல, பெரிய அதிகாரியா இருக்கிற வன்கிட்ட கொடுத்திருக்கோம்.''

''அப்ப எங்க வந்து பொண்ணு கொடுத்து, பொண்ணு வாங்கறது நடக்குது? ஆஃபிஸ்ல வேலை செய்யற வன்கிட்ட... வியாபாரிய நாமே மதிக்கிறதில்லேன்னு தோணுது. தாத்தா பேசுவாரு... கண்ணாடி வளையல் வித்தேன். தாமிரப் பாத்திரம் வித்தேன். வெங்கல பொம்மையா வித்தேன்... அப்படின்னு பேசுவாரு. ஹோட்டல்ல தங்குனா செலவாகுன்னு சொல்லிட்டு, எங்க கடை போட்டாலும், அங்கேயே வந்து உடம்பு முழுக்க துணி போர்த்தி, கொசுக்கடியிலிருந்து தப்பிக்க புகை போட்டு தூங்குவேன்னு சொன்னார். அவருக்கு கிராமத்துல ஏழு வீடு இருக்கு. ஆனா அவர் தூங்குறது கோயில் பிளாட்ஃபாரத்துல. கடை எங்கே இருக்கோ, அங்கே. அப்ப வியாபாரத்துல எத்தனை ஆசை அவருக்கு. அவருடைய பசங்கள்லே, ஆறு பேருல அப்பாவைத் தவிர மத்த எல்லோரும் வேலைக்குப் போயிட்டாங்க. அப்பா மட்டும்தான் வியாபாரத்துல இருந்தாரு. என்னுடைய ஜாதி வியாபார ஜாதி. எங்க அப்பா வியாபாரி. எங்க வீடு மொத்தமும் நாங்க செய்யற வியாபாரத்தை நேசிக்குது. அதே விதமா வியாபாரத்தை நேசிக்கிற இன்னொரு ஆள் எங்களுக்கு வேணும்.

பூசுமஞ்சள்ங்கிறது எனக்குக் கொஞ்சம் வேடிக்கையா பட்டது. ஆனால், யோசனை பண்ணிப் பார்க்கிற போது, யார் யார் உபயோகப்படுத்துறாங்கன்னு, கேள்வி கேட்டுப் பார்க்குற போது, அனேகமா, எல்லார் வீட்டுலயும் இவங்க

டப்பாதான் பூசுமஞ்சளா இருக்குங்கிறது தெரிஞ்சு போச்சு. எவ்வளவு குவாலிட்டி இருக்கணும்? இவ்வளவு நல்லா இருக்கணுங்கிறதுக்கு, எத்தனை சிரமப்பட்டிருக்கணும்? எத்தனை சிரமப்பட்டு இந்த இடத்தை அடைஞ்சிருக்கணும்? இது ஒரு குடும்பமாகவே செய்யறாங்கன்னா, அந்தக் குடும்பம் எத்தனை ஒற்றுமையா இருக்கணும் அப்படின்னு யோசனை பண்ணனும். அய்யர் பையன் மஞ்சள் கம்பெனி போறேன், வரியாடான்னு கேட்டான். டக்குன்னு ஏறி உட்கார்ந்துட்டேன். நாங்க ரெண்டு பேரும் கார்ல போனோம். நான் கார்லேயே உட்கார்ந்திருந்தேன். அவன் உள்ள போய் பேப்பர்லாம் கொடுத்துட்டு, செக் வாங்கிக்கிட்டு வந்தான். அங்கே கார்ல உட்கார்ந்திருந்த பதினைஞ்சு நிமிஷமும், உள்ளுக்குள்ளே உட்கார்ந்துக்கிட்டே இவங்க அப்பாவை, அம்மாவை, கற்பகவல்லியை, அவங்க பேசறது, சிரிக்கறது, காசு கொடுத்த பணிவை, மறுபடி வரச் சொன்ன பணிவை எல்லாம் பார்த்தேன். அந்த இடமே மங்களகரமா இருந்தது. என் கண்ணுக்கு ரொம்ப அழகா கற்பகவல்லி தெரிந்தாள். அந்த க்ஷணம் கற்பகவல்லிதான் எனக்குப் பொண்டாட்டின்னு மனசுல பதிஞ்சு போச்சு. இது லவ்வுன்னா லவ்வு. அரேன்ஜ்டு மாரேஜ்ன்னா, அரேன்ஜ்டு மாரேஜ். எப்படி வேணும்ன்னா வைச்சுக்கலாம்? எனக்குக் கற்பகவல்லி மட்டும் பிடிக்கலை, இவங்க வீடே பிடிச்சிருந்திச்சி.''

''அடா, அடா, அடா... ஒரு வியாபாரி இப்படி அருவியா பொழியறது இப்பதான் பார்க்கறேன். வியாபாரிக்குப் பேசத் தெரியாதுன்னு சொல்வாங்க. அது உன் விஷயத்துல பொய்யாப் போயிடுச்சு. நீ வியாபாரி மட்டுமில்லேப்பா... பேச்சாளியும் கூட. நீ சீக்கிரம் அரசியல்ல சேர்ந்துடலாம்ப்பா. உன்னை யாரும் ஒண்ணும் பண்ண முடியாது.'' - சுற்றத்தார்கள் ஆசீர்வதிக்க, அவன் கைகூப்பி அவர்கள் ஆசீர்வாதத்தை ஏற்றுக்கொண்டான். சுற்றம் முழுக்க அவனைப் பாராட்டி வாய்விட்டு சிரித்தது.

''மாப்பிள்ளையை மட்டும் கேட்டீங்க. பொண்ணைக் கேட்காத விட்டுட்டீங்களே... பொண்ணை எழுந்து நிக்கச் சொல்லுங்க...''

கற்பகவல்லி எழுந்து நின்றாள்.

''ஏன், உனக்கு என் வீட்டுப் பிள்ளையான சிவசாமியைப் பிடிச்சுது?'' என்று கேள்வி கேட்டார்கள்.

''எனக்குப் பிடிச்சுதுன்னு நான் சொல்லவே யில்லையே...''

தக்கென்று எல்லோர் முகமும் மாறிப்போயிற்று. சிவசாமி லேசான அதிர்ச்சியுடன் அவளைப் பார்த்தான்.

''எனக்குப் பிடிச்சா நான் கல்யாணத்துக்கு சரின்னு சொன்னேன்? எங்க அப்பா, அம்மா அவரை உனக்குக் கல்யாணம் பண்ணி வைக்கிறோம்மா அப்படின்னு சொன்னாங்க. சரின்னு சொல்லிட்டேன். மத்தபடி, இவர் குணமென்ன, என்ன தொழில் பண்றாருன்லாம் எனக்குத் தெரியாது.''

''தெரியாதா..?''

''யாரும் சொல்லையே...''

''நடுவுல ஒரு ஆறு மாசம் நாம கல்யாணத்துக்கு டைம் கேட்டோம். அந்த டைம் கேட்ட போது நடுவுல வந்துட்டுப் போய்க்கிட்டிருந்தாரு. அப்ப பேசிப் பழகி, அவர் யாருன்னு தெரிஞ்சிக்கிட்டேன்.''

''அதாவது...'' ஒரு சுற்றம் நீட்டி, முழக்கி இழுத்தது. ''அதாவது இது அரேன்ஜ்டு லவ் மாரேஜ் இல்லை?''

''எங்க வீடு இந்தக் கல்யாணத்தை அரேன்ஜ் பண்ண பிறகு, அவர் வந்து பேசிப் பழகுன பிறகு, நான் அவரை லவ் பண்ண ஆரம்பிச்சேன். இப்பவும் என் மனசுல என் அப்பா, அம்மாதான் முதல்ல இருக்காங்க. அப்புறம்தான் இவர் இருக்காரு ஒரு வேளை காலப்போக்குல மெல்ல, மெல்ல தன்னுடைய குணத்தாலும், நடவடிக்கையாலும் எங்க அப்பா, அம்மாவைத் தாண்டி இவர் என்னை ஜெயிக்கலாம். ஆனால், நீங்க எல்லாம் இருக்கீங்கங்கிறதுக்காக நான் பொய் சொல்லணுமா? நீங்க எல்லாம் நல்லவங்களா இருக்கீங்க. நான் எதுக்குப் பொய் சொல்லணும்? எனக்கு இவரைவிட, இவரை நல்லபடியா வளர்த்த இவர் அப்பாவையும், அம்மாவையும் பிடிச்சிருக்கு. நிறைய பேர் டாக்டரா போயிட்டாங்க, இன்ஜினியரா போயிட்டாங்கன்னு சொன்னாங்க. என்ன தப்பு? நாங்க நேத்து டாக்டர் வீட்டுக்குப் போனோம். போனவுடனே பக்கத்துல உட்கார்ந்து எனக்கு நாடி பிடிச்சிப் பார்த்து, ஒரு பிளட் பிரஷர் எடுத்துடலாமான்னு எனக்கு பி.பி. பார்த்து, நாக்கு பார்த்து, பத்து பேருக்கு முன்னால நெஞ்சுல ஸ்டெத் வெச்சு, எப்படி இருக்குன்னு பார்த்தாங்க. ஏங்க, இப்படி வீட்டுக்கு வந்த பொண்ணை இப்படி டெஸ்ட் பண்றீங்

கன்னா, எனக்கு இவ நல்லபடியா இருக்கணும், எதுனா குறை இருந்தா ஆரம்பத்துலேயே சரி பண்ணிடனும், அப்படிங்கிற அன்புனாலதான் செய்யறேன்னாரு. எனக்கு அந்த டாக்டரை ரொம்ப பிடிச்சிருந்தது. அந்த டாக்டரும் வியாபாரிதான். ஆனால், அவரோட வியாபாரத்துல எவ்வளவு நாணயமா இருக்காரு? அவர் தொழில்ல எவ்வளவு குறியா இருக்காரு? அதுதான் ரொம்ப முக்கியம். பேராசிரியர், இன்ஜினியர், ஸ்டேப் பாங்க் ஆஃபிஸர் எல்லார் வீடுமே அவங்கவங்க வேலையில பெரிய கொம்பா, சாதிச்ச ஆளுங்களா இருக்காங்க. சும்மா தண்டத்துக்குப் போய் வேலை செய்யற ஆட்களா ஒருத்தர் கூட இல்லை. ஆக, ஒரு பெரிய பட்டாளமே இவங்க பக்கம் நல்லபடியா உழைச்சு, நல்லபடியா முன்னேறுறாங்க. அது எனக்கு ரொம்ப சந்தோஷம். இப்பவும் சொல்றேன். இவங்களை எல்லாம் தாண்டித்தான் இவரை எனக்குப் பிடிக்கும். தப்பா இருந்தா, மன்னிச்சுக்கங்க.''

எழுந்து நின்று எல்லோரும் கைதட்டினார்கள். ''இவரை என்ன சொன்னே? அருவியா பொழியிறாருன்னியா? இப்ப என்ன நடந்தது தெரியுமா? இடி, மின்னல், மழை. புயல் காத்து அடிச்சுதய்யா.''

''பதினைஞ்சு பேருக்கு முன்னாடி, புருஷனை இப்படி மட்டந்தட்டிப் பேசறியே, நல்லாவா இருக்கு?'' - ஒரு பெண்மணி விளையாட்டாய் சிடுசிடுத்தாள்.

''கடவுளே... புருஷன் சிடுசிடுத்தால் ராத்திரி சரி பண்ணிடலாம். நீங்கள் எல்லாம் கோபமாப் பேசினா, நான் என்னத்தைப் பண்ணி உங்களை சரி பண்ணுவேன்?'' என்று அடிக்குரலில் கற்பகவல்லி சொல்ல, மொத்த உறவுகளும் கைகொட்டி வாய்விட்டு சிரித்தன.

''நீ பொண்ணு கொண்டாரலைடா... ராட்சஸியைக் கொண்டாந்திருக்கே... என்ன பாடுபடப்போறியோ, எனக்குத் தெரியலை.'' - ஒரு கிழவி நீட்டி, முழக்கி சொல்லி, கூட்டம் அதற்கும் ஆரவாரித்தது.

''டேய்... நீ நல்ல ஜாதி ஆம்பளையா இருந்தா, ராத்திரி அவ என்ன பண்ணாலும், நீ சமாதானம் ஆகக் கூடாது. மூஞ்சியை உர்ருன்னே வைச்சிக்கணும். வைச்சிக்கடா... இப்பவே மூஞ்சியை உர்ருன்னு வைச்சுக்கடா.'' என்று சொல்லி, சிவசாமி நடிப்பாய் மூஞ்சியை உர்ரென்று வைத்துக்கொள்ள, மறுபடியும் வீடு கைகொட்டி சிரித்தது.

''ஏங்க... பொண்ணைப் பெத்த அம்மா... நல்லா இருக்குது, உங்க பொண்ணு பேசறது. என்னாடி, இப்படி புருஷனை இழிவாப் பேசறியேன்னா, அதனால என்ன, ராத்திரி பார்த்துக்கறேன்னு டக்குன்னு உங்க பொண்ணு சொல்றா. இதுதான் சொல்லிக் கொடுத்தீங்களா நீங்க. நல்லா இருக்குது வளர்ப்பு'' - பேராசிரியர் எழுந்து நின்று, ஒரு பெண்ணைப் போல் நாடகமாடி தோள்பட்டையில் இடித்துக் கொள்ள, மறுபடியும் ஆரவாரம் எழுந்தது.

எல்லோரையும் விட அப்பாதான் வாய்விட்டு சிரித்தார். குலுங்கி, குலுங்கிச் சிரித்தார். கண்ணில் நீர் வழிய ''என் மருமகள் என்ன சொல்றான்னு பேராசிரியருக்குப் புரிஞ்சா தானே..? அவருக்கு ஒண்ணும் புரியலை. எம்புள்ளைக்கு வண்ணமா விருந்து வைச்சு, அவனைக் குளிர, குளிரக் குளிப்பாட்டி, உன்னை மாதிரி உண்டான்னு சொல்லி அவனைச் சந்தோஷப்படுத்தப் போறா. இது தெரிஞ்சு அவன் கையை, காலை அடக்கி, பொத்திக்கின்னு உட்கார்ந்திருக்கான். உங்க வீட்டுல கொஞ்சறது இல்லை போலிருக்கு. நீங்க எழுந்து நின்னு, முறைச்சிக்கோ, முறைச்சிக்கோன்னு சொல்றீங்க'' என்று சொல்ல, மறுபடியும் இன்னொரு பிசாசுக் கூச்சல் எழுந்தது.

பேராசிரியரின் மனைவியைச் சுற்றி எல்லோரும் கும்மியடித்தார்கள். ''ஏங்க உங்க புருஷனைக் கொஞ்சறதே இல்லைங்களா..?'' என்று பேராசிரியரின் மனைவியைக் கேட்டார்கள்.

''இந்தாளை எங்க கொஞ்சறது? படுத்தவுடனே தூங்கிடுறாரு. நான் சுவத்தைப் பார்த்துக்கினுதான் உட்கார்ந் திருக்கேன்.'' என்று சொல்ல, திருப்பி உச்சக்கட்டத்தை அந்தக் கூட்டம் தொட்டது.

''போதும், போதும். வேணாம்'' என்று யாரோ அடக்க, மெல்ல அடங்கினார்கள். சாப்பிட உட்கார்ந்தார்கள். சாப்பிடுகிறபோது, கற்பகவல்லியின் அப்பா காசிநாத னுக்கு ஏற்பட்ட தொந்தரவு பற்றி மெல்ல பேச்சு திசை திரும்பியது.

''நான் சொல்றேனேன்னு தப்பா நினைக்காதீங்க. எனக்கு ஒரு அசிஸ்டெண்ட் கமிஷனர் ரொம்ப பழக்கம். அவங்க பசங்களெல்லாம் என்கிட்டதான் படிச்சது. இங்கிலீஷ் சரியா பேச வரலை அப்படின்னு, அவங்க வீட்டுக் குழந்தைகளுக்கு ஒரு குற்ற உணர்வு இருந்தது.

அவர் என்கிட்ட சொல்ல, நான் வீட்டுக்குக் கூட்டிக்கிட்டு ஒரு மாசம் டிரெய்னிங் கொடுத்தேன். அவங்க ரொம்ப நல்லாப் பேச ஆரம்பிச்சிட்டாங்க. எப்படி பிக்கப் பண்ணிக்கறதுன்னு சொல்லிக் கொடுத்தேன். அந்தக் குழந்தைகள் ரொம்பக் கடுமையா உழைச்சு பிக்கப் பண்ணிட்டாங்க. அந்த அசிஸ்டெண்ட் கமிஷனருக்கு எம் மேல ரொம்ப மரியாதை, பிரியம். உங்க விஷயம் அவர்கிட்ட பேசுனேன். அவர் பேரைச் சொன்னேன். அவர் உங்களுக்கு உறவா? அடடே, என்ன கஷ்ட காலம் அப்படின்னுதான் ஆரம்பிச்சாரு. ஏங்கன்னேன். வட சென்னையிலேயே கிரிமினல் குற்றவாளிகள்ன்னு ஒரு லிஸ்ட் போட்டா, முதல்ல இவர் பேருதாங்க எழுதணும். ரொம்ப, ரொம்ப மோசமான ஒரு பார்ட்டி. எந்தவிதத்திலும் அவன் சங்காத்தம் வைச்சிக்காதீங்க. அவன் குட்மார்னிங்குன்னா, பதிலுக்கு வணக்கம் சொல்லாதீங்க. சொன்னா ஆபத்துன்னார். இப்ப நாம் பேசுனா மாதிரி விளையாட்டுக்கு பேசறார்ன்னு நினைச்சி, நான் அசிரத்தையா இருந்தேன். ஏங்க, நான் சொல்றது உங்களுக்கு நம்பிக்கையாயில்லையா? சரி, சரி... எல்லோரும் ஒரே மாதிரி இருந்துட முடியுமா? கெட்டவங்களும் ரெண்டு பேர் வேணுமே அப்படின்னேன். எவ்வளவு கெட்டவன் அப்படின்னு சொல்லட்டுமான்னு ஒரு லிஸ்ட் போட்டார். எனக்கு ராத்திரி தூக்கம் போச்சு. வயிறு கலங்கி ரொம்ப வேதனையாப் போச்சு. இன்னா ரைத்தான் தொந்தரவு பண்றதுன்னு இல்லாம, எல்லாரை யும் தொந்தரவு பண்ணியிருக்கார். ரொம்பக் குறிப்பா, அந்த ஹார்பர் தொழிலாளிங்களை அவ்வளவு ஏமாத்தியிருக்கார்.

கொலையெல்லாம் சர்வசாதாரணங்கிறாங்க. ஏதோ ஒரு கம்பெனி இரும்புத் தகடு இறக்கியிருக்குமாம். ஏதோ ஒரு கம்பெனி பூச்சி மருந்து போட்டிருக்குமாம். ஏதோ ஒரு கம்பெனி எங்கிருந்தோ வந்து மிஷின்களை இறக்குமதி பண்ணிருக்குமாம். ஏதோ ஒரு கம்பெனி பிளாஸ்டிக் கிரானுவல்ஸ் மூட்டை, மூட்டையா வைச்சிருக்குமாம். எது வேணும்னாலும் திருடிக் கொண்டு போய் வெளியே கொடுப்பாராம். அவர் சொல்றதுதான் விலையாம். யாருடைய பொருளை யார் கொண்டாந்து கொடுக்கறது? கேட்கவே முடியாதாம். கேட்டா, வெட்டுக்குத்துன்னு நடக்குமாம். இதுல கடைசியா பாதிக்கப்படறது

இன்ஷுரன்ஸ் கம்பெனி. திருட்டுப் போன பிறகு, திருட்டுப் போயிடுச்சுன்னு போலீஸ்ல புகார் கொடுத்து, இன்ஷுரன்ஸ் கம்பெனிக்கு தகவல் கொடுத்து, திருட்டுப் போன பொருட்களோட மதிப்பைக் க்ளெய்ம் பண்ணி வாங்கிக்கிறாங்க. எப்படி திருட்டு போதுன்னு இன்ஷுரன்ஸ் கம்பெனி இறங்கி பார்த்தபோது, இவர்தான் காரணம்ன்னு தெரிஞ்சுது ஒண்ணும் செய்ய முடியலை. ஆனால், மத்திய சர்க்காருக்கு விலாவரியா எழுதிப் போட்டு இப்படி ஒரு பெரிய ராக்கெட்டே நடக்குதுன்னு அங்கே சொல்லியிருக்காங்க. உடனே, மத்திய சர்க்காரிலிருந்து இந்தப் பக்கம் தாக்கீது வந்து, கொஞ்சம் வைச்சிருக்காங்களே தவிர, அழிக்கலை. மொத்தமும் அழிக்கவும் முடியாதுன்னு சொல்றாங்க.

நம்ம சம்பந்திக்கு அவர் அண்ணன்ங்கிறபோது, எனக்கு என்னடா அப்படிங்கிறா மாதிரி இருந்தது. சரி, எறும்பு இருக்கிற இடத்திலதான் பாம்பு இருக்கு. எறும்புக்கும் பாம்புக்கும் என்ன சம்பந்தம்? ஒண்ணும் இல்லை அப்படின்னு நினைச்சுக்கிட்டேன்.''

அதற்கு மேல் விஷயத்தைத் தொடராமல் விட்டு விட்டார்கள். தொடர்ந்தால் காசிநாதனுக்குத்தான் மனம் கஷ்டப்படும் என்று பெருந்தன்மையாய் நகர்ந்து விட்டார்கள். வேறு விஷயம் பேசி சிரிக்க ஆரம்பித்தார்கள்.

அன்று இரவு சிவசாமியிடம் கற்பகவல்லி கழுத்தைக் கட்டிக்கொண்டு முத்தமிட்டபடியே மன்னிப்பு கேட்டாள். சிவசாமி கற்பகவல்லியின் முத்தத்தை அதிகப்படுத்துவதற்காக, கொஞ்சம் மனம் வேதனைப்பட்டது போல் நடித்துக்கொண்டிருந்தான். அவள் நெருங்கி, இழைந்து, தலைக் கோதி, இறுக்கக் கட்டிப்பிடித்து மும்முரமானாள். இவனும் வேகமாய்க் கிளர்ந்து எழுந்தான்.

''நாளை காலையிலே ஒரேயொரு விஷயம் உங்க அப்பாகிட்ட சொல்லு'' என்று அவள் முகத்தைத் திருப்பினான்.

''என்ன?'' - விளக்கொளியில் வியப்போடு அவனைப் பார்த்தாள்.

''இப்படி ஒரு அண்ணன் இருக்காரேன்னு வருத்தப்பட வேண்டாம். எவ்விதத்திலும் அவர்களோடு சங்காத்தம் வைச்சுக்க வேண்டாம். நம்ம சுத்தி இருக்கிற மனுஷாளை அவர் தொடர்பு வைச்சுக்கிட்டு சந்தோஷமா இருந்தா

போதும். மத்ததை உன்னைப் பத்தியோ, என்னைப் பத்தியோ அவர் கவலையேபட வேண்டாம். இனி அவர் அண்ணன் அழுதழுது கேட்டாக்கூட, ஏன்னு ஒரு வார்த்தை கேட்கக் கூடாது. பதிலே பேசக் கூடாது. உனக்கும் எனக்கும் சம்பந்தமே இல்லை, அப்படிங்கிற மாதிரி இருக்கணும். அந்த மாதிரி இருக்கக் கத்துக்க சொல்லு. மத்ததையெல்லாம் நான் பார்த்துக்கறேன். உங்க அப்பா கண் கலங்குனாரு, வீட்டு வாசல்ல போய் ஒரு லட்ச ரூபாய் கொடுன்னு அழுதாருன்னு வேற உறவுக்காரங்க சொன்னாங்க. ரொம்பக் கஷ்டமாப் போச்சு. இது எல்லாமே நல்லதுக்குத்தான். அந்த ஒரு லட்ச ரூபா நஷ்டம் வந்ததுனாலதானே நம்ம கல்யாணம் சிம்பிளா நடந்தது. ஒரு கல்யாணம் இப்படித்தான் நடக்கணும். நாளைக்கு நம்ம பசங்ககிட்ட இதை நெஞ்சு நிமிர்த்தி சொல்லலாம், நான் உங்க அம்மாவுக்காக இப்படிக் கல்யாணம் பண்ணிக் கிட்டேன்னு. இப்படி சிம்பிளா நடந்தாலும் நாங்க ஒத்துமையா, நல்லபடியா குடித்தனம் பண்ணோம். அதனால நீங்களும் சிம்பிளா கல்யாணம் பண்ணிக் குங்கன்னு ஒரு சமூகத்தையே நாம மாத்தலாம். ஆடம்பர மான கல்யாணங்கிற பாவத்திலேயிருந்து நான் நல்ல வேளை, தப்பிச்சுட்டேன்'' என்று கனிவோடு பேசினான்.

கற்பகவல்லி வெறியானாள். 'நீ இத்தனை நல்லவனா? நீ இத்தனை அன்பானவனா? என் குடும்பத்தின் மீது இத்தனை பிரியமா? மகனே, என் பிரியம் எப்படி தெரியுமா? என் அன்பு எப்படி தெரியுமா? என்னுடைய காதலைத் தாங்குவாயா?' என்று இயங்கத் துவங்கினாள். அவன் திணறினான். சந்தோஷமானாள். பெரிய பூவாய் மலர்ந்தாள். அவனுடைய வேட்கைகள் குறைந்து, கண் கிறங்கி, சந்தோஷமாய் அவள் நெஞ்சில் முகம் சாய்ந்து தூங்கிப் போனான். கற்பகவல்லி வெகு நேரம் நன்றி யோடு, அவனை அணைத்துப் பார்த்துக்கொண்டிருந்தாள்.

கற்பகவல்லி மாமியார் வீட்டுக்குப் போய் குடித்தனம் செய்ய ஆரம்பித்தாள். சமையல் திறமையைக் காட்டி, எல்லோரையும் திணறடித்துக்கொண்டிருந்தாள். ஒருமுறை புருஷனோடு பூசுமஞ்சள் தொழிற்சாலைக்குப் போய், தொழிலாளர்களைப் பார்த்து குசலம் விசாரித்துவிட்டு வந்தாள். ஒரு நேர்த்திக் கடன் இருக்கிறது என்று அவர்கள் திருவலிதாயம் என்றழைக்கப்படும் பாடி கோயிலுக்குப் போய் தனியான அபிஷேக, ஆராதனைகள் செய்துவிட்டு

வந்தார்கள். திருமுல்லைவாயில் சுவாமிக்குப் பட்டு போர்த்திவிட்டு வந்தார்கள். பச்சையம்மன் கோயிலுக்குப் பொங்கல் வைத்துவிட்டு வந்தார்கள். அப்பா ஸ்கூட்டரில் அன்று இரவு வந்து, வீட்டில் செய்த பலகாரம் என்று பாதாம் அல்வா கொடுத்துவிட்டுப் போனார்.

''வீட்டுல செய்ததுனால எனக்குக் கொண்டு வந்து கொடுத்தீங்களா, அல்லது எனக்காக வீட்டுல செய்தீங்களா?'' - சிவசாமி கேட்டார்.

''உங்களுக்குப் பாதாம் அல்வா பிடிக்கும்ன்னு கற்பக வல்லி சொல்லிச்சு. அதனாலதான் அதுல கைதேர்ந்த ஒரு ஆளை வீட்டுக்குக் கூட்டிக்கிட்டு வந்து, கிளறி பக்குவமா பண்ண சொன்னோம். வைச்சு நல்லபடியா சாப்பிடுங்க'' என்று மாப்பிள்ளையைத் தடவிவிட்டுப் போனார்.

அன்று இரவு சிவசாமி, மனைவி ஊட்ட, ஊட்ட பாதாம் அல்வாவை பரம சுகமாய் விழுங்கினான். மாமியாரையும், மாமனாரையும் வாயாராப் புகழ்ந்தான். காலை பத்து மணிக்கு, தன் தந்தையோடு கிளம்பிப் போய் போன பதினைந்து நிமிடத்தில் கார் ஏறி திரும்பி வந்தான்.

''கற்பகவல்லி, இங்கே வா'' என்று வேகமாகக் கூப்பிட்டான். சமையலறையிலிருந்த கற்பகவல்லி வேக மாக ஓடிவந்தாள்.

''வண்டியில் ஏறு'' என்று கட்டளையிட்டான்.

''என்ன..? போய் புடவையை மாத்திட்டு வரேன்''

''வந்து அப்புறம் மாத்திக்கலாம்... வண்டியில் ஏறு'' என்று கத்தினான்.

விவரம் புரியாமல் கற்பகவல்லி செருப்பு மாட்டிக் கொண்டு படியிறங்கினாள். அவள் வீடு என்னவென்று விசாரித்தது. ''ஒரு பத்து நிமிஷத்தில நான் போன் பண்றேன்'' என்று சொல்லி, கற்பகவல்லியோடு வண்டி ஏறிக்கொண்டான்.

''என்னங்க..? என்ன நடந்தது?''

''ஒரு சின்ன ஆக்சிடெண்ட் ஆகிப் போச்சு, உங்க அப்பாவுக்கு''

''ஐய்யய்யோ...'' - கற்பகவல்லி உரக்கக் கத்தினாள்.

''பயப்படாதே... டக்குன்னு எடுத்துன்னு போய் பிரைவேட் ஆஸ்பத்திரியில சேர்த்திருக்காங்க. உடனே ட்ரீட்மெண்ட் கொடுத்திருக்காங்க. சரியாயிடும்ன்னு

நினைக்கறேன்.'' - அவன் தனியார் ஆஸ்பத்திரி ஒன்றில் நிறுத்தினான்.

படியேறி அவசரச் சிகிச்சைப் பிரிவுக்குக் கூட்டிக் கொண்டு போனான். அப்பாவின் தலையில் மிகப் பெரிய கட்டு போடப்பட்டிருந்தது. உடம்பில் இரத்தம் ஏற்றிக் கொண்டிருந்தார்கள். இன்னொரு பக்கம் சலைன் போய்க் கொண்டிருந்தது. டாக்டர்கள் சுற்றி நின்று, வேகமாக விவாதித்துக் கொண்டிருந்தார்கள். மூக்கில் ட்யூப் நுழைத்து ஆக்சிஜனை ஏற்றுவதற்கான ஏற்பாடுகள் செய்துகொண் டிருந்தார்கள். அன்று பிற்பகல் ஒரு மணிக்கு உறவினர்கள் எல்லாம் வராண்டாவில் கூடியிருக்க, மனைவி கால் மாட்டில் நின்றிருக்க, மகள் கற்பகவல்லி கையைப் பிடித்துக் கொண்டிருக்க, சிறிது நேரம் கண் விழித்து அவர்களைப் பார்த்துவிட்டு, காசிநாதன் கண்மூடிக் கொண்டார். சிரமத்தோடு நீண்ட பெருமூச்சு விட்டார். அடுத்த பதினைந்து நிமிடத்தில் இருதயத் துடிப்பு தடுமாறத் தொடங்கியது. மூச்சு வேகமாகியது. டாக்டர்கள் ஓடிவந்து நெஞ்சுக்கு நேரே ஊசி செலுத்தினார்கள். மெல்லியதாய் நெஞ்சில் ஷாக் கொடுத்தார்கள். இருபத்தைந்து நிமிடம் போராடினார்கள். அவர்கள் போராட்டம் தொடரத் தொடர தோல்வி என்பது தெள்ளத் தெளிவாகத் தெரிந்துவிட்டது. இருபத்தாறாவது நிமிடம் அவர் இறந்துவிட்டார் என்று அறிவித்தார்கள். கற்பகவல்லி வாய்விட்டுக் கதறினாள். அவளை அடக்குவதற்கு எவராலும் முடியவில்லை. அதற்கு நேர் எதிர்ப்புறமாய் சண்முகவடிவு தலைகுனிந்து இடி விழுந்தது போல், அமைதியாய் அந்த துக்கத்தை ஏற்றுக்கொண்டாள். எதுகுறித்தும் பேசாமல் சிலையாய் உட்கார்ந்துகொண்டிருந்தாள். அவள் கண்களிலிருந்து கண்ணீர் அருவியாய்ப் பொழிந்து கொண்டிருந்தது. புலம்பல் இல்லை. கதறல் இல்லை. உள்ளுக்குள்ளேயே குமைந்து, குமைந்து கதறுகின்ற அழுகை எல்லோருக்கும் புரிந்தது. அவள் வேதனை வயிற்றைப் பிசைந்தது.

கற்பகவல்லியின் வீட்டிற்குக் காசிநாதனைத் தூக்கிக் கொண்டு போனார்கள். மொத்த விஷயத்தையும் சிவசாமி யின் குடும்பம் கவனித்துக்கொண்டது. காலை எட்டு மணிக்கு சடலத்தை எடுக்கின்ற பணியில் வேகமாய் ஈடுபட்டுக்கொண்டிருந்த போது, யாரோ ஒருவர் உள்ளே வந்து, ''எல்லாருக்கும் சொல்லிட்டீங்களா..? யாருக்காவது சொல்லாத விட்டிருக்கப் போறீங்க. சொல்லிட்டு வந்தி

டுங்க'' என்று கத்தினார். திடுமென்று இப்படி ஒரு கூச்சல் கிளம்பியதும் யாரென்று புரியாமல் திகைத்தார்கள். ''சொந்த அண்ணன் இருக்காரு. இந்தப் பேட்டையிலேயே இருக்காரு. அவருக்கு ஒரு வார்த்தை சொல்ல வேண்டாமா..?''

''என்னங்க, கல்யாணமா நடக்குது, போய் விருந்து வைக்கிறதுக்கு? ஆள் செத்துப் போயிட்டாங்கன்னா, ஓடி வந்து அழ வேண்டியதுதானே..? இதுக்கு என்ன சொல்லி அனுப்பனுங்கிறீங்க..?''

''நல்லதுக்கும் கெட்டதுக்கும் சொல்லி அனுப்பறது நம்ம பழக்கங்க. சொல்லி அனுப்பாம யாரும் வர மாட்டாங்க. சொன்னாதான் வருவாங்க. சொல்றது முறை. தயவு செய்து போய் சொல்லிட்டு வாங்க'' - வந்தவர் சீறினார்.

அவர் காசிநாதனின் தமையனாருக்கு நெருங்கியவர் என்பது எல்லோருக்கும் தெரிந்தது. ஆனால், அந்தப் பேச்சிலுள்ள நியாயத்தைப் புரிந்துகொண்டார்கள். சொல்வதற்காக கற்பகவல்லியின் வீட்டில் வேறு ஆண் பிள்ளை இல்லாததால், மாப்பிள்ளையை அனுப்பினார்கள். மாப்பிள்ளையான சிவசாமி போய் தகவல் தெரிவித்துவிட்டு வந்தான். அங்கு யாரும் முகங்கொடுத்துப் பேசவில்லை என்று சொன்னான். வெறுமே முரசறைபவன் போல் தகவல் சொல்லிவிட்டுத் திரும்பியிருக்கிறேன் என்று அலுப்போடு சிவசாமி பேசினான்.

சிவசாமி வந்த பதினைந்து நிமிடத்தில், மிகப் பெரிய பட்டாளம் ஒன்று வீட்டுக்குள் இறங்கியது. வேகமாய் அழுது அலம்பல் பண்ணியது.

''என்னடா பல்லக்கு பண்றீங்க .? அவன் என் தம்பிடா... ரெண்டாள் உயரத்துக்குப் பல்லக்கு இருக்கணும். கழட்டிப் போடு இதை...'' என்று பாதி செய்து கொண்டிருந்த பல்லக்கைப் பிரித்துவிட்டு இன்னும் பெரிய பல்லக்காகச் செய்யச் சொன்னார்கள். யார் காசு கொடுப்பது என்பதைப் பற்றிப் பேசாமல் இருந்தார்கள்.

''நாலு பக்கமும் நாலு கோழி கட்டணும்.'' என்று கோழி வாங்கி தரையில் அடித்துக் கொன்றார்கள். ரத்தம் சொட்ட, சொட்ட தூக்கு மூங்கிலில் கட்டினார்கள். பறைகளை வேகமாக முழக்கச் சொன்னார்கள். சிலரைக் கூப்பிட்டு நடனமாடச் சொன்னார்கள். பகல் நேரமாக இருந்தாலும்,

பெட்ரோமாக்ஸ் லைட் வேண்டுமென்று ஆரவாரித்தார்கள். உதிரிப் பூ நூறு கூடை வேண்டுமென்று கேட்டார்கள். தெருவெல்லாம் இரைத்தார்கள். ஆயிரம் ரூபாய்க்கு பட்டாசு வாங்கிக் கொளுத்தினார்கள். குடிசைவாழ் மக்களைக் கூப்பிட்டு நடைபாவாடை விரிக்கச் சொன்னார்கள். விரித்தவர்களுக்கெல்லாம் பத்து ரூபாய் காசு கொடுத்தார்கள். பல்லக்கு கிளம்பும் போது பெரிய கூச்சலோடு அழுதார்கள். சண்முகவடிவும், கற்பகவல்லியும் பின்னுக்குத் தள்ளப்பட்டார்கள். எடுத்து செய்வதற்கு முடியாமல் சிவசாமியின் குடும்பமும் தத்தளித்து. பயந்து, பயந்து வேலை செய்தது.

''கற்பகவல்லி, ஒரு பத்து ரூவா கொடும்மா, செலவுக்கு''

''எதுக்குங்க, பத்து ரூவா?''

''பத்து ரூவான்னா, பத்து ரூவா இல்லேம்மா. பத்தாயிரம் ரூபா. நேத்திக்கே நான் கையை விட்டு, இடது வலதா செலவு பண்ணிட்டேன். இன்னிக்கும் செலவிருக்குல்லே..?''

கற்பகவல்லி என்ன செய்வதென்று தெரியாமல், அம்மாவைப் பார்த்தாள். அம்மா கொடுவென்று சொன்னாள். கற்பகவல்லி பீரோவைத் திறந்து, பத்தாயிரம் ரூபாய் கட்டை எடுத்து, அப்பாவின் தமையனாரிடம் நீட்டினாள். அன்றும் பட்டாசுகள் வெடிக்கப்பட்டன. பூக்கள் தூவப்பட்டன.

''கற்பகவல்லி, காட்டுல ஒரு ரெண்டாயிரம், மூவாயிரம் செலவாகியிருக்கும் போலிருக்கும். அது மொத்தமும் கவர்ன்மெண்டுதான் செலவு பண்ணும்னு நினைச்சேன். கண்ட மேனிக்குக் கேட்கறாங்களே... கொஞ்சம் காசு கொடு, கற்பகவல்லி.'' - தமையனாரின் மகன் ஓடிவந்து கேட்டான்.

''எங்கே இருக்கீங்க, இப்போ?''

''இறக்கி வைச்சதும் காசு கேட்டான். காசு இல்லை, யார்கிட்டயும். அதுதான் ஓடியாந்தேன்.''

சட்டென்று ஐந்தாயிரம் ரூபாய்க் கட்டை எடுத்துப் பிரிக்கப் போனாள்.

''பிரிக்காதே... இன்னும் யார், யார் என்ன கேட்கப் போறான்னு தெரியலை. அப்படியே கொடு.'' - ஐந்தா

யிரத்தைக் கிட்டத்திட்ட பிடுங்கிக் கொண்டு கணேசன் ஓடினான்.

'ஏதோ தவறு நடக்கிறது, யாரோ ஏமாற்றுகிறார்கள்' என்று கற்பகவல்லிக்கு உள்ளுக்குள் பட்டது. அவள் மனம் சிவசாமியைத் தேடியது. ஆனால் சிவசாமி அப்பாவோடு போயிருந்தான். ஒண்ணரை மணி நேரம் பொறுத்து ஆட்கள் வந்தார்கள். காட்டில் ஒரே தகராறாம். நீயா எங்கள் குடும்பத்தினருக்குக் கொள்ளி வைப்பது என்று சிவசாமியை சட்டை பிடித்துக்கொண்டு கேட்டார்களாம். ''மாமியார் சொல்லியிருக்கிறார்கள். அதனால் மாமனாருக்குத் தீ மூட்டுகிறேன்.'' என்று சொல்லிப் பார்த்தும் முடியவில்லையாம். நான்தான் கொள்ளி வைப்பேன் என்று கணேசன் கொள்ளி வைத்தான். மகன் முறை என்று சொன்னானாம். பேச்சு தடித்து, ரசாபாசமாகிவிட்டதாம்.

''உங்க அப்பா எவ்வளவு நல்ல மனுஷன்? எவ்வளவு அற்புதமா நடக்க வேண்டிய விஷயம்? அவர ஓரமா போட்டுட்டு, சுத்தி நூறு பேர் நின்னு சண்டையைத் தூண்டி விட்டுக்கிட்டு இருக்காங்க. ஆள் செட் பண்ணி கூட்டிக் கிட்டு வந்துருப்பான், போலிருக்கு. ரொம்ப, ரொம்ப ஜாக்கிரதையா இருக்கணும், அவங்ககிட்ட. காசு, காசுன்னு நாய் மாதிரி அலையறாங்க. என்னமோ... இப்படி ஒரு உடன்பிறப்பு'' என்று உறவினர்கள் அலுப்பாகச் சொன்னார்கள்.

கற்பகவல்லியின் கணவன் சிவசாமியின் பக்கம் அவனுடைய வீட்டார்கள் எல்லோருமே சூழ்ந்திருந்தார்கள். ''கையை ஓங்குறான், கத்தி காட்டறான். எங்க வீட்டுப் பிள்ளையை ஏதாவது பண்ணிட்டா, பத்து நாள் வரைக்கும் நான் இங்கேதான் இருப்பேன். என் மேல கை வைச்சே, பத்து, பதினைஞ்சு தலை தரையில உருளும்'' என்று ஒரு உறவினர் உரக்க சத்தமிட்டார். ஆனால் இரண்டு நாட்களுக்குப் பிறகுதான் தெரிந்தது, அவர்கள் ஆள் மீது கை வைக்கவே வரவில்லை; கற்பகவல்லியின் சொத்து மீது கைவைக்க வந்திருக்கிறார்கள் என்று புரிந்தது.

உலகத்தில் எங்கும் நடக்காத மிகப் பெரிய அநியாயம் அவர்கள் குடும்பத்திற்கு நடந்தது. உடன்பிறப்பு, உடன்பிறப்பு என்று சொல்லிக்கொண்டு கொள்ளை யடிக்கிற கும்பலை வீட்டு வாசலில் வைத்து சோறு போட்டது போல் ஆகிவிட்டது. உள்ளுக்குள் அழைத்து நீர்

கொடுத்தது போல் மாறிவிட்டது. அப்பா விபத்தில் இறந்த அடுத்த அரை மணி நேரம், அவர் பையில் வைத்திருந்த காசோலையை எடுத்து, அவரைப் போலவே கையெழுத்து போட்டு, பேங்கில் இருந்து மொத்தக் காசையும் வாரி எடுத்துக் கொண்டு போனார்கள். லோடு வருதுங்க, தப்பா நினைச்சுக்காதீங்க என்று பேங்க்கில் சொல்லிவிட்டுப் போனார்கள். திருவொற்றியூர் தொழிற்சாலைக்குப் போய், அரவை மிஷினுக்கு அருகில் அடுக்கி வைத்திருந்து அறுபது மூட்டை மஞ்சளையும் லாரி கொண்டு வந்து அள்ளிக் கொண்டு போனார்கள். ரெடியாக இருக்கிற பூசுமஞ்சளை டப்பா, டப்பாவாய் ஏற்றிக்கொண்டு போனார்கள். அரவை மிஷினுக்காக வாங்கி வைத்திருந்த புதிய பல்சக்கரங்களை யும் எடுத்துக்கொண்டு போய்விட்டார்கள்.

அப்பாவின் பெயரைச் சொல்லி, கற்பகவல்லியின் பெயரைச் சொல்லி, வேறு யாரோ ஒரு பெண்ணைவிட்டு போன் பண்ணச் சொல்லி, உடனடியாக காசு வேண்டு மென்று நாற்பத்தைந்தாயிரம் ரூபாய் ஒரு ஆளிடம் கடன் வாங்கிக் கொண்டார்கள். அப்படியும், இப்படியும் நான்கு லட்ச ரூபாய் ஏமாற்றினார்கள். இது தெரிவதற்கே பத்து நாட்கள் ஆயின. விசாரிக்க ஒரு முழு நாள் ஆகியது. கற்பகவல்லியின் குடும்பம் ஏமாற்றப்பட்டது என்பது ஊர் முழுக்கத் தெரிந்தது. எல்லோரும் விசாரித்தார்கள். அம்மா அவமானத்தால் குன்றிப்போனாள். போய்க் கேட்கிறேன் என்று எழுந்தால் பெண்கள் போகக் கூடாது என்று தடுத்து விட்டார்கள். தொலைபேசியில் தொடர்புகொள்ள முயன் றால், யாரும் எதிர்பக்கம் சரியாக பதில் சொல்லவில்லை. அந்த வீட்டுப் பெண்கள் எவரும் எந்த விசேஷசத்திற்கும் வரவில்லை. பதின்மூன்றாம் நாள் காரியம் முடித்து, நல்ல செய்தி பேசலாம் என்று உட்கார்ந்தபோது, எல்லார் மனதிலும் இப்படி ஏமாற்றப்பட்டதுதான் ஞாபகம் வந்தது. எந்த நல்ல செய்தியும் பேசமுடியவில்லை.

''ஏங்க... எவ்வளவு கெட்டிக்காரரா இருந்தார் உங்க புருஷன்? ஒத்த மனுஷனா வாழ்க்கையில முன்னேறி வந்தாரு. உங்களுக்கு அந்த வித்தை சொல்லித் தரலையா? யார்கிட்ட ஜாக்கிரதையா இருக்கணும், யார்கிட்ட பிரியமா இருக்கணும்னு உங்களுக்குப் பிரிச்சுத் தரலையா? இவங்களைப் பக்கத்துல விட்டுட்டு, நீங்களா ஏன் அவஸ்தைபடறீங்க? கட்டுகட்டா உங்ககிட்ட காசு வாங்கறதை ஊர் பார்த்த பிறகு, உங்க பேரைச் சொல்லிக்

கடன் கேட்டால், மாட்டேன்னு எப்படி சொல்வாங்க? அவங்க கொடுத்திருக்காங்க. என்ன பண்றது? தெள்ளத் தெளிவா ஏமாத்திட்டாங்க.'' என்று குமுறிய அந்த மாலை, சிவசாமியைக் கூட்டிக்கொண்டு போய், கன்னம், கன்னமாய் அறைந்திருக்கிறார்கள்.

''எகிறிக்காட்டுறீயா..? கையை உடைச்சுடுவேன், காலை உடைச்சுடுவேன். எங்க வீட்டுப் பெண்ணுக்கு மாப்பிள்ளைங்கிறதுன்னால உசிரோட விடறேன். இல்லேன்னா, இந்நேரம் கண்டதுண்டமா வெட்டி, கடல்ல போட்டிருப்பேன்.'' என்று கர்ஜித்தார்களாம். தலையில் அடித்தார்களாம். சட்டையைக் கிழித்தார்களாம். வாயில் தண்ணீர் விட்டுக் கொண்டு, முகத்தில் கொப்பளித்தார்களாம். ''நீ சின்ன பையன்... பச்சா... நாங்க நினைச்சா, உன்னை மூட்டைப்பூச்சி மாதிரி நசுக்கிடுவோம்.'' என்று நெற்றியில் கை வைத்து அடித்தார்களாம்.

சிவசாமியின் முகம் கலவரமாக இருந்தது. அவனுக்கு சண்டை பழக்கமில்லை என்பது தெரிந்தது. அப்பேர்ப்பட்ட ரவுடித் தனத்தை அவன் சந்தித்ததில்லை என்பது புரிந்தது. பேசிக்கொண்டே இருக்கும்போது, சிவசாமி அழுதுவிட்டான். ''எதுக்கு? எதுக்குக் காசு? எடுத்துக்கிட்டுப் போகட்டும்'' என்று கையை உதறினான். அவன் அழுகையைப் பார்த்துவிட்டு, அம்மா ஓவென்று கதறினாள். நெஞ்சிலடித்துக் கொண்டாள். ''எனக்கு ஒண்ணும் சொல்லித் தராத போயிட்டியே... ஒண்ணும் சொல்லித் தராத போயிட்டியே'' என்று புருஷனை நினைத்துப் புலம்பினாள்.

கம்பெனியில் மஞ்சள் கிழங்குமில்லை. மஞ்சளுமில்லை. கூலியாட்களுக்கு அந்த வாரம் கூலி கொடுக்க காசுமில்லை. கற்பகவல்லி தன் நகைகளை அடகு வைத்து காசு கொடுத்தாள். கற்பகவல்லியும், சிவசாமியும் கம்பெனியைச் சுற்றிப் பார்த்து பதினைந்து மூட்டை மஞ்சள் வாங்கி வந்து அரைக்க ஆரம்பித்தார்கள். என்னவானாலும் கம்பெனியைத் தொடர்ந்து நடத்துவதென்று அப்பாவின் படத்திற்கு முன்னால் சபதம் செய்தார்கள்.

''உனக்கு கல்யாணம் பண்ணிக் கொடுத்தாச்சு. மாப்பிள்ளை வீட்டோட போக வேண்டியதுதானே..?'' என்று கணேசன் வீட்டு வாசலில் மோட்டார் சைக்கிளில் வந்து காலூன்றி நின்றபடி கற்பகவல்லியைப் பார்த்து கேட்டான்.

''அந்த அரவை மிஷினெல்லாம் எங்க சொத்து. எங்களுக்கும் பங்கு உண்டு. நீங்க மட்டும் ஆட்டம் காமிக்க முடியாது. புரியுதா? எப்ப மஞ்சள் வேணும்னு சொல்லு. நான் கொண்டாந்து இறக்கறேன்'' என்று சொல்லிவிட்டுப் போனான்.

கற்பகவல்லி என்ன செய்வதென்று தெரியாமல் திகைத்தாள். யாரிடம் போய் புகார் செய்வது என்பது புரியாமல் தவித்தாள். வக்கீலிடம் கலந்தலோசித்தாள். போலீசுக்குப் போகலாம் என்று வக்கீல்கள் உற்சாகப்படுத்தினார்கள். ஆனால், போலீசுக்குப் போனால் விஷயங்கள் வேறு விதமாகும். போலீஸ் அவர்கள் பக்கம்தான் இருக்கும் என்பதும் எல்லோராலும் உணரப்பட்டது.

பூசுமஞ்சளில் கலப்படமாம். ஒரு வாரப் பத்திரிகை எழுதியிருந்தது. கம்பெனியின் பெயர் போடாமல் பூசுமஞ்சளில் மரத் தூள் கலக்கிறார்கள், எனவே அதைப் பூசிகிறபோது உடம்பில் அரிப்பும், தடிப்பும் ஏற்படுகிறது. எனவே மஞ்சள் பூசுவதைப் பற்றி பெண்கள் யோசிக்க வேண்டும். அற்புதமான லோஷன்கள் இருக்க, இன்னும் மஞ்சளைக் கட்டிக் கொண்டு அழுவானேன் என்று அந்தப் பத்திரிகையில் போட்டிருந்தது. கிட்டத்தட்ட இந்த டப்பா போலவே, இன்னொரு டப்பாவை வைத்து பூசுமஞ்சள் என்று அடையாளம் காட்டியது. மறுநாளே வெகு கணிசமாய் வியாபாரம் பாதிக்கப்பட்டது.

''என்னாங்க... இப்படியெல்லாம் பேசறாங்க? கஸ்டமர்ஸ் கேட்கிற கேள்விக்குப் பதில் சொல்ல முடியலையே..?'' - சிறுவியாபாரிகள் வந்து போன் செய்தார்கள். நேரே வந்து குறை சொன்னார்கள். அம்மா அப்பாவை நினைத்து அழாமல், அடுத்தபடி நடக்க வேண்டிய விஷயங்களை நினைத்து தவித்தாள். 'ஏன் இப்படி? ஏன் இப்படி?' என்று வேதனைப்பட்டாள். சுவரோரம் அமர்ந்துகொண்டு, முகத்தைப் பொத்திக் கொண்டு வெகு நேரம் யோசனை செய்தாள்.

''சிவசாமி, கொஞ்சம் கூட வா'' என்று சொல்லி, அவனோடு ஆட்டோவில் ஏறி, அப்பாவின் அண்ணன் வீட்டுக்குப் போனாள்.

''அடடே... ஒரு வருஷத்துக்கு வரக் கூடாதுன்னு சொல்வாங்க. நீங்க பாட்டுக்கு டக்குன்னு வந்துட்டீங்க.''

''நான் ஒண்ணும் வீட்டுக்குள்ளே வரலை. வாசலிலேயே நின்னு பேசிட்டுப் போயிடறேன்.''

''ஏன் இப்ப வந்திருக்கீங்க?''

''எதுக்கு இப்படி அநியாயமா ஆடறீங்க..? அத்தனையும் எங்க சொத்து. மொத்த மஞ்சள் மூட்டையையும் எடுத்துக்கிட்டுப் போயிட்டீங்களே... இது நியாயந்தானா..?''

''ஏய்... யாரைப் பார்த்துக் கேட்கற, மஞ்ச மூட்டையை எடுத்துக்கிட்டுப் போனீங்கன்னு?''

''நீங்க எடுத்துக்கிட்டுப் போனதா, காவக்காரன் சொன்னான்.''

''காவக்காரன் எடுத்துக்கிட்டு எங்க பேர் சொன்னா? நீ காவக்காரனைக் கேட்காத என்னை வந்து கேட்பியா? நல்லாருக்கே... இப்படி கேட்டதுக்கே உன்னை நாஸ்தி பண்ணலாம், தெரியுதா?'' என்று அப்பாவின் அண்ணன் கத்தத் தொடங்கினார். தான் கையெழுத்து போடவே இல்லை என்று மறுத்தார். பூசுமஞ்சள் டப்பாவை எடுத்தது யார் என்று தெரியாது என்று சொன்னார். சிவசாமியை அன்போடு விசாரித்ததாகவும், மிரட்டவில்லை என்றும் மாற்றினார். வெகுநிச்சயமாய் மஞ்சள் தொழிலில் தனக்குப் பங்கிருக்கிறது. அதை விட முடியாது தானும் முதல் போட்டுத்தான் அந்த மஞ்சள் கம்பெனி ஆரம்பிக்கப் பட்டது என்று கூசாது பொய் சொன்னார். அம்மா ''நீ நல்லா இருப்பியா..? விளங்குவியா..?'' என்று கத்தினாள்.

அவர் சிரித்தார். ''என்னமோ காயப்பட்ட பொம்பளை... கள்ளு குடிச்சிட்டு உளர்ற மாதிரி, துக்கத்துல உளர்ற... போ.. போ...'' என்று வீட்டுக்குத் துரத்தினார்.

''நான் போயிட்டா முடிஞ்சு போச்சா? உன்னை எப்படி அழிக்கணும்னு எனக்குத் தெரியுண்டா...'' என்று அம்மா கத்தினாள்.

''என்னடி... வாடா, போடான்னு பேசறே..?'' - அப்பா கீழே இறங்கினார்.

சட்டென்று அம்மாவின் தலைமுடியைப் பிடித்தார். ''நான் நினைச்சேன், மொத்தத் துணியையும் உருவிப் போட்டு, உன்னை நாஸ்தி பண்ணிடுவேன்'' என்று மறுபடியும் கர்ஜித்தார். ஆபாசமாகப் பார்த்தார். சிரித்தார்.

''கையை எடுடா... கையை எடுடா...'' என்று அம்மா தவித்தாள்.

''ஏன், நான் கை வைச்சா கூசுதா..? ஈரோட்டுல எத்தனை மஞ்சள் வியாபாரியோட படுத்திருக்கே..? அவன் கடன் கொடுத்தாமாதிரி எந்த வியாபாரி கடன் கொடுப்பான்? உன்னை வைச்சுதானே மஞ்சள் வாங்குனான், எனக்குத் தெரியாதா?'' என்று மறுபடியும் இரைந்து பேசினார். தெருவில் போவோர், வருவோர் நின்று வேடிக்கை பார்த்தார்கள். சிவசாமி தள்ளி அம்மாவைக் காப்பாற்ற முயன்றபோது, இரண்டு அறை சிவசாமிக்கு விழுந்தது. சிவசாமியால் எதிர்க்க முடியவில்லை. ''போ... என் தம்பி பொண்டாட்டிங்கிறதுனால மரியாதையா விடறேன். இல்லே, இந்நேரத்துக்கு வேற யாராகவோ இருந்தால் கை, காலைப் பேத்துருப்பேன், போ...'' என்று அம்மாவின் கழுத்தைப் பிடித்து நெட்டித் தள்ளினார்.

அம்மா ஆட்டோ ஏறி வீட்டு வாசலுக்கு வந்து உட்கார்ந்துகொண்டாள். மழைவெள்ளத்தில் சாக்கடை இழுத்துக்கொண்டு வீடு முழுவதும் அசிங்கமாவதைப் போல, இந்த சம்பவத்தால் மனம் முழுவதும் வேதனைப்படர்ந்தது. மிகப் பெரிய அழுக்கு படர்ந்தது போல, உடம்பு முழுவதும் எல்லோருக்கும் இருந்தது. சிவசாமி குன்றிப் போனான். எவ்வளவு தேற்றியும், எழுந்திருக்காமல், சுருண்டு சுருண்டு படுத்துக்கொண்டான். 'இவங்களை யாரும் ஒண்ணும் பண்ண முடியாதா? எதிர்த்து எவரும் கேட்க முடியாதா? இவங்க கையை, காலை யாருமே வெட்ட முடியாதா? வலுவிருக்கறவன் தான் பெரிய ஆளா?' என்று இரவு நேரம் எழுந்து அரற்றினான்.

அம்மா ஓடிப்போய் அவன் தலையில் கை வைத்தாள். ''போதும்... பேசாத படு. நீ ஒரு இடத்துல வேலை செய்யற... என் பொண்ணைக் கூட்டிக்கிட்டு உன் வீட்டுக்குப் போ. இனிமே அங்கே இரு. இங்க எல்லாத்தையும் எடுத்துக்கட்டும். அதைப் பத்தி எனக்கு கவலையில்லை. எடுக்க விடாம பண்றதுக்கும், எடுத்ததை திருப்பிக் கொண்டாந்து கொடுக்கறதுக்கும் என்னால செய்ய முடியும். நீ போ. இங்கிருந்தா உனக்கு வேதனையா இருக்கும். நான் மட்டும் தனியா இருக்கேன்'' என்று சிவசாமியையும், கற்பகவல்லியையும் துரத்தினாள்.

சிவசாமி கிளம்பிப்போனான். ''கற்பகவல்லி, நீ இரு. அம்மாவை விட்டு வராதே'' என்று கட்டளையிட்டான்.

அம்மா களிமண் வாங்கி வரச்சொன்னாள். மெல்ல, மெல்ல ஒரு பொம்மை செய்தாள். ஓரடி உயர பொம்மை. முகம் சிங்க முகம். உடம்பு பெண்ணுடம்பு. கைகள் நான்கு, நான்காய் எட்டு கைகள். வாகனம் சிம்மம். கையில் சூலம்.

''என்னம்மா... என்ன பொம்மை இது?'' - வியப்போடு கற்பகவல்லி கேட்டாள்.

''நரசிம்ம அவதாரம் உலகத்துல எடுத்தவுடனே, யார் யாரை அழிக்கணுமோ, அவங்களை நரசிம்மர் அழிச்சிட்டாரு. ஆனால், கெட்டவங்களை அழிச்சதோட அந்த நரசிம்மர் நிக்கலை. அந்தக் கோபம் குறையலை. அந்த உஷ்ணம் அமைதியாகலை. அது இன்னும் அதிகமாயிட்டே இருக்கு. அந்த சக்தியை அடக்க இன்னொரு சக்தி தேவைப்பட்டிருக்கு. நரசிம்மரை அடக்க சரபர் அப்படிங்கிற ஒரு உருவத்துல சிவன் பறவையா, மிருகமா, மனுஷனா கலந்து ஒரு உருவமெடுத்து நரசிம்மரை அடக்குனாரு அந்த சரபர் சக்தியினுடைய இன்னொரு விஷயம் ப்ரதியங்கரா தேவி. புத்தி சிங்கமாகவும், உடம்பு பெண்ணாகவும் இருக்கிற ஒரு விஷயம். பெண்ணுடைய புத்தி சிங்க புத்தியாக மாறிவிட்டால், அது எதிரே ஒருத்தரும் நிக்க முடியாதுங்கிறதுதான் அர்த்தம். நான் பாட்டுக்கு அமைதியா இருந்தேன். நல்ல புருஷனோட வாழ்ந்தேன். நல்லபடியா குடித்தனம் பண்ணேன். கார் ஏறி அந்த மனுஷன் செத்துப்போனான். அதையும் பொறுத்துக்கிட்டேன்.

ஆனால், என் மயிரைப் பிடிச்சி இழுத்து, என்னைக் கேவலமா பேசினானே, இதை என்னால பொறுத்துக்க முடியாது. என் சொத்து மொத்தமும் எடுத்துக்கிட்டா கூட சரி... காசாசைப்பட்ட விஷயம். இந்த ஜன்மத்துல எடுத்துக்கிட்ட காசை, இன்னொரு ஜன்மத்துல எவனாயிருந்தாலும் திருப்பிக் கொடுக்கத்தான் வேணும். ஆனால் ஈரோடு வியாபாரி கூடவெல்லாம் என்னை உங்க அப்பா பங்கு போட்டாருன்னு சொன்னதை, என்னால தாங்க முடியலை. பொம்பளையை இழிவு படுத்துறது ஆம்பளைக்கு இயல்பு. பொம்பளையை கேவலப்படுத்துறது ஆம்பளையோட குணம். சில கெட்ட ஆம்பளை; தன்னை மதிக்க, தன்னைப் பெரிய ஆளா காமிச்சுக்கிறதுக்கு திரும்பத் திரும்ப பொம்பளையோடதான் தகராறு பண்ணுவான். வேறு எங்கேயும் ஜெயிக்க முடியாத பொம்பளைகிட்டதான்

முரட்டுத் தனம் பண்ணுவான். என்னை அடிச்சபோது கூட பொறுத்துக்கிட்டேன். ஆனால், தலையில கை வைச்ச போது, அவன் உத்துப்பார்த்தானே, அதைப் பொறுத்துக்க முடியலை.

அந்த நாய்க்கு யார்ன்னு என்னைத் தெரியலை. இத்தனை வயசுக்குப் பிறகும் என்னை அவிழ்த்துப் பார்க்க ஆசைப்படுது. தம்பி சாப்பிட்ட சோறு, தான் சாப்பிட்டுப் பார்க்கணுங்கிற கேவலமான புத்தி. கேட்கறதுக்கு ஆள் இல்லை அப்படிங்கிறதால, யார் மேல வேணும்னாலும் கை வைக்கறான். சொந்தமா இருக்குற நம்ம மேலேயே இப்படி வைக்கிறானே, அவன் மத்தவங்களையெல்லாம், மத்த பொண்ணுங்களையெல்லாம் எத்தனை தடவை தொட்டிருப்பான்? துக்கத்துல இருக்கிற என்னையே அவன் அவிழ்த்துப் பார்க்கணும்ன்னு நினைக்கறானே, உதவி கேட்டு வந்த பொண்ணை அவன் என்னவெல்லாம் செய்வான்? இப்படிப்பட்ட ஆள் இருக்கக் கூடாது. இருந்தால், அது நமக்கு நல்லதில்லை. ஊருக்கு நல்லதில்லை. எனக்கு நல்லதோ, கெட்டதோ, என்னால தாங்க முடியாது. ஊருல இந்த தலை செய்யற அயோக்கியத் தனத்தைப் பார்த்துக்கிட்டிருக்க முடியாது. இவனை அழிச்சே ஆகணும். நான் அழிப்பேன். அழிக்கிறதுக்குத்தான், இந்த பொம்மை. சிவசாமி... என்னை திருவெண்காட்டுக்குக் கூட்டிக்கிட்டுப் போறியா..?''

''எதுக்கு மாமி..? கோயிலுக்கா போகணுங்கிறீங்க..? ஒரு வருஷம் கழிச்சுதானே, மாமி போகலாம்ன்னு சொல்வாங்க...''

''ஒரு தடவை கோயிலுக்குப் போயிட்டு வந்துட்டு, அப்புறம் ஒரு வருஷம் போகக் கூடாதுங்கிற சம்பிரதாயம் எங்க வீட்டுல உண்டு. வேற எங்கேயாவது போறதுக்கு, திருவெண்காடு போலாம்ன்னு இருக்கேன். அந்த ஆலமரத்துக் கீழே உட்கார்ந்து, எள்ளும் தண்ணியும் இறைச்சு, உங்க மாமனாரை இங்க கூப்பிட்டு, நமக்கு வரம் கொடுக்கச் சொல்லலாம். இவரை அழைச்சாகணும். என்னைக் கூட்டிக்கிட்டுப் போ...'' - மாப்பிள்ளையை நோக்கி கற்பகவல்லியின் அம்மா, கைகூப்பினாள்.

அவர்கள் காரில் திருவெண்காடு பயணப்பட்டார்கள். அம்மா பயணம் முழுவதும் கண் மூடி வந்தாள். அவளைப் பார்ப்பதற்கு பரிதாபமாக இருந்தது. திருவெண்காட்டில்

இறங்கி குளித்தார்கள். மூன்று குளங்களில் நீராடினார்கள். ஈரத்தோடு சண்முகவடிவு கோயிலை வலம் வந்தாள். புதன் சன்னதிக்கு எதிரே உள்ள குளத்தில் தலை தெளித்துக் கொண்டாள். படியேறினாள். ஆல மரத்தின் கீழே உட்கார்ந்துகொண்டாள். குருமூர்த்தி ஓடி வந்தான். சிவசாமியின் கைகளைப் பிடித்துக்கொண்டான்.

''என்னடா இது..? என்னென்னமோ கேள்விப் படறேன். என்ன ஆச்சு?''

''ரொம்ப நல்லவர், எங்க மாமனார். அவங்க அண்ணன்மாரே அவரைக் கவிழ்த்துவிட்டுட்டாங்க. ஒரு பொண்ணுதானே... கல்யாணம் பண்ணிக் கொடுத்துட் டேல்ல... மொத்தமும் நாங்க எடுத்துக்கறோம்ங்கிற மாதிரி, இவங்க சொத்தெல்லாம் எடுத்துக்கிட்டாங்க. அதெல்லாம் கூட பராவாயில்லை. கற்பகவல்லி அம்மாவை அசிங்கமா நடத்துனாங்க. அதுலதான் அந்த அம்மா உடைஞ்சு போச்சு. இங்கே வந்து அப்பாகிட்ட பலம் கேட்கணும். நம்பள்க் கவிழ்த்து அசிங்கம் பண்ணுனவனை நாசம் பண்ணணும். உறவுக்காரங்களான நம்மளையே நாசம் பண்ணுறானே, மத்தவங்களை என்ன பண்ணமாட்டான்னு இருக்கக் கூடாதுன்னு கத்தறாங்க. இந்த இடத்துல உட்கார்ந்து, பூஜை பண்ணி அப்பாவைக் கூப்பிடணும்ங்கிறாங்க. எனக்கு இதெல்லாம் தெரியலை...''

''பின்ன என்னடா... அவங்க புரிஞ்சுதான் சொல்றாங்க. நான் வாத்தியாரைக் கூட்டிக்கிட்டு வரேன். கூட்டிக்கிட்டு வந்து மந்திரம் சொல்லச் சொல்றேன். நீ ஒண்ணும் கவலைப்படாதே. அவங்க ஈரத்துணியோட உட்கார்ந்திருக் காங்க. செத்துப்போனவங்க நிச்சயம் அவங்ககிட்ட பேசுவாங்க. இந்த இடத்துல பல பேருக்கு பல தடவை அது நடந்திருக்கு. இந்த இடத்தை அமைதியா உத்துப் பாரு. இதனுடைய மகத்துவம் உனக்குப் புரியும். இவ்வளவு அமைதியான ஒரு ஆலமரம் எங்கேயும் கிடையாது. சூட்சுமா இருக்கறவங்களுக்கு இது நிச்சயமான இடம். நீ பூஜை பண்ணு. அந்த அம்மா கூப்பிடட்டும். அந்த அம்மா கூப்பிட்டா, செத்துப் போன புருஷன் நிச்சயம் வந்து அந்த அம்மாவுக்குப் பெருந்துணையா நிற்பார். என்ன செய்யணும்ன்னு சொல்வார். அந்த அம்மா சொல்றமாதிரி கெட்டவாளை நாமளேதான்டா அழிச்சாகணும். உட்கார். உட்கார்ந்து அவங்களைப் பார்.''

வாழையிலையும், அரிசியும், வாழைக்காயும், தேங்காயும், நூல் சுற்றிய கலசமும், கற்பூரமும், நைவேத்தியமும், பூக்களும், வெற்றிலைப் பாக்கும், பழமும் அவன் கொண்டு வந்தான். ஒரு சாஸ்திரிகளை அழைத்துவந்து நீத்தார் கடன் செய்து கொடுத்தான். தரையையே பார்த்துக்கொண்டு உட்கார்ந்திருந்தான். நீத்தார் கடன் செய்து சிவசாமி எழுந்தவுடன், அம்மா பளிச்சென்று தலை நிமிர்த்தினாள். 'சரி, சரி, சரி' என்று வெட்டவெளியை நோக்கிப் பேசினாள்.

''இவங்க எதாவது தப்பாயிடப் போறாங்க, குருமூர்த்தி''

''ஆகாது, சிவசாமி. அவங்க பிரியம் வைச்சிருக்கிறவங்க மேல மனசு வைக்கிறாங்க. அதனால இறந்து போனவங்களுடைய உதவி வெகு நிச்சமாய் இவங்களுக்குக் கிடைக்கும்.''

கற்பகவல்லியின் அம்மா ஈரத் துணியோடு ஆலமரத்தைச் சுற்றி வந்தாள். நடுங்கி விழுந்து கும்பிட்டாள். ''அப்படியே செய்றேங்க'' என்று ஆலமரத்தோடு பேசினாள். பின்பு சிவசாமியையும், கற்பகவல்லியையும் பார்த்து சிரித்தாள். ''போலாமா..?''

''என்னம்மா... உங்களுக்குள்ளேயே பேசிக்கிட்டீங்க..?'' - கற்பகவல்லி அம்மாவிடம் ஆவலோடு கேட்டாள்.

''அதெல்லாம் நான் பார்த்துக்கறேன். நீங்க ஏன் இதைப் பத்தியெல்லாம் கவலைப்படறீங்க?''

''அப்பாவைப் பார்த்தியாம்மா?''

''ஆமாண்டா... அப்பா இருக்கிற மாதிரி ஒரு உணர்வு இருந்தது. கண்ணெதிரே காத்தா, கறுப்பா, புகையான்னு பார்க்கலை. அப்பா பக்கத்துல நிக்கிறாங்க. என்ன... இவ்வளவு தூரம் இங்கே? என்ன? எதுக்கு அப்படிங்கிறாமாதிரி கேட்டாங்க. நான் அழுதேன். இதுக்கெல்லாம் பாய் அழுவாங்களா? கண்ணைத் துடைச்சுக்க. எல்லாம் சரியாய்டும். நான் பார்த்துக்கறேன். நீ போ அப்படின்னாங்க.''

''நம்ம ஒண்ணுமே பண்ணவேண்டாமா?''

''கும்பகோணம்கிட்ட ஒப்பிலியப்பன் கோயில்னு ஒண்ணு உண்டு. அந்தக் கோயில்கிட்டக்க அய்யாவாடின்னு ஒரு இடம். அங்க ப்ரதியங்கரா பூஜை

பண்றாங்களாம். அங்கப் போய் கும்பிட்டுட்டுப் போகச் சொன்னாங்க. குங்குமம் வாங்கிக்கிட்டுப் போகச் சொன்னாங்க.''

''அய்யாவுக்கு நாம ஏதாவது செய்யணுமாம்மா?''

''ஆமாம், தம்பி. ஆயிரம் பொம்பளைங்களுக்கு பூசுமஞ்சள் டப்பா கொடுக்கச் சொன்னாங்க. அப்படி ஒண்ணு செய்யணும், கல்யாணம் ஆன பிறகுன்னு நினைச்சுக்கிட்டிருந்தாங்களாம். ஒரு கோயில் வாசல்ல நின்னு, ஒரு உற்சவத்தின் போது, எந்த பொம்பளை கை நீட்டினாலும் அவள் கையில ஒரு டப்பா பூசுமஞ்சள் வைக்கணும். அப்படின்னு சொன்னாங்க.''

''குருமூர்த்தி... என்னால இவங்க சொல்றதை நம்பவே முடியலையேப்பா'' - சிவசாமி ஆச்சரியமாகப் பேசினான்.

''என்னால நம்பவும் முடியலை. நம்பாம இருக்கவும் முடியலை. இந்த இடத்துல உங்க மாமியார் மாதிரி பரவசமா பல பேர் உட்கார்ந்திருக்கிறதைப் பார்த்திருக்கிறேன். ஆனால், எனக்கு அப்படி ஒரு பாக்கியம் கிடைக்கலை. ஆனால், எங்க அப்பா சொல்வார். திருவெண்காடு சாதாரண இடமில்லை. ஆயிரம் வருஷத்து இடம். ஆயிரம் வருஷமா மனுஷா இருக்கற இடம். இது ரொம்பப் பெரிய, நிச்சயமான, சூட்சுமான இடம். இங்கே வந்து சரியானபடி நடந்து, சரியானபடி பிரார்த்தனை பண்ணினா, எதுவும் நிறைவேறும். மூத்தோர்களுக்கும், உன்னுடைய குழந்தைகளுக்கும் சம்பந்தம் உண்டு. புத்திர பாக்கியத்துக்கு இங்கே வந்து வேண்டிக்கோ; புதன்கிட்ட கேளு அப்படின்னு சொன்னபோதே நேரெதிரே உன்னுடைய முன்னோர்கள் இருக்கிற இடம். உன்னுடைய முன்னோர்களுக்கு முன்னாடி நீ சாமியை நமஸ்காரம் பண்ற போது, வெகுநிச்சயமா புத்திர சம்பத்து கிடைக்கிறது. உங்க மாமியார் பிரார்த்தனை கேட்டுட்டோம். உனக்கு நல்லபடியா ஆண்குழந்தை பிறக்கணும்ன்னு வேண்டிக்கோடா...''

''ஆணா இருந்தா என்ன, பொண்ணா இருந்தா என்ன, குருமூர்த்தி?''

''சரி, ஆண் ஒண்ணு, பெண் ஒண்ணு என்று வேண்டிக்கோடா''

சிவசாமி அமைதியாக நின்றான்.

''என்ன இங்க வேண்டிக்கிட்டா நடக்குமாங்கிற யோசனையா? நடக்கிறது நடந்தே தீரும் சிவசாமி. உங்க

மாமியார் பொய்யா சொல்லப் போறாங்க? உன்கிட்ட பொய் சொல்லணும்ன்னு அவசியம் உங்க மாமியாருக்கு என்ன? அதனால நான் மறுபடியும் சொல்றேன். உங்க மாமனார் மறுபடியும் உன் மனைவி வயித்துல வந்து பிறக்கணும்ன்னு வேண்டிக்கோ. ஒரு பெண் குழந்தை வேணும்ன்னு வேண்டிக்கோ. நிச்சயம் அது நடக்கும். லவ் பண்றது, கல்யாணம் பண்ணிக்கிறதுக்கில்லேடா... குழந்தைப் பெத்துக்கிறதுக்கு. குழந்தை பெத்துக்காத, நீ கல்யாணம் பண்ணாலும் சரி, லவ் பண்ணாலும் சரி... அதுக்கு அர்த்தமே இல்லேடா... குழந்தை பிறந்து, அவனை பெரிய மனுஷனாக்கி நிறுத்தற போதுதாண்டா நீ பண்ண கல்யாணம், பண்ண லவ் எல்லாத்துக்கும் அர்த்தம் இருக்கு. போ... போய் சாமி சன்னதில கை கூப்பி நின்னு, வேதாரண்யரே... எனக்கு புத்திர பாக்கியம் கொடுன்னு வேண்டிக்கோ. உங்க மாமியாருக்கு கண் முன்னாடி அவங்க வீட்டுக்காரர் வந்து நின்னா மாதிரி, உனக்கு சுவாமி ஏதோ ஒரு ரூபத்துல கருணை செய்வார். போயிட்டு வா.''

புருஷனும், மனைவியும் மறுபடியும் போய் கருவறை சன்னதியில் மனம் நடுங்க நின்றார்கள். எங்களைத் தொடர்ந்து வாழ வைக்க வேண்டும் என்று கைகூப்பி கேட்டுக் கொண்டார்கள். கற்பகவல்லி விசும்பத் தொடங்கினாள். சிவசாமிக்கும் கண்ணில் நீர் திரண்டது. அந்த அய்யாவோட நான் பேசிட்டிருந்தவரை நல்லா பழக்கமில்லை. ஆனால், பழகின வரை, பேசின வரை அந்த அய்யா அற்புதமான ஆள். அவரே எனக்கு வந்து புள்ளையா பிறக்கணும். வேதாரண்யரே, உன்னைக் கைகூப்பிக் கேட்டுக்கறேன். எங்க மாமனாரே எனக்குப் பிள்ளையா வரணும். நான் அவரை சீராட்டணும் என்று அவன் மனமுருக வேண்டிக் கொண்டான். எந்த பதிலும் எதிரிலிருந்து வரவில்லை. புருஷனும், மனைவியும் வெளியில் வந்தார்கள்.

''அய்யாவாடிக்கு எப்படி போகணும்?''

''கும்பகோணம் போனா வழி சொல்லுவார்கள். போ... போயிட்டு வா'' என்று குருமூர்த்தி விடை கொடுத்தான். நிறைய பிரசாதங்கள் கொடுத்தான். வழிப் பயணத்துக்கு பிரசாதங்கள் உதவியாக இருந்தன. குடந்தை போய்ச் சேர்ந்த போது இருட்டி விட்டது. அய்யாவாடியைத் தேடிக்கொண்டு போகும்போது, இன்னும் இருட்டு

அதிகரித்தது. கோயில் புதிய கோயில்தான். ஆனால் இடம் மிகப் பழமையான இடம். காலம், காலமாய் மனிதர்கள் வாழ்ந்து, மனிதர்கள் மறைந்து வந்த இடம். செழிப்பான கிராமத்தில் ப்ரதியங்கரா தேவி கோயில் சிம்ம முகமாய், உக்கிரமாய், சரஸ்வதியும் இலட்சுமியும் அருகே இருக்க, சினத்தோடு பதினொரு அடி உயரத்துக்கு பிரமிக்கத்தக்க மண் சிலை தேவி கொலுவிருந்தாள். உள்ளே அவர்களை வரவேற்றார்கள். முன்னால் உட்கார வைத்தார்கள். நிதானமாய் அர்ச்சனை செய்தார்கள். கற்பூர ஆரத்தி காட்டினார்கள். ஒரு கை நிறைய குங்குமத்தை எடுத்து, கற்பகவல்லியின் கையில் கொட்டினார்கள். சிவசாமிக்கு இட்டுவிட்டார்கள். குருக்கள் பின்பு கற்பகவல்லியின் அம்மாவைப் பார்த்தார். அம்மாவின் கண்களிலிருந்து நீர் வழிந்து கொண்டிருந்தது.

''எதுக்கு அழணும் அம்மா? எதுக்கு அழணும்? இவ உள்ள இருக்கா. உள்ள இருக்கிறவ உங்க கூடவே இருக்கா. உங்க கூடவே தேவி இருக்கிறபோது, நீங்க அழ வேண்டிய அவசியமே இல்லை. எனக்கு ஏன் இத்தனை கஷ்டம் வந்ததுன்னு கேட்கிறேளா..? எனக்கு ஏன் இப்படி ஒரு துன்பம் வந்ததுன்னு கேட்கிறேளா..? அது பூர்வ ஜன்மத்து வினை. ஆனால், இந்தக் கெட்டவாளை அழிக்கிறதுக்கு ஏதாவது ஒரு காரணம் வேணும்ல. அந்தக் காரணமா நீங்க அமைஞ்சிட்டீங்க. கவலைப்படாதீங்க. நீங்க தினம் பூஜை பண்ணினா போதும். அந்தப் பக்கம் மெல்ல, மெல்ல தணிய ஆரம்பிக்கும். நான் உள்ளே படுத்து தூங்கிக்கிட்டிருந்தேன். தட்டி எழுப்பினாள். போய் கற்பூரத் தட்டை எடுத்துக்கோ. முக்கியமானவங்க வராங்கன்னு சொன்னா. அதனால எழுந்து வந்து உட்கார்ந்திட்டிருக்கேன். இல்லேன்னா, சாயங்கால வேளைகள்ல என் பசங்கதான் பார்த்துக்கு வாங்க'' என்று பிரியமாய் பேசினார்.

''புருஷன் இல்லாத என்னை, தலைமுடியைப் பிடிச்சு கேவலப்படுத்தினாங்கய்யா. எத்தனை வயசு? இத்தனை வயசுக்கப்புறம் ஒரு ஆம்பளை தொட்டு என்னை அசிங்கப்படுத்தணுமா? எனக்குத் தாங்கலைய்யா.'' - அம்மா தொடர்ந்து கண்ணீர் விட்டாள்.

''வாங்க... குளக்கரையில வந்து உட்காருங்க.'' அவர் அழைத்துப் போனார்.

இருட்டில் அந்த குளக்கரை வினோதமாக இருந்தது. ஒரே மரத்திலிருந்து ஐந்து விதமான இலைகள் தரையை மறைத்துக்கொண்டிருந்தன. படிகளில்லாத குளம். சுற்றிப் படர்ந்திருந்த செடி, கொடிகளும், மேலே தெளிந்த ஆகாயமும், கொஞ்சம் நட்சத்திரங்களும் அந்த இடம் சூட்சுமமான இடம் என்பதை உள்ளுக்குள் உணர்த்திக் கொண்டிருந்தன. அம்மாவை கிழக்கு முகமாக உட்கார வைத்து, எதிரே நின்றபடி, ப்ரதியங்கரா மந்திரம் எப்படி சொல்ல வேண்டுமென்று சொல்லிக் காட்டினார். சிவசாமியையும், கற்பகவல்லியையும் விலகிப் போகும்படி சொல்லிவிட்டார். அவர் சொன்னது காதில் விழவில்லை. ஆனால் சொல்லிக் கொடுக்கிறார் என்பது தெளிவாகத் தெரிந்தது.

''இங்கே உட்கார்ந்து ஆயிரத்தெட்டு தடவை ஜபம் செய்துட்டுப் போங்க. வேற எங்கேயும் இராத் தங்காத நேரே வீட்டுக்குப் போய் இறங்குங்க. கூடவே அம்மாவும் வருவாள். உங்க வீட்டைப் பாதுகாப்பாள். இது சத்தியம்.''

அம்மா மந்திரம் கற்றுக்கொண்டாள். குரு வணக்கம் கற்றுக் கொண்டாள். மெல்லி சொல்ல ஆரம்பித்தாள். கல் போல கிழக்கு பார்த்து அமர்ந்திருந்தாள். நீரிலிருந்து ஒரு மீன் துள்ளி, துள்ளி அவளைப் பார்த்துவிட்டு போயிற்று.

''சிவசாமி, உனக்கொரு பையன், ஒரு பொண்ணு. ரெண்டு பேரும் உனக்குத் தெரிஞ்சவளாகவே வந்து பிறப்பார்கள். நீ ரொம்ப நல்லா இருப்பே, ஐயா... அடிக்கடி கோயிலுக்கு வந்துட்டு போ. யார் துக்கப்பட்டாலும் இந்தக் கோயிலைப் பத்தி சொல்லு. யார் மத்தவங்களால நசுக்கப்பட்டு, வேதனைப்பட்டாலும் அம்மாகிட்ட வந்து ஒரு குரல் அழச் சொல்லு. கண் மூடி நிக்கச் சொல்லு. நான் நல்லவன். நான் செய்தது நல்லது. எனக்குக் கெடுதல் பண்றானேன்னு ஒரு தடவை; வந்து அம்மாகிட்ட பேசச் சொல்லு. அப்புறம் நடக்கிற காரியமே வேற. நல்லவாளை அழிக்கிறதுக்கு அம்மா அனுமதிக்கவே மாட்டா. இது நான் சொன்னா நல்லா இருக்காது. நீ தெரிஞ்சிகிட்டு, நீ ஆயிரம், இலட்சம் பேர்கிட்ட சொல்லி, இந்த இடம் ஓகோன்னு வரும்படியா பண்ணப்போறீங்க. அதுவும் உனக்குத் தெரியாது. சாப்பிட்டுட்டுப் போறீங்களா... சாப்பிடறதுக்கு ஏற்பாடு பண்ணட்டுமா?'' அன்புடன் கேட்டார்.

''இல்லைங்க அய்யா, அம்மா எழுந்ததும் நாங்க கிளம்பிடறோம். நீங்க சொன்னா மாதிரி நேரே மெட்ராசுக்குப் போய் சேர்ந்துடறோம். நாலு மணி நேரத்துல போய் சேர்ந்துடலாம்ன்னு நினைக்கறோம். கையில திருவெண்காடு தயிர் சாதம் இருக்கு. அது போதுங்கய்யா.''

''போதும்ன்னா சரி.'' - அவர் விடை கொடுத்தார்.

அவர் எழுந்திருந்தாள். கோயிலை வலம் வந்தாள். குருக்களை நமஸ்கரித்தாள். வண்டி ஏறினாள். வண்டி சென்னை வந்து சேர்ந்தது.

''சிவசாமி அய்யா... இங்கே வா... ஆயிரம் டப்பா முதல்ல கொடுக்கறதுக்கு ஏற்பாடு பண்ணு. அதுக்குண்டான வரைக்கும் மஞ்சள் அரைச்சுக்க. அதுக்கப்புறம் பூசுமஞ்சள் வியாபாரம் வேணாம். உனக்கு என்ன தோணுதோ, அந்த வியாபாரம் பண்ணு.''

ஒரு நாளைக்கு ஆயிரெத்தெட்டு சொன்னால் போதும் என்றுதான் சொல்லப்பட்டது. ஆனால், அம்மா இடம் விட்டு அசையாமல் உணவிற்கும், உறக்கத்திற்கும், பின்பக்கம் போவதற்கும் தவிர, மற்ற நேரமெல்லாம் ப்ரதியங்கரா மந்திரம் சொன்னாள்.

ஒரு மாதம் எதிர்ப்பக்கம் ஆட்டம் தொடர்ந்துதான் இருந்தது. சின்ன மாற்றம் கூட நிகழாமல் இருந்தது. துறைமுகத்திலிருந்து நாற்பது ஆட்களை ஏற்றிக்கொண்டு வெளியே வந்த லாரி, பிரேக் பிடிக்காமல் திருப்பத்தில் வந்த காரின் மீது நச்சென்று இடித்து அதை மல்லாக்கத் தள்ளியது. இடித்த காரின் சொந்தக்காரர் ஆளுங்கட்சிக்கு எதிராக இருக்கும் கட்சியின் முக்கிய தலைவர். மல்லாக்க விழுந்த காரிலிருந்து வெளியே வந்து, பயந்து, திக்கு நாலும் பார்த்து, பயத்தில் அலறி, கோபப்பட்டு, கையில் கிடைத்த நாலு பேரை அடித்து வேறு ஒரு காரில் ஏறி தன் வீட்டுக்குப் போய், ''என்னைக் கொல்லப் பார்க்கறாங்களா... என் னைக் கொல்லப் பார்ககறாங்களா... இங்க பாருடா... எப்படி அடிச்சிருக்கானுங்க, பாருடா...'' என்று ரத்தக் காயங்களைக் காட்ட, வண்ணாரப்பேட்டையில் ஒரு சந்து முனையில் கிளம்பி, உருட்டுக் கட்டையும், அரிவாளுமாய் ஊர்வலம் வந்து, அந்த லாரியை சூழ்ந்துகொண்டார்கள். லாரியில் வந்த கணேசன் ஆட்களை தாக்கினார்கள். 'யார் அது? யார் அது' என்று விசாரித்தார்கள்.

கணேசனுடைய லாரி என்றதும், 'அவன் ஆளுங் கட்சிக்கு வால் பிடிக்கிற நாய். அவன் பிளான் பண்ணி நம்ம காரை இடிச்சிருக்கான்' என்று சொல்லி, அதே இடத்தில் லாரியைத் தீக்கிரையாக்கினார்கள். உருட்டுக் கட்டையோடு கணேசனுடைய அலுவலகத்தை நோக்கி ஓடினார்கள். கணேசனைத் தேடினார்கள். கணேசன் இல்லையென்றதும், சாமிப்படம் முதற்கொண்டு குப்பைத் தொட்டி வரை அடித்து உதைத்தார்கள். அடிவாங்கிய தொழிலாளர்கள் ஒன்று சேர்ந்தார்கள்.

''அவன் பணக்காரன். சண்டைக்கு அலையறவன். இவங்க ரெண்டு பேரும் சண்டை போட்டுக்கிட்டா, நம்ம தலையில லொட்டு, லொட்டுன்னு அடிக்கிறாங்க. கேட்பாரே இல்லையா? மல்லாக்க படுத்திருக்கிற காருக்கு நெருப்பு வை, போகட்டும்'' என்று மல்லாக்கக் கிடந்த காருக்கு நெருப்பு வைத்தார்கள்.

''அண்ணா, அண்ணா... உங்க காரை எரிச்சிட்டாங் கண்ணா'' - எதிர்கட்சித் தலைவரை நோக்கி செய்தி போனது.

''யாருடா அது?''

''கணேசன் ஆளுங்கண்ணா...''

''கணேசன் எங்கிருந்தாலும் பார்த்து, வெட்டுங்கடா...'' - அவர் உத்தரவிட்டார்.

எட்டு திசையும் ஜனங்கள் ஓடினார்கள். வண்ணாரப் பேட்டை முழுவதும் கலவரமாயிற்று. எதிரே கண்ட கடைகளை அடித்து உடைத்தார்கள். தெருவில் நடந்து போனவர்களின் முகத்தில் அறைந்தார்கள். பள்ளிக்கூடத் துக்குப் போன பெண் குழந்தைகளை முத்தம் கொடுத் தார்கள். பஸ்ஸில் ஏறி பெண்களைக் கிள்ளினார்கள். எதிர்த்துக் கேட்ட கண்டக்டரின் பையைப் பிடுங்கிக் கொண்டார்கள்.

''யாருடா நீங்க?''

''நாங்களெல்லாம் கணேசன் ஆளுங்க.'' என்று எதிர்கட்சி ஆட்கள் கதைகட்டி விட்டார்கள்.

தாங்கள் என்ன செய்தோம், எப்படி செய்தோம், எங்கு செய்தோம் என்று எதிர்கட்சித் தலைவருக்கு சொன்னார் கள். ''நல்லா இருக்குடா, நீங்க பண்றது? அப்படியே பண்ணுங்க. எல்லா கடையையும் அடிச்சிட்டு, கணேசன் மேல கையை வைச்சா, கொன்னுடுவேன்னு சொல்லுங்க''

வண்ணாரப்பேட்டை முழுவதும் கடை கடையாய், வீடு வீடாய், தெருத் தெருவாய் ரகளை நடந்தது. ரகளை நடந்த இடங்களெல்லாம் கணேசன் பெயர் சொல்லப்பட்டது. மிகுப் பெரிய போலீஸ் படை குவிக்கப்பட்டது.

''எங்களுக்கு ஏது ஆளு? நாங்க ஏன் அடிக்கிறோம்? பைத்தியமா எங்களுக்கு, கடையை உடைக்கிறதுக்கு?'' - கணேசன் கத்தினான்.

துறைமுகத்திற்கு எதிரே உள்ள பேங்க்கில் ரகளை நடந்ததை, ஒரு தனி நபர் ஃப்ளாஷ் காமிராவால் ஃபோட்டோ எடுத்து அந்த ஃபோட்டாவினை ஒரு தினப்பத்திரிகையினிடம் கொடுக்க, அன்று மாலையே கலவரம் நடந்த இடத்தில் காரை எரிக்கின்ற ஃபோட்டோ தெள்ளத் தெளிவாக வந்திருந்தது. அவர்கள் கணேசனின் லாரியில் வந்த ஆட்கள் என்று அடையாளம் கண்டு கொள்ளப்பட்டது. கணேசன் இது தெரிந்து, முன்ஜாமீன் வாங்கினான்.

''அவன்கள் யாரோ, நான் யாரோ... எங்கிட்ட சம்பளம் வாங்கிறவங்களை நானா வந்து அனுப்புனேன்னு அர்த்தம். எங்களுக்கும் அவங்களுக்கும் என்ன சம்பந்தம்? அந்த மாதிரி ஆயிரம் பேர் நான் கூப்பிட்டா வந்து வேலை செஞ்சுட்டுப் போவாங்க. இவங்கள்லாம் என் அடியாள்ன்னா விளையாட்டால்ல இருக்கு.'' என்ற கணேசன் கத்தினான். கூடவே அவன் அப்பாவும் சேர்ந்துகொண்டார்.

''ஊரை விட்டுப் போயிடுடா... ஊரை விட்டுப் போயிடுடா'' என்று அவனை தொந்தரவு செய்தார். அவன் போகமாட்டேன் என்று பிடிவாதம் பிடித்தான். மறுநாள் காலை கோர்ட்டுக்கு வந்து கையெழுத்துப் போடுவதற்காக கணேசன் ஆட்கள் புடை சூழ, கோர்ட்டுக்குப் போனான். சென்னையில்தான் இருக்கிறேன் என்று சொல்லி, கையெழுத்து போட்டான். அவன் பின்னே பதினெட்டு, பத்தொன்பது பேர் நடந்துவந்தார்கள். திடீரென்று ஒரு ஆள் வந்தான்

''உங்க வீட்டுக்குள்ளே புகுந்து உங்க அப்பாவை அடிக்கிறாங்க. போங்க... சீக்கிரம் போங்க'' என்று சொல்ல, கணேசன் காரில் ஏறினான். அவன் காருக்குள் மூன்று பேர்

இருந்தார்கள். கார் பறந்தது. பறந்த காரை குறுகிய ஒரு தெருவில் வழிமறித்து நிறுத்தினார்கள். சுற்றி சூழ்ந்துகொண்டார்கள். பத்தொன்பது பேரிலிருந்து பிரிந்த நாலு பேரை, நாற்பது பேர்கள் சூழ்ந்துகொண்டு கண்மூடித்தனமாகத் தாக்கினார்கள். தாக்கியவர்கள் எதிர்க்கட்சித் தலைவரின் ஆட்கள். கணேசனைத் தாக்கிய கையோடு, அந்தக் கும்பல் கணேசன் வீட்டுக்குள் நுழைந்தது. கணேசன் அப்பாவையும் அடித்தது. கணேசன் வீட்டுக்குள் இருந்த எல்லா பொருட்களையும் அடித்து நொறுக்கியது. வீட்டுக்குள் இருந்த முப்பது மூட்டை மஞ்சளையும் வெறிபிடித்தது போல் கொண்டு வந்து வெளியே எறிந்தது. பிறகு நாற்காலி, டி.வி., டேப் ரிக்கார்டர், டேபிள், படங்கள், கட்டில் என எல்லாவற்றையும் வெளியே வீசினார்கள். லஸ்தர் உடைக்கப்பட்டு தரையில் சிதறப்பட்டது. தெருவில் கிடந்த மஞ்சளை, கோணியை அறுத்து பல பெண்கள் மடியில் கட்டிக் கொண்டு போனார்கள். முறம், முறமாய் வாரிக்கொண்டு போனார்கள்.

கணேசனைக் குத்திக் கொன்றுவிட்டார்களாம். கணேசன் அப்பாவின் முகத்தில் வெந்நீர் ஊற்றிவிட்டார்களாம். இரண்டு கண்களும் கொப்பளித்து பழுதாகிவிட்டதாம். ஆண் குறியை எட்டி உதைத்ததால், எழுந்து நிற்க முடியவில்லையாம். முதுகு நிமிர்த்த முடியவில்லையாம். வயிற்றில் கடுமையான வலி. வீட்டில் உள்ள பெண்கள் எவரையும் தொடவில்லை..ஆனால் பல பொருட்கள் பாழாகிவிட்டன என்று சொன்னார்கள்.

கற்பகவல்லியும், சிவசாமியும் கணேசனுடைய வீட்டிற்குத் துக்கம் கேட்கப் போனார்கள். வாசல் முழுவதும் மஞ்சள் சாக்குகளும், தரை முழுவதும் மஞ்சள் கலரும், வீடு முழுவதும் மஞ்சள் நெடியும் வீசிக் கொண்டிருந்தது. அவர்களைப் பார்த்துவிட்டு, கணேசன் வீட்டுப் பெண்கள் வாய்விட்டு அலறினார்கள். ''தப்பாப் போயிடுச்சே... தப்பாப் போயிடுச்சே... எல்லா நடத்தையும் தப்பாப் போயிடுச்சே... எப்படி சொன்னாலும் கேட்காத போயிடுச்சே...'' என்று கத்தினார்கள். கற்பகவல்லி சமாதானப்படுத்தினாள்.

''திருவெண்காட்டுல ஒரு பெரிய ஆலமரம் இருக்கு. பதினைஞ்சு நாள் கழிச்சு மெல்ல உங்க அம்மாவைக்

கூட்டிக்கிட்டுப் போய், உங்க அண்ணனுக்காக, உங்க அண்ணன் வொய்ஃபையும் வைச்சு ஒரு சடங்கு பண்ணி டுங்க. அந்த இடத்துல போய் சடங்கு பண்ணா, கணேசன் அமைதியாயிடுவான். நாங்க போய் அப்பாவுக்குப் பண்ணிட்டு வந்தோம். ரொம்ப சந்தோஷமா இருந்தது. அப்பா வந்து மறுபடியும் பிறப்பார்ன்னு தோணுது.'' - காதோரம் கிசுகிசுத்துவிட்டு வந்தாள்.

''எனக்கு மஞ்சள் வியாபாரத்தை விடறதுக்கு இஷ்டம் இல்லை. திருவொற்றியூரிலிருந்து மிஷினைக் கழட்டிக் கின்னு நான் தாம்பரம் பக்கம் போகப் போறேன். அங்கே போய் மிஷின் போட்டு, மஞ்சள் வாங்கி மஞ்சளோட குங்குமமும் செய்யப் போறேன். பவுடர் மட்டுமில்லேம்மா, பேஸ்ட்டும் பண்ணலாம்ன்னு நினைச்சு, முகப் பேஸ்ட் மட்டுமில்லாம, பல்பொடி உண்டான விஷயங்களும், தலைக்குத் தேய்க்கிற எண்ணெய்யும் செய்யலாம்ன்னு இருக்கேன். இனிமேதான் நல்லா வரணும். தாம்பரம் பக்கம் போயிடலாமா?'' - அவன் மாமியாரைக் கேட்டான்.

கற்பகவல்லியின் அம்மா சரியென்று சொன்னாள். அவர்கள் இடம் பெயர்ந்தார்கள். கற்பகவல்லியின் அப்பா வின் நினைவாக 'காசி பூசுமஞ்சள்' என்று புதுப் பெயர் வைத்தார்கள்.

'கங்கையின் புனிதம், காசியின் இனிமை கலந்தது எங்கள் மஞ்சளின் மகிமை' - புதுசாய் மாற்றி எழுதினார் கள். பெரிய போர்டு மாட்டினார்கள். அம்மா, அப்பா இறந்த ஒரு வருடம் கழித்து ப்ரதியங்கரா பொம்மையை மணலில் கரைத்து, மஞ்சள் மீது தெளித்து, சுண்ணாம்பு போட்டு உருட்டினாள். குங்குமம் தயாரிக்க உலர வைத்தாள். எல்லா மஞ்சளையும் சத்தியத்துக்குக் கட்டுப்பட்ட ப்ரதியங்கராவின் சக்தி கலந்திருந்தது. யார் உண்மையாக வணங்கி, நியாயம் கேட்டு வருத்தப் படுகிறார்களோ, அவர்களுக்கெல்லாம் இனிது செய்வேன் என்று செவ்வண்ணமாய் காட்சி கொடுத்துக் கொண்டிருந்தது.

பாலகுமாரன்



பூசமஞ்சள்